# எந்தன் உயிர்க் காதலியே

ரமணிசந்திரன்



# எந்தன் உயிர்க் காதலியே

ரமணிசந்திரன்

# அத்தியாயம் -1

நித்திலனின் செல் மெல்லிதாக வீணை வாசித்தது, அது போல "ரிங்டோன்" ஒன்றை. அந்த செல்ஃபோனில் அவன் அமைத்திருந்தான், அவனது தனிப்பட்ட செல் அது, குடும்பத்தினருக்கு மட்டுமே. அந்த எண் தெரியும், அவர்கள் மட்டுமே அதைப் பயன்படுத்துவார்கள்,

குடும்பம் என்றால். மகிழ்ச்சி ததும்புவதாக இருக்க வேண்டும்,! குடும்பத்தவரோடு பேசும்போது. வீணாகானம் கேட்பது போல. மனதுக்கு இனிமையாக இருக்க வேண்டும்!

இப்படியெல்லாம் யோசித்து. அந்த "ரிங்டோனை" வைத்தான்,

ஆனால் வரவர. இனிமைக்கு நேர் எதிரான செய்திகள்தான். அந்த செல்ஃபோன் மூலமாக. அவனது காதுகளுக்கு வந்து கொண்டிருந்தன,

இன்றும். எங்கே போய். என்ன பண்ணித் தொலைக்க வேண்டியிருக்குமோ. எவன் காலைப் பிடிக்க வேண்டியிருக்குமோ என்ற சலிப்பில். அவனுக்கு செல்லை எடுக்கவே பிடிக்கவில்லை,

அழைப்பது. தாயார், தாத்தாவின் மறைவுக்குப் பிறகு. அவனுக்கு வேலை அதிகம் என்று. பெற்ற  தாயாருக்குக் கூடத் தெரியவில்லை என்றால். அவன் எங்கே போய் முட்டிக் கொள்வது?

செல்லை எடுக்கவா. வேண்டாமா என்று. அவன் யோசித்து முடிக்குமுன். வீணை ஒலி நின்று போயிற்று,

பாவம்,. அம்மாவும்தான். வேறு யாரிடம் உதவி கேட்க முடியும் என்று கழிவிரக்கத்துடன் எண்ணியவாறு செல்லை எடுக்கக் கையை நீட்டினால். அதற்குள். மகாலட்சுமி மகனுக்கு மெஸேஜ் அனுப்பிவிட்டாள்,

"உடனே கிளம்பி வீட்டுக்கு வரவும்,"

"வீட்டுக்கு" என்றால். வெளியே எங்கேயும் போய். அவமானப்படத் தேவையில்லை,!

ஆனால். வீட்டிலேயே நிலைமை என்னவாக இருக்கிறதோ என்று தோன்றவும். ஒரு விதிர்ப்பு உடலில் ஓட. சட்டென்று நித்திலன்

எழுந்துவிட்டான்,

கொஞ்ச காலமாகவே. இது ஒரு பயம்,! எல்லாம். இந்தத் தாத்தாவால் வந்தது,

“சும்மாவே ஆடும் பேய். கொட்டுக் கண்டால் விடுமா” என்பதுபோல. அவர் செய்து வைத்த வேலையால். வீட்டில் எல்லோருக்கும் தூக்கம் போயிற்று,!

அவருடைய அருமருந்தன்ன மூத்த பேரன். அந்த அளவுக்கு வீட்டில் எல்லோரையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தான், இன்று என்ன பண்ணி வைத்திருக்கிறானோ?,!

உடனே வருவதாக செல்லில் தகவல் அனுப்பிவிட்டு. நிர்வாகியை அழைத்து. அலுவலகத்து வேலையில். மேற்கொண்டு அதிகப்படியாக. அவர் என்னென்ன கவனிக்க  வேண்டும் என்பதைக் கூறிப் பொறுப்பை அவரிடம் கொடுத்துவிட்டு. நித்திலன் வீட்டுக்குக் கிளம்பிப் போனான்,

சிக்னல்களில் நிற்க நேரும் போதெல்லாம் தவித்து. கண்டபடி குறுக்கே வந்து வேகத்தைக் குறைக்க வைத்தவர்களை சபித்து. இயன்றவரை வேகமாக வண்டியை  ஓட்டி வீட்டுக்கு வந்து சேர்ந்து காரை உள்ளே கொணர்ந்து நிறுத்தினான், நிறுத்தும்போதே. அவனுக்குச் சிறு குழப்பம்,!

கார்க் கதவைத் திறந்து இறங்கும்போதே. குழப்பம் தீர்ந்தும் போயிற்று,

சற்றுத் தள்ளி. கிளம்புவதற்கு வசதியாக நிறுத்தப்பட்டிருந்தது. பெரிய அத்தையின் பந்தாக் கார்,! சும்மா.  இங்கே யாருக்கும் உடம்பு சரியில்லை என்றெல்லாம். இந்தக் காரை. அத்தை வெளியே எடுத்து விட மாட்டாள்,! விஷயம் வேறே,!

அடுத்து நின்றது. சின்ன அத்தையின் பழைய கார், வசதிதான், ஆனால். பிறநத வீட்டுக்கு வரும்போது. ஒன்றுமே இல்லாதவள் போலத்தாள் வருவாள், வந்து. முடிந்தவரை மூட்டை கட்டிக்கொண்டும் போவாள்,

இரண்டு பெரும் வந்திருக்கிறார்கள் என்றால். அம்மா பழைய கூத்தை. மறுபடி தொடங்கி விட்டார்கள்,! எத்தனை தரம் பட்டாலும்.

விட மாட்டார்களா? கொஞ்ச காலமாக நிம்மதி என்று பார்த்தால். அதற்குள் தொடங்கிவிட்டார்களே,!

எரிச்சலுடன் வீட்டினுள் செல்லும்போதே. சின்னத்தையுடைய இளைய மகள் கட்டியம் கூறி. அவனது வரவை அறிவித்தாள், "கல்யாண மாப்பிள்ளை நித்தியத்தான் வந்துவிட்டார்,! அத்தான். சீக்கிரமாகப் போய் முகத்தைக் கழுவிக்கொண்டு. முடிந்தால் குளித்துவிட்டே கிளம்புங்கள், சீக்கிரம்,! நாங்கள் எல்லாரும் இப்போதே ரெடி,!" என்று அவனை விரட்டி. அவனது ஊகத்தை உறுதிப் படுத்தவும் செய்தாள்,

"இருடி. அவன் ஒரு வாய்க் காஃபி குடித்துவிட்டுப் போகட்டும்," என்று கையில் கப்புடன் வந்த பெரியத்தை சாரதா. காஃபியை அண்ணன் மகனிடம் கொடுத்துவிட்டு. "எனக்கு ரொம்ப சந்தோஷம். நித்திம்மா," என்றாள் மகிழ்ச்சியோடு,

"அவசரப்பட்டு சந்தோஷப்படாதீர்கள். அத்தை,! வெடி எத்தனை மணிக்கு. எந்த நிமிஷத்தில் வெடிக்குமோ? பொறுத்திருந்து பார்ப்போம்," என்றான் நித்திலன்,

"என்னத்தைப் பொறுத்திருந்து பார்ப்பது? அதது உரிய காலத்தில் நடந்தால் தானே. நன்றாக இருக்கும்? அதற்காகத்தான்.. இன்றைக்கே முடித்துவிட வேண்டும் என்று. எல்லோரையும் வரவழைத்தேன் " என்று. தன் தர்பார் நாற்காலியில் அமர்ந்து. ஈசுவரன் அறிவித்தார், "மசமசவென்று நிற்காமல். எல்லோரும் சீக்கிரமாகக் கிளம்புங்கள், சாரதா. நாம் எத்தனை மணிக்கு அங்கே இருக்க வேண்டும்? சொன்னால். சொன்ன நேரத்துக்கு டாண் என்று போய் நிற்க வேண்டும், அதை விட்டு லேட்டாகப் போவது என்றால் எனக்குப் பிடிக்காது, இப்போதே சொல்லிவிட்டேன்,! "என்று அதிகாரக் குரலில் கூறினார் ஈசுவரன்,

அண்ணன் அருகே வந்து உட்கார்ந்துகொண்டு. "ஹூம்,! அண்ணா. நீ அவசரமாகக் கூப்பிடவும். நான் என்னவோ எண்ணி வந்தேன், இங்கே என்னடா என்றால் போகிறது. போ,! ஆனால். எனக்கும் என் பெண்களுக்கும் நல்ல காஞ்சீபுரம் பட்டுகள்தான் வாங்க வேண்டும், சாண் அகலக் கரையாவது இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள், அதிலேயும் குறை வைத்தால். நான் தாங்க மாட்டேன்" என்றாள். நித்திலனுடைய சின்ன அத்தை,

“உனக்கு எத்தனை தரம் சொன்னாலும் ஏறாதா? ஒன்றுக்குள் ஒன்றாக மணமுடிப்பது நல்லதே இல்லை, ஆராய்ச்சி பண்ணிக் கண்டு பிடித்திருக்கிறார்கள் என்று சொன்னால் புரியாதா? சும்மாச் சும்மா. இப்படிப் புலம்பாதே. சுந்தரி, பிள்ளைகள் மனம் கெட்டுவிடும், வனிதா முகத்தைப் பார், “ என்று தணிந்த குரலில் தங்கையைக் கண்டித்தாள். பெரிய அத்தை ,

தமக்கையை உள்ளடக்கிய ஆத்திரத்துடன் பார்த்தாள் சுந்தரி,

“உனக்கென்ன. அத்தான் நிறைய சம்பாதிக்கிறார், நிறையச் செலவு பண்ணி. நல்ல மாப்பிள்ளைக்குப் பெண்ணைக் கல்யாணமும் செய்து கொடுத்துவிட்டாய், நான் அப்படியா? அண்ணன் வீடு, ஏறத்தாழ. என்னால் முடிந்ததைச் செய்தாலும். அண்ணி பெரிதாகக் குற்றம் குறை என்று கிளப்பாமல். அம்மா பார்த்துக் கொள்வார்கள், வனியும் பாட்டி வீடு என்று உரிமையோடு இருப்பாள் என்று ஆசைப்பட்டேன், அந்தக் கழுதைக்குக் கொடுத்து வைக்கவில்லையே,! “ என்று அவளது புலம்பல் மெல்லச் சத்தம் உயரவும். ஹாலில் இருந்த கூட்டம் சத்தமின்றி விலகிப் போனது,

எல்லாரையும் முந்திக்கொண்டு. “என் சட்டையில் கசங்கல் இருக்கிற மாதிரித் தெரிகிறது ,மாற்றப் போகிறேன்,” என்று. முதலில் காணாமல் போனவர் ஈசுவரன்,

தலையில் அடித்துக்கொண்டு. வனிதாவும். அவளுடைய தங்கையும் உள்ளே நகர. சித்தி மகன் குரு. “காரை எடுப்பதற்கு வசதியாகத் திருப்பி நிறுத்திவிட்டு வருகிறேன்,” என்று வாயில் புறமாக நழுவினான்,

“இப்படியே புலம்பிக்கொண்டே இரு,. அப்புறம். உன் பேச்சை நீ மட்டுமே கேட்கிற நிலைமையாகி விடும், நித்திலா. காஃபி குடித்துவிட்டாயானால். கப்பைத் தந்துவிட்டு. அம்மா அறைக்குப் போ, மகா உன்னை வரச் சொன்னாள், “ என்று. காலியான கப்புக்காகக் கையை நீட்டினாள் சாரதா,

“இருக்கட்டும் அத்தை, நானே கொண்டுபோய் வைத்துவிடுகிறேன், நீங்கள் சின்னத்தையிடம் பேசிக் கொண்டிருங்கள்,” என்று பெரியத்தையை ஒரு பார்வை பார்த்துவிட்டு. அவளது கண்ணசைவில் பதிலையும்

பெற்றுக்கொண்டு போனான்,

பேசாத மொழியால் அண்ணன் மகனுக்குக் கொடுத்த வாக்கின்படி. தங்கையைச் சமாதானம் செய்யத் தொடங்கினாள் அவள்,

நித்திலன் உள்ளே சென்றால். தாயார். வீட்டின் மறைவான அலமாரி லாக்கரில் இருந்து நகைகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்,

“என்னம்மா இது? இந்த டிராமா இன்னமுமா உங்களுக்கு அலுத்துப் போகவில்லை? திரும்பத் திரும்ப ரோதனை செய்கிறீர்களே,!” என்று. சலிப்பும் கோபமுமாகத் தாயிடம் எரிச்சலைக் காட்டினான். அவன்,

“தொடக்கத்திலேயே. அச்சானியமாக எதையாவது சொல்லாதேடா,! அதற்குத்தான். இந்த வீட்டில். எத்தனையோ பெருச்சாளிகள் உண்டே,! நீயும் எதற்கு. அந்தக் கூட்டத்தோடு சேர்கிறாய்?” என்று. சற்று அதட்டலாகத் தன் மகனிடம் அதிகாரம் காட்ட முயன்றாள் மகாலட்சுமி,

“ஆமாம். என்னை அதட்டுங்கள்,! வேறு யாரிடம் உங்கள் கோபம் செல்லுபடி ஆகும்?” என்று தோளைக் குலுக்கினான் மகன்,

ஒரு கணம் மகனை ஊடுருவிப் பார்த்துவிட்டு. இறுக்கம் தளர்ந்தாள் தாய்,

“உனக்குப் புரிகிறதுதானே? என்னால். இதற்கு மேல் முடியாது. கண்ணா,! முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக என் தனிமை,! அது உன் மனைவியால்தான் தீர வேண்டும், இனி. எனக்கு ஒரு துணை கட்டாயம் வேண்டும்,! அதுவும். உன் மனைவியால் மட்டும்தான். எனக்குக் கிடைக்கும்,! அதற்காகத்தான் இந்த ஏற்பாடு,!” என்று சொல்லி முறுவலித்தாள் தாயார்,

அன்னை சிரிக்கும்போது. முகம் இருபது வயது இளமையாகிவிடும்,! அடிக்கடி அம்மாவைச் சிரிக்க வைக்க வேண்டும் என்று அவன் எண்ணுவதுதான், ஆனால். “கிட்டவா இருக்கிறது. காசி ராமேஸ்வரம்” என்று. போக்குவரத்து வசதி இல்லாத பழைய காலத்தில் சொல்வதுண்டாம்,

அதைப்போல. அம்மாவைச் சிரிக்க வைக்கும். அவனது முயற்சியும் வெகு தூரத்திலேதான் இருந்தது,

மனம் இளக. "அதில்லையம்மா,. கடைசியில் ஒன்றுமில்லாமல் போகப் போகிறது,! இதற்குப் போய். இவ்வளவு ஆர்ப்பாட்டமா... என்று இருந்தது, அதைத்தான் சொன்னேன்," என்றான் அவன் சமாதானமாக,

மகாலட்சுமியின் முகம் பளிச்சென மலர்ந்தது,

தேவையான நகைகளை எடுத்து. வெல்வெட் ட்ரேயில் வைத்தவாறே. வேகமாகப் பேசலானாள்,

"ஓ. அதற்காகச் சொன்னாயா? ஆனால். இந்தத் தடவை அப்படி ஆகாதுப்பா, யாரும் எதையும் சொல்லிக் கலைப்பதற்கு . நான் அவகாசமே கொடுக்கப் போவதில்லை, போனதுமே. பூ வைத்து. உறுதி செய்துவிட வேண்டியதுதான்," என்றாள் மகிழ்ச்சியோடு,

தாயின் இந்தச் செய்தி. நித்திலனுக்கு அதிர்ச்சியைத் தந்தது,

வெறுமனே பெண் பார்ப்பதற்கே. எல்லோரும் வந்து. பயங்கரமாகத் தடபுடல் பண்ணிப் பார்த்துதான். அவனுக்குப் பழக்கம்,! அப்புறம். அது ஒன்றுமில்லாமல். புஸ்வாணமாகிப் புகைந்து. மறைந்து போய்விடும்,

அதெல்லாம் தாண்டாமலே. எடுத்த எடுப்பிலேயே பூ வைப்பதா? என்னவோ தப்பாகத் தெரிந்தது. அவனுக்கு,

"என்னம்மா. நீங்கள்? பெண்ணை நாம் பார்த்தது இல்லை, அவள். என்னைப் பார்த்தது இல்லை, அவளுக்கு என்னையும் எனக்கு அவளையுமே பிடிக்காமலும் போகலாம், எதுவும் தெரியாமல் என்னம்மா. நிச்சயம் செய்வது?" என்று விசாரித்தான்,

"அதெல்லாம் பிடிக்காமல் போகாது " என்றாள் மகாலட்சுமி பிடிவாதக் குரலில், "பார். அன்றைக்கு அனுபமா... அந்தப் பெண்ணின் பெயர். அவள் படத்தைக் காட்டியபோது. நன்றாயிருக்கிறாள்,. பிடிக்கிறது என்றுதானே. சொன்னாய்? அவர்கள் வீட்டிலும். அதே எண்ணம்தான்... "

"அதற்கில்லை. அம்மா, நம் வீட்டுப் பிரச்சினை தெரியும்போது. எப்படியாவது. யாராவது தெரிய வைத்துவிடுவார்கள்தானே.

அப்புறமாகப் பழைய கதைதானே. நடக்கப் போகிறது? என்று சற்றுக் கசந்த குரலில் கேட்டான் மகன்,

“அதெல்லாம் நடக்காது,!” என்றாள் அன்னை அழுத்தமான குரலில்,

அவன் ஏதோ சொல்ல வாய் திறக்கவும் முந்திக்கொண்டு. “கொஞ்சம் பொறுப்பா. நான் முழுதும் சொல்லி விடுகிறேன், அனுபமாவின் குடும்பமும். பரம்பரையாகப் பெரிய குடும்பமே என்றாலும். கொஞ்சம்...வந்து நிறையவே. பெருங்காய டப்பா, வெளியே ஜம்பம் அடிக்கிற அளவுக்கு. உள்ளே அதிகப் பணம் கிடையாது, அதை விடவும். பெண்ணுக்குப் பெற்ற தாய் கிடையாது, அதனால். பெருமையடிக்கப் பணக்கார இடம் என்று பார்ப்பார்களே தவிர. அதற்கு மேல் நுணுக்கி. நுணுக்கிக் குறை தேட மாட்டார்கள், அதனால். தடை ஏற்படாது, ... “

திகைப்புடன் தாயைப் பார்த்தான் நித்திலன், ரொம்பவும் மென்மையானவள்,. அதனால்தான். எல்லோரும் அவளை ஆட்டிப் படைக்கிறார்கள் என்று அவன் நினைப்பதுண்டு, ஆனால். அன்னையுள் இப்படிப்பட்ட கடினத்தை அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை,

“என்னம்மா. அந்தப் பெண்ணுக்கு எப்படி இருக்கும் என்று நீங்கள் கூட யோசிக்க மாட்டீர்களா? சும்மாவே. நம் வீடு ஒரு காடு மாதிரி, அதற்கு மேல் அண்ணனின் பிரச்சினை,! அந்தப் பெண் எப்படி ஏற்பாள்? இந்தக் காலத்துப் பெண்கள் தைரியம் உள்ளவர்கள், மணமேடையில் வைத்துக்கூட மறுத்து. மானத்தை வாங்கி விடுவார்கள், இதெல்லாம் தாண்டி. எனக்குத் திருமணமாவது. இன்னொன்றாவது? “ என்று சலிப்பும் எரிச்சலுமாகக் கூறினான் மைந்தன்,

“சேச்சே. அப்படிச் சொல்லாதேம்மா, அது மாதிரியெல்லாம் நடக்காது,! மேலும். மற்றது எப்படியோ. நீ அவளை நன்றாகத்தான் வைத்துக்கொள்ளப் போகிறாய்,! நானும். உனக்காகவே. அவளை உள்ளங்கையில் வைத்துத் தாங்குவேன், அப்புறம் என்ன? சரி என்று. கூட வாப்பா, மேலே இடையூறு நேராமல் தடுப்பதற்காக என்றேதான். இன்றே பூ வைத்துவிட்டு வரப் போகிறோம், அப்புறம். அந்த வீட்டில். யாரும் எதையும் கண்டுகொள்ள மாட்டார்கள், போய்

உடை மாற்றிக் கிளம்பு, எனக்காக என்றாள்

அப்போதும். அவன் முகம் திருப்தியைக் காட்டாதது கண்டு. கண்ணாடி முன். அவனை இழுத்துப் போய் நிறுத்தினாள், “நன்றாகப் பார்,! உன்னை வேண்டாம் என்று சொல்ல. ஒருத்தி இனிமேல் பிறந்துதான் வர வேண்டும். தெரியுமா?” என்று பெருமையோடு கேட்டாள்,

“கரெக்ட்,! அப்போதுதான் அவளுக்குச் சொல்ல இன்னொரு காரணம்  வசதியாக இருக்கும்,,!” என்று சிரித்தான் நித்திலன்,

“என்னடா. எதற்குச் சிரிக்கிறாய்? என்ன சொல்ல வசதி?” என்று குழப்பத்துடன் வினவினாள் தாய்,

“மறுப்புச் சொல்லத்தான், இனிப் பிறந்து வந்தால்தானே. இந்தக் கிழட்டு அங்கிள் வேண்டாம் என்று சொல்ல முடியும்? “ என்று அவன் சொன்ன விளக்கத்தில் அவளுக்குமே சிரிப்பு வந்தபோதும். அன்னை மனதுக்கு அது கொஞ்சமும் பிடிக்கவில்லை,

“இந்த வீட்டில். நீ ஒருத்தன். சற்று மூளையோடு பேசுகிறவன் என்று நினைத்தேன், அதையும் கெடுக்காதேடா. பாவி,! “ என்று. இலகுக் குரலிலேயே மகாலட்சுமி மகனை அதட்டுகையில். கதவை யாரோ. மெல்லத் தட்டினார்கள்,

ட்ரேயில் நகைகள் இருப்பதை மனதில் கொண்டு. நித்திலன் வேகமாகப் போய். கதவை லேசாகத் திறந்து. யாரென்று பார்த்தான்,

“தம்பி. உங்கள் உடை, “ என்று. அவனுக்காக அயர்ன் பண்ணி வந்திருந்த உடைகளைக் கையில் ஏந்தியவாறு. அவனுடைய அண்ணன் மனைவி யாமினி நின்றிருந்தாள்,

அவனைக் கண்டதும். குரலை தணித்து. “உங்கள் அண்ணனுக்கும் என் குழந்தைக்கும் நீங்கள்தான் கதி. தம்பி , எங்களைக் கைவிட்டு விடாதீர்கள், “ என்று. கெஞ்சலாகக் கேட்டு. உடையைக் கொடுத்துவிட்டுப் போனாள்,

அவள் இரண்டு எட்டு எடுத்து வைக்கும் முன்னரே. முன் ஹாலில் ஒரு களேபரம் கேட்டது, “முதலில். யாராவது எனக்கு உண்மையைச் சொல்லுங்கள்,. நிஜமாகவே. உறுதியே பண்ணிவிட்டார்களா? அய்யோ. என்னால் நம்பவே

முடியவில்லையே,! சின்ன மாப்பிள்ளை பொறுப்புத் தெரிந்தவர் என்று நினைத்தேனே,!" என்று ஒப்பாரி தோரணையில் யாரோ தொடங்கினார்கள்,

"சின்ன மாப்பிள்ளை" என்ற வார்த்தையில் யார் புலம்புவது என்று புரிந்துகொண்ட நித்திலன் தாயைப் பார்த்தான்,

வெறுப்பும் கோபமுமாகச் சுளித்த முகத்தை. மகாலட்சுமி வினாடிக்குள் சீர்ப்படுத்திக் கொண்டாள்,

"எங்கே? அண்ணி அறையிலா?" என்று கேட்டுக்கொண்டு. அழுகைக் குரல் நெருங்கி வரவும். மகனுக்குக் கை ஜாடை காட்டிவிட்டு. வேகமாக அறையை விட்டு வெளியே சென்றாள்,

கூடவே நித்திலனும் வெளியே வரவும். கதவைச் சாத்திக்கொண்டு. வரவேற்கும் பாவனையில் முன்னே சென்றாள்,

அம்மா ரொம்பவே தேறியிருக்கிறாள் என்று எண்ணியவாறு. மகாலட்சுமியின் பின்னே. நித்திலனும் மெல்ல நடந்தான்,

"வாங்க அண்ணி, நித்தி அப்பா சொல்ல நேரமாகிவிட்டதா? இப்போதுதான் வந்திருக்கிறீர்கள்? என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்று உபசரித்த சம்பந்தியிடம் "ஆங்...ஆமாம். ஆமாம்,!" என்று அரைகுறையாகப் பதிலளித்துவிட்டு. யாமினியுடைய தாயார். நித்திலனை நெருங்கினாள்,

"என்ன தம்பி. பேச்சு வார்த்தை எல்லாம் முடிந்து. இன்று பூ வைக்கப் போகிறீர்களாமே,! முன்னாடியே எனக்கு ஒரு வார்த்தை சொல்லியிருக்கக் கூடாதா? அப்படியா நான் வேண்டாதவள் ஆகிவிட்டேன்?" என்று. அவனிடம் அங்கலாய்த்தாள்,

"ஐயோ. அப்படி எதுவும் இல்லை. அத்தை,! ஏதோ சட்டென்று இது முடிவாகிவிட்டது, சொல்ல நேரம் இல்லை, அவ்வளவுதான்," என்று வாயில் வந்ததைச் சொல்லி சமாளித்தவாறு. அந்தம்மாளின் தலைக்கு மேல். நித்திலன் தாயைப் பார்த்தான்,

ஆனால். "அண்ணி... " என்று கையைப் பற்றிய மகாலட்சுமியைக் கவனியாதவள் போன்று. ",ஆனால் நித்தித் தம்பி. என் மருமகன் உங்கள் பொறுப்புதான்,! அத்தோடு. உங்கள் வீட்டு வாரிசாக. என் மகளுக்கு ஒரு பிள்ளை வேறு இருக்கிறது,! அவர்களை

நல்லபடியாகப் பராமரிப்பதே பெரிய பொறுப்பாக இருக்கும்போது. எதற்காக இன்னும் வேறு இழுத்துக் கொள்கிறார்களோ. தெரியவில்லை, எப்படியோ. உங்கள் ஒருவரை நம்பித்தான். என் பேரனையும் மகளையும் இந்த வீட்டில் விட்டு வைத்திருக்கிறேன், கல்யாண மயக்கத்தில். அந்தப் பொறுப்பை. ஒரு கணம்கூட மறந்துவிடாதீர்கள்,!" என்று பிடிவாதமாகச் சொல்லியே முடித்தாள்,

அதே பிடிவாதத்துடன் அவளைப் பற்றிய கையை விடாமல். உள்ளே கூட்டிப் போய். மருமகளிடம் "என்ன யாமினி. உன் அம்மா வந்திருக்கிறார்கள். பார்க்கவே இல்லையா? முதலில் அம்மாவுக்குச் சாப்பிட ஏதாவது கொடு," என்று சொல்லி. அவளிடம் சம்பந்தி அம்மாளை விட்டுவிட்டுத் திரும்பி மகனிடம் வந்தாள்,

"எல்லாரும் நன்றாகத்தான் பேசுகிறார்கள், மூத்தவனும் என் பிள்ளைதான் உன் அண்ணன்தான், கெட்ட பழக்கம் வேறு பழகிவிட்டான்தான்,! அதற்காக. நீ கல்யாணமே இல்லாமல். அந்தம்மா மகளையும் பேரனையும். மருமகனையும் பார்த்துக் கொள்வதற்காக வாழ்க்கையை அர்ப்பணிக்க வேண்டுமாமா? என்ன சுயநலம்? இத்தனை தரமும். திருமணப் பேச்சுகளை யார் கெடுத்திருப்பார்கள் என்று இப்போது தெளிவாகத் தெரிகிறது, சரிசரி, நீ கிளம்பு, இந்தப் பேச்சையெல்லாம் நினைத்து மனதைக் கெடுத்துக் கொள்ளாதே, அதுதான் நம் வீடு காடு என்று அப்போதே சொன்னேனே, போ, போய்க் கிளம்பு," என்று கோபமாகப் படபடத்தாள்,

"கூல். அம்மா, இது. எதையும் நான் பொருட்படுத்தப் போவதில்லை, ஆனால். நீங்கள் சந்தோஷமாக இருந்தால். அதுதான் எனக்கு வேண்டும்,! ஏதோ நகை நட்டெல்லாம் வெளியே எடுத்தீர்களே. மறக்காமல். வேண்டியதை எடுத்துக்கொண்டு. மிச்சத்தை லாக்கரில் வைத்துப் பூட்டுங்கள், நான் உடை மாற்றிக்கொண்டு வருகிறேன்," என்று தாயை அமைதிப் படுத்தியவாறே. நித்திலன் அணிய வேண்டிய உடையோடு அவனது அறைக்குச் சென்றான்,

உள்ளூர அவனுக்கு யோசனைதான்,

அந்தப் பெண்ணின் படம் அவனைக் கவரத்தான் செய்தது,

ஏதேதோ வேலையின் இடையே. அந்த முகம் தோன்றி ஆவலைத் தூண்டவும் செய்தது, ஆனால். அனது பிரச்சினைகள் அத்தனையையும் மீறி. அவனுக்கு ஒரு திருமணம் நடக்க வாய்ப்பில்லை என்று உணர்ந்து. அந்த முகத்தை முயன்று. மறந்தும் இருந்தான்,

இப்போதும். அதே மனநிலையில்தான். உறவினர் சகிதம். நித்திலன் அந்தப் பெண் வீட்டுக்குக் கிளம்பிச் சென்றான்,

ஆனால். அங்கே சென்று. அவளது காந்த விழிகளைச் சந்தித்ததுமோ. எத்தனை தடைகள் நேர்ந்தாலும். அத்தனையையும் முறியடித்து. அவளை மணந்தே தீருவது என்ற முடிவுக்கு. அவன் வந்தான்,!

# அத்தியாயம் -2

ஆனால். அனுபமாவின் வீட்டுக்குப் போன பின் பார்த்தால். நித்திலன் எதிர்பார்த்தது போல. எதுவும் நடக்கவில்லை,

அவனுடைய குடும்பத்தினருக்குக் கொஞ்சமும் குறையாத எண்ணிக்கையில். அங்குள்ள சொந்தமும் குழுமியிருந்தது. எதிர்பார்க்கப் பட வேண்டியதே, ஆனால். இளைய தலைமுறை சற்று அதிகம், எல்லோரும் அனுபமாவை ஒட்டியிருந்து. சிரிப்பும் கேலியுமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள், அதுவும் இயல்புதான்,

ஆனால். ஊடுபா போல. ஏதோ ஒரு  ஓர் அமைதியற்ற தன்மை. இருந்தது,

ஏன்? இந்த இளைஞர் கூட்டம் எதை எதிர்பார்க்கிறது? அல்லது. என்ன குறை தேடுகிறது? அல்லது. எதை எதிர்க்கிறது? அண்ணன் விஷயம் தெரிந்திருக்குமா?

சின்னத்தைக்கும். அண்ணன் மாமியாருக்கும். அதற்கான அவகாசம் கொடுக்கப்படவில்லையே,! வேறு ஏதாவது? எப்படியாவது... ?

நித்திலனுடைய குடும்பத்தைப் பொறுத்த வரையில். வெளிப்படையாக. யாரும் எந்தக் குறையும் சொல்ல இயலாது, அப்படிச் சொல்லிவிடக் கூடாது என்பதற்காகவே. அவன் எவ்வளவு பணம் செலவு செய்து கொண்டிருக்கிறான்,! எனவே. பிரச்சினை அதுவல்ல,!

அனுபமாவின் குடும்பம். சில தலைமுறைகளாக. மிகவும் வசதியான குடும்பம் என்று பெயர் பெற்றது, ஆனால். அன்னையின் வாய்மொழி. அது காலிப் பெருங்காய டப்பா என்பது,

அது உண்மையாக இருக்கலாம் என்பதற்கு. ஆங்காங்கே சான்றுகள் தெரிந்தன, பெரிய வீடுதான், ஆனால். அங்கங்கே சுவர்களில் அவசரமாகப் பூசியிருந்த புதிய பூச்சு தெரிந்தது, சோஃபா கால்களில் ஒன்று மட்டும். புத்தம் புதியதாகப் பல்லை இளித்தது,

“வாங்க வாங்க,!” என்று வரவேற்பு பெரிதாக இருந்து. வேறெதிலும் கவனத்தை அதிகம் செலுத்த விடாமல் தடுத்தது,

ஆளாளுக்கு "வாங்க வாங்க," என்று வரவேற்பதும். உள்ளே அழைத்துப் போய் உட்கார வைப்பதும். பானத்தைக் கொடுத்து உபசரிப்பதும். பிரமாதமாகவே இருந்தது,

குறைகளைக் கண்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான். இந்தப் பலமான வரவேற்போ என்று எண்ணிவிட்டு. எதற்கும். தப்பு வண்ணம் பூசக் கூடாது என்று தனக்குத்தானே அறிவுறுத்திக் கொண்டான். நித்திலன்,

குற்றம் குறைகளைப் பூதக் கண்ணாடி கொண்டு பார்த்துப் பெரிது படுத்தத்தான். அவன் குடும்பத்திலேயே ஆட்கள் இருக்கிறார்களே,!

அவனது கருத்தை நிரூபிப்பது போல. "ஜன்னல் திரை புதிது போட்டால் என்ன? துவைத்த பழசைப் போட்டிருக்கிறார்கள். பார், இவர்கள். உனக்கு என்னடா சீர் செய்யப் போகிறார்கள்?" என்று காதுக்குள் ஓதினாள். வசதியாக அருகில் அமர்ந்திருந்த சின்ன அத்தை சுந்தரி,

கவனித்துவிட்டு. "என்ன சுத்தம்,! ஜன்னல் திரைகளில். துளி அழுக்கு கூட இல்லையே,! பார்த்தீர்களா. சின்ன அண்ணி என்று கேட்டாள் மகாலட்சுமி,

"கல்யாணப் பெண்ணை விட. அவளுடைய அம்மாக்காரிதான் மினுக்குகிறாள்,! அவள் சேலையில் அதிக ஜரிகை தெரியவில்லை? பெண்ணுக்குக் கட்ட வேறு நல்ல சேலையே இல்லை போல,!" என்றாள். யாமினியுடைய தாயார்,

"நல்லவேளை,! இப்போதே கல்யாணப் பெண் போல. ஒரேயடியாக ஜரிகையில் காடியாக டாலடிக்காமல். பெண் நிதானமான அலங்காரத்தில் அழகாக இருக்கிறாள், வாழ்த்துக்கள். நித்திம்மா,!" என்றாள் பெரிய அத்தை சாரதா,

கல்யாணப் பெண்ணைப் பெரியத்தை புகழ்ந்ததைக் காட்டிலும். இவர்கள் முட்டி மோதிக் கொள்ளாமல் காப்பது முடியாது போலத் தெரிகிறதே என்று. அதுதான் நித்திலனுக்குக் கவலையாக இருந்தது, வெளி இடத்தில் அந்த அளவுக்குப் போக மாட்டார்கள் என்று நம்பிக்கைதான், ஆனாலும்... என்று அவன் யோசிக்கையில். ஜரிகையில் டாலடித்த பெண்மணி. அந்த வீட்டரசி. பரபரப்புடன்

அவர்கள் அருகில் வந்து நின்றாள்,

“இதை. உங்கள் வீடாக நினைத்துக் கொள்ளுங்கள், பாருங்கள். எங்கள் அனு...அனுபமா வீட்டுக்கு மூத்த பெண், திருமணம் செய்து. முன் அனுபவம் கிடையாது, குற்றம் குறை இருந்தால். தயவு பண்ணிப் பொறுத்துக் கொள்ள வேண்டும், ஆனால். நீங்கள் என்ன கேட்டாலும். அவளுக்காக என் உயிரைக் கேட்டாலும். தரச் சித்தமாக இருக்கிறேன், என் பெண் சந்தோஷமாக இருக்க வேண்டும்,! அதுதான் என் லட்சியம்,!” என்று வசனம் பேசினாள், “சொல்லுங்கள். நாங்கள் இப்போது என்ன செய்ய வேண்டும்? என்ன சொன்னாலும். இம்மி பிசகாமல். அதை நிறைவேற்றி வைப்பது என் பொறுப்பு,! ப்ராமிஸ்,!” என்று உணர்ச்சிகரமாகப் பேசினாள்,

ஏதோ சினிமா வசனம் போலத்தான் நித்திலனுக்குத் தோன்றியது,

சட்டென்று அனுபமாவைப் பார்த்தான், அவள். தரையில் விரித்திருந்த கார்ப்பெட்டில் ஏதோ சித்திரத்தை. முழுக் கவனத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்,

அதாவது. இந்தப் பேச்சில். அவளுக்கு உடன்பாடில்லை!

தாயின்                பெற்ற தாய் இல்லை என்று தாயார் சொன்னது நினைவு வர. நித்திலனின் பார்வை மேலும் கூர்மை பெற்றது, உடன்பாடு. சிற்றன்னையின் பேச்சில் மட்டுமே இல்லையா? அல்லது. இப்போது நடக்க இருப்பதிலும் இல்லையா?

அவளிடம் மட்டுமின்றி. அவளைச் சூழ்ந்து இருந்தவர்களிடமும் ஓர் அமைதியின்மை இருப்பதை. நித்திலனால் இப்போது. தெளிவாக உணர முடிந்தது,

அவனிடமும் மற்றவர்களிடமுமாகப் பாய்ந்த பார்வைகளில் சஞ்சலம்,! என்னவாக இருக்கும்?

திடுமென நிமிர்ந்து அவனை நேராகப் பார்த்தாள் அனுபமா, நேர்ப் பார்வையில் ஒரு கேள்வி,! “இப்போது. நீ என்ன சொல்லப் போகிறாய்” என்று. அவள் கேளாமல் கேட்ட கேள்வியில் அவன் திகைத்தான்,

எல்லா வகையிலும் பிடித்துவிட்ட பிறகுதானே. பூ வைக்கும்

வைபவமே நடக்கும்,

அதற்காகவே வந்தவனைப் பார்த்து. என்ன சொல்லப் போகிறாய் என்று கேட்டால் என்ன அர்த்தம்? ஒரு வேளை. அவளுக்கு ஏதேனும் தடை இருக்கிறதோ?

இதை எப்படி அறிவது? ஆனால். அறிந்துதானே. ஆக வேண்டும்?

அனுபமாவை ஒத்த வயதில். அவள் அருகே இருந்தவர்களின் முகம் நினைவு வர. சற்று உரத்த குரலில் நித்திலன் பேசினான், "அம்மா. எனக்கு ஓர் உறுதி வேண்டும், நீங்கள் என்னிடம் கேட்டது போலப் பெண்ணுக்குச் சம்மதம்தானா என்று கேட்டார்களா? அங்கே என்னைப் பிடித்திருக்கிறதா என்று தெளிவாகத் தெரிந்துகொண்டு. மேலே உங்கள் சடங்கு. சாங்கியங்களைச் செய்யுங்கள்," என்றான் தெளிவாக,

எல்லோர் முகங்களிலும். ஸ்விட்சைப் போட்டது போல. மலர்ச்சி தெரிந்தது, "அக்காவுக்குப் பிரியம்தான்,!" என்றது ஒரு வாண்டு உரத்த குரலில்,

அனுபமாவின் கன்னங்களில் செம்மை பாய. முறுவலை அடக்கியவண்ணம் தலைகுனிந்தாள் அவள்,! அப்படியானால். அவளுக்குப் பிரியம்தான், அவனைப் பற்றிய சஞ்சலம்தான். அலைபாயச் செய்திருக்கும் போல,!

ஆனால். ஏன்?

தாயிடம் திரும்பி. "என்னம்மா. அவர்களிடம் விவரம் சொன்னீர்கள்தானே?" என்று தணிந்த குரலில் வினவினான்,

"பந்தா,! முதலிலேயே சொல்லக் கூடாதாம், "வந்து பார்த்துப் பிடித்திருந்தால் மட்டுமே. பூ வைக்கப் போவதாக"ச் சொன்னார்களாம், சின்ன அத்தை. பாட்டி சொல்லி. அப்பா அப்படியே ஒப்பித்திருக்கிறார், அதனால்தான் . இப்போது பெரிய அத்தை மூலமாகப் போகப் போகிறேன்," என்று மெல்லிய குரலில் தெரிவித்தாள் தாய்,

பெரிய பந்தா,! அண்ணனைப் பற்றித் தெரிந்தால். இவர்களே வேண்டாம் எனக் கூடும்,! அப்போது எங்கே போய் முகத்தை

வைத்துக் கொள்வார்களோ?

கடவுளே. அது போல நேர்ந்துவிடக் கூடாது,

பெரிய விழிகளால் அவனை நேராகப் பார்த்தவளின் முகம் மலர்ந்து விகசித்தது, அவளைப் பார்க்கப் பார்க்க. அவனுக்கு மேலும் மேலும் பிடித்துப் போவதை அவள் கண்டுகொண்டாளா?

பதிலுக்குத் தானாக. அவன் முகத்திலும் முறுவல் அரும்பியது,

ஆனால். எதுவும் செய்யாமல். அர்த்தமற்று அவர்களுக்குள்ளேயே பேசிக்கொண்டு. எல்லோரும் ஏன் இப்படிச் சும்மா உட்கார்ந்திருக்கிறார்கள்? வெறுமனே. இந்தப் பழச்சாறைக் குடித்துப் பொழுது போக்கவா. இங்கே வந்தார்கள்?

சுருசுருவென்று வந்ததை அடக்கிக்கொண்டு. அருகில் அமர்ந்திருந்த தாயிடம் லேசாகத் தலையைச் சரித்து. “என்னம்மா. என்னமோ பூ வைப்பது என்றீர்களே. அந்தச் சடங்கை முடித்துவிட்டுக் கிளம்பினால். நான் அரை நாளாவது. தொழிற்சாலைக்குப் போய் வேலையைப் பார்ப்பேனே.!” என்றான். சற்றுத் தணிவான குரலில் கூறி. அவளை முடுக்கினான், ,

“அதுதாண்டா. நானும் யோசித்துக்கொண்டே இருந்தேன்,! இப்போது. அவள் அம்மாவும் வந்து ஏதோ சொல்லப் போக
எப்படித் தொடங்குவது என்று எனக்குக் குழப்பமாகிவிட்டது,” என்றவள். தன் மூத்த நாத்தனார் சாரதாவைக் கூப்பிட்டாள்,

“பெரியண்ணி. முறைப்படி என்னென்ன செய்ய வேண்டும் என்று பெரியவர்களிடம் கேட்டுச் சொல்லுங்கள்,” என்றாள் மகாலட்சுமி,

அம்மாவும் பாட்டியும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வது கூடக் கிடையாது, ஆனால். அதைப் பிறர் அறிந்துவிடாமல் எச்சரிக்கையோடு நடந்துகொள்வார்கள்,

இப்போதும். முன்னுரிமையைப் பெரிய நாத்தனார் மூலமாக. மூத்த தலைமுறைக்குக் கொடுத்தாள் மகாலட்சுமி,

நாகவல்லி அம்மாளும் அதை இயல்பாக ஏற்று. “என்ன.

எல்லோரும்  இப்படிச் சும்மா உட்கார்ந்திருந்தால். எப்படி? பிடித்தால். அப்படியே பூ வைத்து உறுதி பண்ணிக்கொண்டு வந்துவிடுவது என்று. சீர்த்தட்டு அடுக்கினீர்களே. அதையெல்லாம். ஆள் விட்டு எடுத்துவரச் சொல்ல வேண்டியதுதானே? நித்திம்மா. நீ போய்... ஊகூம். வேண்டாம், நீ கல்யாண மாப்பிள்ளை, இந்த வேலையெல்லாம். நீ செய்யக் கூடாது,! அந்தப் பக்கம்...அது யார். உன் சித்தி மகன் குருநாதன்தானே. அப்பா குருநாதா. நீ போய். நம்ம டிரைவருங்களைக் கூப்பிட்டு. தட்டுகளை எடுத்து வரச் சொல்லுப்பா, இந்தாம்மா. பெண்ணுக்கு அம்மா. மணைப் போட்டு. உன் மகளை அதிலே உட்கார வை,! பொண்ணு மூஞ்சியிலே பவடர் அழிஞ்சிருந்துதானா. அதையும் சரி பண்ணு, சும்மா மசமசன்னு நின்றால். மகள் கல்யாணம் தானாய் நடந்துவிடாது,!" என்று பெண் வீட்டுக்காரியையும் அதட்டினாள்,

அனுபமாவுடைய சிற்றன்னையும். அப்படி ஒன்றும் அரளுகிற ஆளில்லை என்று தெரிந்தது,! ஏதோ பெண்ணுக்காக உயிரை விடத் தயார் என்கிற மாதிரி ஏற்கனவே பேசியவள். இப்போதும். அதையே தொடர்ந்தாள், "எங்கள் வீட்டில். முதல் கல்யாணம், இவளுக்குக் கீழே மூன்று இருக்கிறது, ஆனாலும். மூத்த பெண் திருமணத்தை ஓஹோ என்று நடத்த வேண்டும் என்று ஏற்பாடுகள் செய்திருக்கிறோம்,! நாதஸ்வரம் மட்டும் இல்லாமல். பாண்டு வாத்தியத்தோடு. செண்டை மேளமும் வைக்கப் போகிறோம், , "

விட்டால். இதே ரீதியில் அந்தம்மாள் பேசிக்கொண்டே போவாள் போல,!

இது தெரிந்த அந்த வீட்டுப் பையன் ஒருவன். "அம்மா. அது. அக்காவின் திருமணத்தின்போது செய்ய வேண்டியது, அதற்கு இன்னும் நாளே குறிக்கவில்லை, இப்போது. இன்றைய விசேஷத்துக்கு என்ன செய்ய வேண்டும் என்று அதை மட்டும் பாருங்கள், என்னவோ நல்ல நேரம். முகூர்த்த நாள் என்றெல்லாம் காலண்டரில் போட்டிருக்குமே. எந்த நேரத்தில் செய்ய வேண்டும் என்று. அந்தப் பாட்டியிடம் கேட்டுச் செய்யுங்கள், அதை விட்டு. வேண்டாத விவரங்களைச் சொல்லி. இப்போது நேரத்தை வீணாக்காதீர்கள்,!" என்று விரட்டினான்,

சுய விளம்பரத்துக்குக் கிடைத்த அருமையான வாய்ப்பை

விட்டுவிட. மணப்பெண்ணுடைய சிற்றன்னைக்கு மனமில்லைதான், ஆனால். எடுத்துச் சொன்னது. அவளுடைய மகன் ஆயிற்றே,! விடாப்பிடியாகத் தொடர்ந்தால். முகத்தில் அடித்த மாதிரி ஏதாவது சொல்லவும் தயங்காதவன். அவளுடைய மூத்த பிள்ளை,!

அதிலும். இந்த அக்காக்காரியிடம். அவனுக்கு உயிர்,! தொடர்ந்து வீடு. பிரச்சினையற்று இருக்க வேண்டுமானால். அவன் சொல்கிறபடி கேட்டுவிடுவது நல்லது,!

எனவே. "இன்றைக்கு நல்ல நேரம் எப்போது என்று. இதோ காலண்டரைப் பார்த்து " என்று அவள் ஓரெட்டு எடுத்து வைக்குமுன். "எல்லாம் நாங்களே பார்த்துவிட்டோம், இன்னும் ஒரு மணி நேரம் நல்ல நேரம் இருக்கிறது, நீ. மணையை எடுத்துப் போட்டு. பெண்ணை உட்கார வைத்தால். மேல்கொண்டு செய்ய வேண்டியதை. நாங்கள் பார்த்துக் கொள்வோம், " என்றாள் பாட்டி நாகவல்லி,

அப்படிச் சொன்னாளே தவிர. இதைச் செய்,. இப்படிச் செய் என்று வைத்து வாங்கிவிட்டாள்,

அப்படி நில்லு. இப்படி உட்கார வை. இந்த வரிசையில் நலுங்கு சாமான்களை வை. திருஷ்டி கழிக்கத் தேங்காய். ஆலத்தித் தட்டு என்று. பாட்டி. அந்தச் சித்தியை ஓட ஓட விரட்டி வேலை செய்ய வைத்தாள்,

முழி பிதுங்கினாலும். மறுக்காமல் செய்ய வேண்டிய கட்டாயம். ஓடி ஓடிச் செய்து. வேர்த்து வடிந்தாள். சிற்றன்னை,! என்ன செய்வது? இந்த நேரத்தில் செய்ய மறுத்தால்... தயக்கம் காட்டினால் கூடப் பெயர் கெட்டுவிடும்!

பையனே வைத்து வாங்கிவிடுவான்,

பாட்டியின் நாக்கு சுழன்றடித்த வேகத்தில். நல்ல நேரம் முடிவதற்குப் பத்து நிமிஷங்கள் மீதி இருக்கும்போதே. அனுபமாவுக்குப் பூச் சூட்டி. நலுங்கு வைத்து. கடைசியாகத் திருஷ்டியும் கழித்துவிட்டார்கள்,

மகாலட்சுமி கையோடு கொண்டு வந்திருந்த மல்லி மொக்கு மாலையின் வேலைப்பாடு எல்லோர் மனதையும் கவர்ந்தது, நிறைய ஃபோட்டோக்கள் எடுத்தார்கள்,

“அவசரமாக வந்ததில் மோதிரம் அளவு பார்த்து வாங்க முடியாமல் போயிற்று, இனி. நீங்கள் இருவரும் சேர்ந்து போய். உனக்குப் பிடித்த விதமாக வாங்கிக் கொள்ளுங்கள்,” என்றாள் மகாலட்சுமி,

“ஆமாம். அனுபமா, உங்களுக்குப் பிடித்தமானதாக ஒன்றைத் தேர்ந்தெடுத்தும் வாங்கலாம், என்ன அத்தான். அனுபமாவுக்குப் பத்துப் பனிரெண்டையேனும் போட்டுக் கழற்றி. போட்டுக் கழற்றிப் பார்த்து. ரொம்பப் பொருத்தமானதைத் தேர்ந்…தெடுத்துதானே. வாங்குவீர்கள்?” என்று சொல்லி. அனுபமாவைப் பார்த்துக் கண் சிமிடடினாள் வனிதா,

வெகு அழகாக முகம் சிவந்தாள் அனுபமா,

நித்திலனையும் அனுபமாவையும் அருகருகே நிறுத்தி வைத்தும் புகைப்படங்கள் எடுக்கப்பட்டன, வீடியோ ஒரு பக்கம் எடுத்துக்கொண்டே இருந்தார்கள்,

தாயின் முகத்தைப் பார்க்கும்போது. யாரும். ஒருபோதும் பின்னடித்துவிடாமல் தடுப்பதற்காக இந்த ஏற்பாடோ என்று. நித்திலன் நினைத்தான்,

மற்றபடி. வெறும் உறுதி செய்யும்போதே. வருங்கால தம்பதியர் சேர்ந்து நின்று படம் எடுக்கும் பழக்கம் அவர்களில் கிடையாது,

மூன்று ஆண்டுகளுக்கு முன்னராக நடந்த அண்ணன் திருமணத்தில். திருமணத்துக்கு முந்திய நாள் நிச்சயதார்த்தத்தின் போது கூட. இருவரும் சேர்ந்து நிற்பதைத் தாத்தா அனுமதிக்கவில்லையே,! பாட்டியும் ஒத்து ஊதினாள், மூன்று ஆண்டுகளில் உலகம் தலை கீழாக மாறிவிட்டதா. என்ன?

அண்ணனின் திருமணம் நினைவு வரவும். நித்திலனின் பார்வை. அண்ணி யாமினியின் பக்கம் தானாகப் பாய்ந்தது,

சுற்றிலும் நடப்பதற்கும் தனக்கும் சம்பந்தம் இல்லாதது போல. கையில் இருந்த செல்ஃபோனையே பார்த்தபடி. பதுமையாக யாமினி அமர்ந்திருந்தாள்,

அண்ணனைப் பற்றிய என்ன விவரம். எப்போது வரப் போகிறதோ. என்ற கவலை,! ஆனால். பெரும்பாலும்.

அவனுக்குத்தான் வரும், அது போலப் பக்காவாக. நித்திலன் ஏற்பாடு செய்து வைத்திருந்தான், அவனது ஏற்பாடு தெரியாத மற்றவர்கள் மூலமாக என்றால் மட்டுமே. வெகு அபூர்வமாக மற்ற குடும்பத்தினருக்கு வரக் கூடும்,

ஆயினும். இது போன்ற நேரங்களில். அண்ணனின் மூளை. படு குயுக்தியாக வேலை செய்யும், பல ஆயிரம் ரூபாய்ப் பணத்தைத் தாராளமாகச் செலவிட்டு. சின்னவன் செய்திருந்த ஏற்பாடுகள் அனைத்தையும் ஏமாற்றிவிடுவான், அப்போது. அண்ணியிடம் விவரம் போய். அவள். கொழுந்தனிடம் வந்து அழுவாள்,

வாழ்விலும் தாழ்விலும் பாதுகாப்பேன் என்று சொல்லி. ஒரு பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டிக் கூட்டி வந்துவிட்டு. இந்தப் பாடு படுத்துகிறானே

பக்கத்தில் நின்றவள். அவன்புறம் லேசாகத் திரும்பவும். தானும் சட்டெனத் திரும்பி முறுவலித்தான்,

அவள் பக்கத்தில் வந்திருந்த ஓர் உறவை. அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தாள், சற்று மூத்த உறவு,

“உனக்கு ஓர் அண்ணன் உண்டில்லையா. தம்பி? அவன் எங்கே? உன் அப்பா பக்கத்தில் பார்க்கவில்லையே,!” என்று. யாரிடமிருந்து. எப்போது வருமோ என்று. நித்திலனுடைய குடும்பத்தினர் எல்லோரும் எதிர்பார்த்திருந்த கேள்வியை அந்த மனிதர் கேட்டுவிட்டார்,

“எல்லோரும் வந்துவிட்டால் தொழிலை யார் பார்ப்பது? பெரியவன். அங்கே இருக்கிறான்,” என்றாள் சின்ன அத்தை. சட்டென்று குறுக்கிட்டு,

நித்திலனுக்குள் ஓர் இதமான உணர்ச்சி பரவியது,

சின்ன அத்தை. நடப்பை ஏற்றுக்கொண்டுவிட்டாள், இனி. அவளும் அவனுக்கு உதவும் போராளி,!

மகிழ்ச்சியோடு அத்தை சுந்தரியைப் பார்த்தால். அவள் தன் பெண்களை. அனுபமாவுக்கு அறிமுகம் செய்து கொண்டிருந்தாள்,

“நாங்கள் அக்காவிடம் ஏற்கனவே பேசிவிட்டோம். அம்மா,” என்ற சின்ன மகள் அனுபமாவிடம் திரும்பி. “அக்கா. நீங்க ரொம்ப

அழகாக இருக்கிறீர்கள்,'' என்று வர்ணித்தாள், ''ஆமாம். ஆமாம்,! அத்தானுக்கு ரொம்பப் பொருத்தம்,'' என்றாள். வனிதாவும்,

அண்ணன் மகனைப் பார்த்து ஒரு தரம் சிரித்துவிட்டுப் போனாள் சுந்தரி, இப்போதாவது. வீட்டு இளவல்கள் மனதை. அத்தை புரிந்துகொண்டாளே,!

திருஷ்டி சுற்றிப் போட்ட பிறகு. இரு பக்கப் பெரியவர்கள் எல்லோரும் இன்னோர் அறைக்குள் சென்று. திருமணம் தொடர்பான ஒவ்வொரு நிகழ்ச்சியையும். அலசி ஆராய்ந்து. நேரம். செய்முறை எல்லாம் திட்டமிடலாயினர்,

அவளுக்கும் தோழிகள். ஒன்றுவிட்ட அக்கா. அண்ணன ; தம்பிகள் தங்கைகள் என்ற பலர் இருந்தார்கள்,நித்திலன் வகையிலும், அப்படியே,

பெரியவர்கள் இருக்கும்வரை வாயை அடக்கிக் கொண்டு இருந்தவர்களுக்கு. இப்போது சுதந்திரம் பிடைத்தது,

சின்னவர்கள் எல்லோரும் சேர்ந்து கேலியும் கிண்டலுமாகக் கலாட்டாவைத் தொடங்கினார்கள்,

பெரிய ஹாலில். இரு புறமாகப் பெண்ணையும் பிள்ளையையும் தனித்தனியே உட்கார வைத்துவிட்டுப் பெரியவர்கள் சென்றிருந்தார்கள், அந்த அமைப்பை மாற்றாமல் அப்படியே பிடித்து வைத்துக்கொண்டு. என்ன? பார்வை எங்கே போகிறது. நாங்கள் எல்லோரும் ஒரு ''சூ மந்திரக்காளி''யில் மறைந்துவிட வேண்டும் என்று ஆசையா. இதுங்களை எப்படிக் கழற்றி விட்டுவிட்டு எங்கேனும் நழுவுவது என்று மண்டை குழம்புகிறதா...,அப்படி எங்கே? தியேட்டரா? மாலா?..., , இப்படி ஏதேதோ கேட்டுச் சிரித்தார்கள்,

உறவும் நட்பும் கேலிகள் செய்யச் செய்ய. இருவருமே சந்தோஷமாக உணர்ந்தனர்,

திடுமென ஏதோ தோன்ற. ''பேசுவீர்களாம்,,'' என்று பிடித்தார்கள், ''அனுவோடு பேசுங்கள். மாப்பிள்ளை சார்,!'' என்று கத்தியது. ஒரு குதிரைவால்,

லேசாக முறுவலித்துவிட்டு நித்திலன் சும்மா இருக்கவும்.

குரல்கள் பலவாகி. கோரிக்கை வலுத்தது,

அனுபமாவைப் பார்த்துவிட்டு. “நாங்கள் என்ன. நாடக நடிகர்களா? இத்தனை பேரைப் பார்வையாளர்களாக வைத்துக்கொண்டு பேசுவதற்கு?” என்றான் நித்திலன்,

“ஓ அப்போது செல்லில் பேசுங்களேன்,!” என்றாள் முதலில் பேசச் சொன்னவள்,

“செல் நம்பர் தெரியாதே,!” என்று கையை விரித்தான் நித்திலன்,

அனுபமா சிறு முறுவலோடு பேசாது அமர்ந்திருக்க. ஓர் அரும்பு மீசை. ஒரு காகிதத் துண்டில் ஒரு நம்பரை எழுதியவாறே. அவன் புறமாக ஓடிவந்தான்,

“இந்தாருங்கள், இப்போது பேசுங்கள்,” என்று பேப்பரை நித்திலன் கையில் கொடுத்தான்,

“இதுதானா” என்பது போல அவளைப் பார்த்துவிட்டு. அவளது இளம் புன்னகையில். அந்த எண்ணை நித்திலன். தன் செல்லில் பதிவு செய்தான்,

அப்படியே அவளை அழைத்து. “பிடித்திருக்கிறதா?” என்று எழுதிக் கேட்டான்,

“ஆமாம்,” என்று சுருக்கமாகப் பதில் தந்தாள் அனுபமா,

அவனது எண்ணை அவளும் செல்லில் பதிவு செய்வதைக் காணவும். அவன் மனம் கிளுகிளுத்தது, திருமணம் இவ்வளவு மகிழ்ச்சியானதா? இந்த மாதிரி. அவன் உணர்ந்ததே இல்லையே,!

“இனிப் பிறகு. பார்வையாளர்கள் இல்லாமலே பேசுவோம்,” என்று அவன் தகவல் அனுப்ப. முட்டி மோதி. அவளது செல்ஃபோனைப் பார்த்துக் கொண்டிருந்த எல்லோரும் நகைத்தனர்,

மற்றவர்களின் நகையொலியோடு. அதற்கு ஏற்றாற்போல அவள் முகமும் மலரவும்.

கண்ணை எடுக்க முடியாமல் தவித்தான் நித்திலன்,

சுற்றியுள்ள யாரும் அங்கே இல்லாதது போன்ற பிரமை அவனுக்கு உண்டாயிற்று, அவனும் அவளும் மட்டுமே அங்கே

தனித்திருப்பது போல உணர்ந்தான், அவளுக்கும் அதே உணர்வுதான் என்று அவன் நிச்சயமாகப் புரிந்தது,

ஆடி ஓடி வந்த தேர். நிலைக்கு வந்து விட்டாற்போல ஓர் அமைதி முகத்தில் படர. அவள் அசையாமல் அமர்ந்திருந்த விதமே. அவனுக்கு அந்த உண்மையைத் தெளிவாகப் புலப்படுத்தியது,

அந்த நிலையில். அவளைப் பார்ப்பதற்கே அவனுக்குப் பரவசமாக இருந்தது, இன்னும் கொஞ்சம் பக்கத்திலே அமர்ந்திருக்க முடியுமானால்

அனுபமாவின் பக்கத்தில் நின்று படம்பிடிக்கையில். மெலிதான வாசனை இனிமையான மணம், நல்லவேளையாகச் சிலரைப்போல "டியோ"விவ் குளிக்கவில்லை,!

அவளுக்கு என்னென்ன வாசனை பிடிக்கும் என்று கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்,

இத்தனை பேர் சுற்றிலும் இருக்கும்போது. அவளிடம் தனியே எப்படிப் பேசுவது?

இந்தக் கூட்டம் மட்டும் இங்கே இல்லாதிருக்குமானால். எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எண்ணிவிட்டுத் தன் அசட்டுத்தனத்துக்காக உள்ளூரத் தன்னைப் பார்த்தே நகைத்துக் கொண்டான் நித்திலன்,

இரு பக்க உறவுமாக. இந்தக் கும்பல் இங்கே இல்லை என்றால். அனுபமாவை நெருங்கிப் பேசும் உரிமை. அவனுக்கு எப்படிக் கிடைக்கக் கூடும்?

எங்கோ சந்தித்துக் காதல் கொண்டு. அது பற்றிப் பேசி ஊகூம். அதற்கு எத்தனை காலம் பிடிக்குமோ? அதற்கெல்லாம் அவனால் காத்திருக்க முடிந்திராது,! இப்போது பிரிந்து போவதையே. தாங்க முடியாது போலத் தவிப்பாக இருக்கிறதே,! இத்தனைக்கும் வெறும் ஒரு பார்வைதான் நேர்ந்திருக்கிறது,!

காதல் கனியக் காத்திருப்பது என்றால். "மஜ்னு" போலப் பைத்தியக்காரனாகத்தான் திரிந்திருப்பான்,! நல்லவேளை. தப்பினான்,!

பாக்கெட்டில் இருந்த செல்ஃபோனைத் தொட்டுப் பார்த்துக்

கொண்டான் நித்திலன், அவனுடைய ராணியின் எண் அதிலே பதிவாகி இருக்கிறதே,!

தன்னை மீறி அவள் புறம் பார்த்தால். அவளும். அவளது கையில் இருந்த செல்லைத்தான். கண்களில் கனவோடு பார்த்துக் கொண்டிருந்தாள்,!

# அத்தியாயம் - 3

அனுபமாவை அங்கே. அவள் வீட்டிலே விட்டுவிட்டுப் போக. நித்திலனுக்கு மனமே வரவில்லை, ஆனால். திருமணம் ஆன பிறகுதானே. அவளை உரிமையோடு அவனது வீட்டுக்கு அழைத்துச் செல்ல முடியும்?

அதுவரை. தப்பாக எதுவும் நேராதிருக்க வேண்டுமே,!

நேராது,! இங்கே வருமுன் தாயார் சொன்னது ஒரு பக்கம் என்றால். அவனது சொந்த ஏற்பாடுகளும் பலமானவையே, அதை மீறி. இப்படிப் பயப்படுவதுதான் தப்பு,!

வழியனுப்புவதற்காக. அனுபமாவின் குடும்பமே வாயிலுக்கு வந்திருந்தது, அவளும் வந்திருந்தாள்,

ஆனால். மொத்தக் குடும்பத்தினரின் பார்வையும் அவர்கள் மீது இருக்கும்போது. தனியே என்ன சொல்லி விடைபெறுவது?

அபூர்வமாக அவன் பார்த்த நேரத்திலேயே அவளும் ஓரக் கண்ணால் நோக்கவும். விடைபெறும் விதமாக. அவசரமாகத் தலையசைத்தான் நித்திலன்,

அதே வேகத்துடன் அவளும் தலையாட்டிவிட்டுத் திரும்பினால். கண் குத்திப் பாம்பாய் அதற்குள் அந்தச் சிறு பார்வைப் பரிமாற்றத்தைக் கண்டுவிட்ட இளசுகள் எல்லோரும். “ஹோ...,!” என்று குதிக்க. அனுபமா முகம் சிவக்க வீட்டினுள் ஓடினாள்,

அந்த வேகத்திலும். கடைக்கண்ணால். நித்திலனை ஒரு தரம் நோக்கவும் தவறவில்லை,!

அதற்கும். கோரசாக ஒரு “ஹோ,!” கேட்க. உலகையே வென்ற உணர்வு நித்திலனுக்கு,

அன்று முழுவதுமே அந்த உணர்வு அவனுள் நிலைத்திருந்தது,!

திருமணத்துக்கு. முழுதாக இன்னும் மூன்று மாதங்கள் இருக்கின்றன என்றால். நித்திலனுக்குப் பிடிக்கவே இல்லை,

மூன்று மாதங்கள் என்றால். குறைந்த பட்சமாகத் தொண்ணூறு நாட்கள்,! அதற்குள். என்னவெல்லாமோ நடந்து விடக் கூடுமே,!

“அலைவதாகக் கருத மாட்டீர்கள் என்று நம்பிக் கேட்கிறேன்,. எதற்காக இவ்வளவு பெரிய இடைவெளி? அனுபமாவைப் பார்த்ததுமே பூ வைத்து உறுதி செய்த வேகத்துக்குத் திருமணத்தையும் சீக்கிரமே நடத்துவீர்கள் என்று நினைத்தேனே?” என்று தாயிடம் கேட்டான் நித்திலன்,

“அது வேறே,. இது வேறேடா, திருமண மண்டபம் கிடைக்க வேண்டும்,. அது இது என்கிறார்கள், எனக்கு என்னமோ. பணத்துக்கு ஏற்பாடு பண்ண அவகாசம் தேடுவதாகத் தோன்றியது, நாமாக எதையும் கேட்காவிட்டாலும். அவர்களும் ஓரளவு செய்துதானே ஆக வேண்டும்? சிலதை. நாம் அவசரப்படுத்த முடியாது. கண்ணா,! உன் பாட்டிக்கு. இந்தப் பேரன் திருமணமும் சிறப்பாக நடைபெற வேண்டும் என்று எண்ணம், உன் அப்பாவோ கொழகொழா, உன் பாட்டி. அப்பாவை மீறி. என்னால் ஒன்றும் பேச முடியவில்லை, ஆனால். அனுவைப் பார்த்துப் பேச. உனக்குத் தடை ஒன்றும் இராது என்று தெரிகிறது, அவளுக்கு மோதிரம் வாங்குவது பற்றிப் பேசியபோது. அதற்கென்ன. எப்போது வேண்டுமானாலும் வந்து அழைத்துச் செல்லலாம் என்று. சம்பந்தியம்மாள் சொல்லிவிட்டாள், அங்கே மதுரை ஆட்சி போல,! அவர் பாவம். தலையை உருட்டுவதோடு சரி,! வாயைத் திறக்கவே காணோம்,!” என்று சிரித்தாள் மகாலட்சுமி,

“நிறையப் பேர் இருந்தார்களேம்மா?” என்று விவரம் கேட்டான் மகன்,

இந்த வீட்டைப் போல. அங்கேயும் குட்டை குழப்பத்தானே செய்வார்கள்? அதுவும் ஆளுக்கொரு திசையில் இருந்தால். சமாளிப்பது எவ்வளவு கடினம் என்று அவனுக்கல்லவா தெரியும்,!

மகனின் பேச்சுப் புரிய. “கவலைப்படாதே. நித்திலா,” என்றாள் தாயார் இதமாக, தொடர்ந்து. “எல்லோரையும். அந்தம்மாள் ஓர் எட்டுத் தள்ளியேதான் நிறுத்தி வைத்திருக்கிறாள். கெட்டிக்காரி,!” என்றாள் ஒரு மாதிரிக் குரலில், உடனேயே தலையை உலுக்கிக்கொண்டு. “அதுதான். அவர்களைப் பற்றி முன்னாலேயே சொன்னேனே. அதனால். அங்கிருந்து எந்தப் பிரச்சினையும் வராது, ஆனால். உன் அனும்மா. ரொம்ப நல்ல பெண்ணடா, “அத்தை” என்று என் காலில் விழுந்தாள்,...” எனவும் நித்திலன் நகைத்தான்,

பேச்சை  நிறுத்தி. என்ன என்பது போலப் பார்த்தவளிடம். “உங்கள் காலில் விழுந்தால். நல்ல பெண்ணாம்மா?” என்று கேட்டு அவன் மேலும் சிரிக்கவும். தாயின் முகமும் மீண்டும் மலர்ந்தது,

“என் காலில் ஏன் விழுந்தாள். தம்பி? அதுவும் அத்தை என்று அழைத்து? நீ. அவளது செல் எண்ணை வாங்கி வைத்துக்கொண்டது எல்லாம் எங்களுக்கும் தெரியும்,!  எப்படியும். நீயும் அவளும்தானே. மணந்துகொள்ளப் போகிறீர்கள்? அதற்கு. இனி எந்தத் தடையும் நேராது, அதனால். கண்டதையும் போட்டுக் குழப்பிக்கொள்ளாமல். நீங்கள் சந்தோஷமாக இருக்கிற வழியைப் பாருங்கள். சார்,!”  என்ற தாயின் இலகுப் பேச்சில். மறுபடியும் இருவருமே வாய்விட்டுச் சிரித்தனர்,

தாயார் ஆட்சேபிக்க மாட்டாள் என்று அறிந்தபோதும். அதிரடியாகச் செயல்பட. நித்திலனுக்கு விருப்பம் இல்லை,

அனுபமாவைப் பார்க்க. அவளோடு பேச அவனுக்கு ஆசைதான் என்றாலும். கட்டுப்பாடற்ற சுதந்திரத்தை. அவனுடைய குடும்பம் ஒப்பாது,

அனுபமா படிப்பை முடித்திருந்தாள், ஆனால். அதற்கு உரிய வேலை எதுவும் பார்க்கவில்லை,. தொண்டு நிறுவனம் ஒன்றில். பெயரளவுச் சம்பளத்தில் பணி புரிகிறாள் என்பது. அவளுடைய சிற்றன்னையின் பேச்சில் தெரிய வந்த விஷயம்,

“பெரிய வேலை கிடைக்கும், உழைப்பும் அதிகமாக இருக்கும், அப்புறம். பணத்துக்காகச் சித்திக்காரி கசக்கிப் பிழிகிறாள் என்பார்கள், எதற்கு வம்பு? அதனால்தான். இப்படிப் பேருக்குப் போய். நல்ல விஷயங்களுக்காக உழைப்புத் தானம் செய்துவிட்டு வரச் சொல்லியிருக்கிறேன்,” என்று. தன் உரத்த குரலில் அவள் சொன்னது. நித்திலன் காதுகளிலும் விழுந்திருந்தது,

ஆனால். அதே சமயம். அக்காவும் தம்பியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டது. யாருக்கும் தெரியாது,

அதைப் போலவே. காம்பஸ் செலக்ஷனில். அவளுக்கு நல்ல வேலை கிடைத்ததும். அதை ஏற்கவோ. அதைப் பற்றி வீட்டில் சொல்லவோ வேண்டாம் என்று தம்பி தடுத்ததும் கூட. அந்த வீட்டில் யாருக்குமே தெரியாது,

“அப்புறம். அம்மா உன்னை முழு நேரச் சம்பாதிக்கும் இயந்திரமாக ஆக்கி விடுவார்கள். அக்கா, வாழ்க்கை முழுவதும். அதுவே கதி என்றாகிவிடும், அதனால். இது பற்றி மூச்சுக் கூட விடாதே,” என்று. அவளுடைய தம்பி. சிற்றன்னையுடைய மூத்த மகன் தமக்கையை எச்சரித்ததும் வேறு யாருமே அறியாததே,!

வீட்டுக்குச் சம்பாதித்துப் போடுவதில். அனுபமாவுக்கு ஆட்சேபனை கிடையாது, ஆனால். அந்த வீட்டில் இருந்து ஒரு நாள் வெளியேறித் தன் விருப்பமாக வாழும் வாழ்வை. அடியோடு மறக்க நேரிடும் என்பதே. தம்பியின் ஆலோசனைக்கு அவளைத் தலையாட்ட வைத்தது எனலாம்,

ஆனால். சும்மா இருப்பதும் பிடிக்காமல். தானாகவேதான் அனுபமா இந்தத் தொண்டு நிறுவனத்தில் வேலை செய்யத் தொடங்கியது, ஆனால். எதைச் செய்தாலும் முழு ஈடுபாட்டோடு செய்கிறவள் என்பதால். இந்தப் பணியையும். அவள் ஆர்வத்துடனேயே செய்துவந்தாள்,

நித்திலனுக்கு வேலை நேரத்தில் யாரும் குறுக்கிடுவது பிடிக்காது, தன்னைப் போலவே. அனுபமாவுக்கும் தோன்றக் கூடும் என்று எண்ணி. நிறுவனங்களின் பொதுவான உணவு இடைவேளை நேரத்தில் அவளோடு செல்ஃபோனில் தொடர்பு கொண்டான்,

அவனது அழைப்பை எதிர்பார்த்தவள் போன்று. “சொல்லுங்கள். நித்திலன்,” என்று அனுபமா இனிய குரலில் கேட்கவும் “ஜிவ்”வென்று வானத்தில் பறக்கும் உணர்வு அவனுக்கு உண்டாயிற்று,

இவ்வளவு நேரம் பேசவில்லையே என்று நினைத்திருப்பாளோ என்று தோன்றவும். “உணவு இடைவேளைதானே? பேசலாமல்லவா?” என்று. அவளிடம் அனுமதி கேட்பது போல. சுய விளக்கம் கொடுத்தான் அவன்,

அதை ஏற்பவள் போல. “தாராளமாக,” என்று சுருங்கச் சொல்லித் தன் இணக்கத்தை வெளிப்படுத்தினாள் அவள்,

அப்புறம் என்ன பேசினார்கள் என்று அவர்களுக்கே தெரியாது,

மணி இரண்டை நெருங்கும்போதான். அது உணவு இடைவேளை என்ற நினைவே இருவருக்கும் வந்தது, அவன்

இன்னும் கேட்க வேண்டியதைக் கேட்டு முடிக்கவில்லையே,!

அவசரமாக. “மோதிரம் வாங்கப் போகவேண்டுமே,. எப்போது போகலாம்?” என்று. நித்திலன் அவசரமாகக் கேட்டான்

“அது... சித்தியின் அனுமதி வேண்டும், அத்தையைக் கேட்கச் சொல்லுங்களேன்,! மறுக்க மாட்டார்கள்,” என்று யோசனை சொன்னாள் அவள்,

தாயிடம் வந்து அவன் சொல்லவும். தனக்கு மதிப்புத் தரும் மருமகள் என்று. மகாலட்சுமி உச்சி குளிர்ந்து போனாள்,

ஆனால் அவள் சங்கரியிடம் அது பற்றிப் பேசியபோது. என்னவோ அப்போதே திருமணமே ஆகிவிட்ட மாதிரி அந்தச் சித்தி சங்கரி பேசிய பேச்சில். மகாலட்சுமிக்கே தலை சுற்றிப் போயிற்று,

“இனிமேல். அனு உங்கள் வீட்டுப் பெண். அண்ணி,! மாப்பிள்ளையை எபபோது வேண்டுமானாலும் அழைத்துப் போகச் சொல்லுங்கள்,. எப்போது வேண்டுமானாலும் வந்து விடச் சொல்லுங்கள், அவர் சொத்து, அவர் இஷ்டம்,! இதிலெல்லாம் பட்டிக்காடு போல. நாங்கள் யாரும் தடை சொல்லவே மாட்டோம்,!” என்று. என்னவோ அதி நாகரீகவாதி மாதிரி காட்டிக்கொண்டு சங்கரி சொன்னதை. அப்படியே மகனிடம் திருப்பிச் சொன்னவள். “எதற்கும் பாட்டி ஏதும் சொல்லும்படி வைத்துக் கொள்ளாதே. நித்திலா,” என்று மகனிடம் எச்சரித்தாள்,

“நல்ல நாள் பார்த்துக் கூட்டிப் போங்கள். தம்பி,” என்றாள். அண்ணன் மனைவி யாமினி, “நாளைக்குக் கூட. நல்ல நாளாமே,! காலண்டரில். முகூர்த்தநாள் படம் பார்த்தேன்,”

ஆனால். சிற்றன்னையின் பீற்றலில் விவரம் அறிந்த அனுபமாவுக்கு. அப்படித் தனியே. அவர்கள் இருவர் மட்டுமாகச் செல்வது. அவ்வளவாகப் பிடிக்கவில்லை, வெகுளி போலக் காட்டிப் பேசினாலும். சங்கரியின் பேச்சுக்குள் எப்போதும். ஏதோ பொடி இருக்கும், நித்திலனோடு தனியே அனுப்பி. அதைக் கொண்டு. அவனை ஏதோ பிடிக்குள் வைக்கத் திட்டமிடுகிறாளா?

பெரிய தம்பி கண்ணன் இங்கே இருந்தால். பெற்றவளின் மனதை ஊகித்து அறிந்து. சரியான யோசனை சொல்வான், ஆர்,ஈ,சி,யில் இடம் கிடைத்து. படிப்புக்காக அவன் வெளியூர்

சென்றதில் இருந்து. அனுவுக்குக் கொஞ்சம் கையொடிந்தது போலத்தான்,

இப்போதும் திருமணம் உறுதி செய்யும் நிகழ்ச்சிக்காக வந்தவன். உடனே கல்லூரிக்குக் கிளம்பிப் போய்விட்டான், கிளம்பும்போது. “அம்மாவிடம் எச்சரிக்கையோடு இருக்கா, அவர்கள் சற்று அதிகமாக லொடலொடத்தால். இரு மடங்கு அதிகக் கவனம். உனக்குத் தேவை, யோசித்து நட,” என்று சொல்லிவிட்டுத்தான் சென்றிருந்தான்,

பலமுறை அனுபவம்தான், இந்த உடையில் ரதி போல இருப்பாய் என்று சித்தி ரொம்பச் சொல்லி. அதை நம்பி வாங்கினால். அவளுக்குக் கொஞ்சமும் பொருந்தாததாக இருப்பதோடு. விலையும் மிகவும் குறைவானதாக இருக்கும், விலைக்குத் தக. விரைவிலேயே சாயம் போய். கிழிந்து பல்லையும் இளிக்கும்,

இப்போதும். இந்த அதிகப்படி உற்சாகம். அவளைச் சிக்கலில் மாட்டி வைப்பதாகவே இருக்கக் கூடும்,

குறைந்த பட்சமாக. இந்தப் பெண் திருமணத்துக்காக ஏங்கிக் கிடந்ததாக நாலு பேரிடம் சொல்லவேனும். வாய்ப்பைத் தரலாம், அல்லது. பெரிய இடம் சிக்கெனப் பிடித்துக் கைப்பிடியில் வைத்துக் கொள்ளவும் எண்ணியிருக்கலாம்,

எனவே. என்னதான் நித்திலனைப் பார்க்கவும். அவனோடு பேசவும் மனம் ஏங்கினாலும். சித்தி சங்கரியின் தாராளத்தை அப்படியே ஏற்பது கூடாது,

யோசித்துவிட்டு. “இங்கே சித்தியை மறுத்து நான் எதுவும் சொல்வதற்கு இல்லை, ஆனால். நீங்கள் யாரையேனும் உடன் அழைத்து வாருங்களேன்? பெரியவர்களுக்குச் சந்தோஷமாக இருக்கும்,!” என்று நித்திலனிடம். அவள் கேட்ட விதம். அவனுக்கு மிகவும் பிடித்தது,

இருவருமே. எதுவும் அறியாத சின்னக் குழந்தைகள் அல்ல, கட்டுப்பாட்டோடு இருக்கத் தெரிந்தவர்கள்தான், ஆனால். அது உலகத்துக்கும் தெரியட்டும் என்கிறாளே,! கெட்டிக்காரி என்று நித்திலன் பெருமிதமாக எண்ணினான்,

எனவே. அவனுடைய சித்தி மகனைக் கூடக் கூட்டிக்கொண்டு.

அவளுக்கு மோதிரம் வாங்குவதற்காக. நித்திலன் சென்றான்,

உள்ளூர அவனுக்கு மிகுந்த கிளர்ச்சிதான், சின்ன அத்தை மகள் வனிதா பேசிய கேலி. மீண்டும் மீண்டும் நினைவு வந்து. உடல் சிலிர்க்க வைத்தது,

போட்டுப் போட்டுக் கழற்றிக் கழற்றிப் போட்டுப் பார்த்து சரியான அளவில் வாங்கச் சொன்னாளே,!

அவளது பட்டு விரல்களைத் தொடுவது பற்றிய கற்பனையே இப்படி என்றால். நிகழ்வு எப்படி இருக்கும்?,!

எத்தனையோ கற்பனைகளோடு போனால். அனுபமா. அவனது "உதவி"யை ஏற்கவே இல்லை,

"நானே அணிந்து பார்த்து அளவு சொல்கிறேன்," என்றவள். அவ்வாறே அவளது கவனத்தைக் கவர்ந்த சிலதை அணிந்து காட்டி. அவனுக்குப் பிடித்திருக்கிறதா என்று கேட்டு. அதன் பிறகே ஒன்றைத் தேர்ந்தெடுத்தாள்,

நித்திலனோடு கூட வந்திருந்த குருநாதனையும் அலட்சியப்படுத்திவிடாமல். "நன்றாக இல்லை என்றால். தயங்காமல் சொல்லுங்கள்," என்று. அவனிடமும் அபிப்பிராயம் கேட்டுக்கொண்டாள்,

விரைவிலேயே. மூன்று பேருக்குமே பிடித்ததாக ஒன்றைத் தேர்ந்தெடுத்து. பில் போட்டு. அந்த நகைக் கடையின் வழக்கப்படி. கடவுள் படத்தின் முன் வைத்துத் தரவும். அனுபமா அதை வாங்கி. நித்திலனிடம் கொடுத்தாள்,

அவன் திகைப்புடன் நோக்கவும். கன்னங்களில் செம்மை பரவ. முன்னே நடந்து சென்று. வாயில் அருகே நென்றதும். பக்கவாட்டில் சற்று ஒதுங்கி நின்றாள்,

பின்தொடர்ந்து அருகே வந்து நின்றவனிடம் மோதிர விரலை நீட்டி. "இப்போது போட்டு விடுங்கள், நீங்கள் முதல் முறையாக அணிவிப்பதைக் கழற்றவே கூடாது என்று நினைத்தேன்," என்று. மென்குரலில் இயம்பினாள்,

இதற்கு மேல் என்ன வேண்டும்? பூரித்துப் போனான் நித்திலன்,

வெண்பற்கள் புன்னகையில் பளீரிட. அவளது மெல்லிய

பூவிரலில் மோதிரத்தை அணிவித்து. மெல்ல வருடினான்,

உலகையே மறந்து. ஒருவரை ஒருவர் பார்த்தபடி இருவரும் நிற்க. அந்த மோன நிலையைக் கலைத்து. உரிமையோடு அவர்களைக் கேலி செய்யக் கூட. உடன் சென்ற குருநாதனுக்கே. மனம் வரவில்லை,!

ஆனால். இது போல. அவ்வப்போது பார்த்திருப்பார் போல,! நகைக்கடைக் கண்ணாடிக் கதவைத் திறந்துவிட வந்து காவலர் கூடப் புன்னகையோடு ஒதுங்கிப் போனார்,

இந்த இனிய மௌனத்தைக் கலைத்துக்கொண்டு. நித்திலனின் செல்ஃபோன் ஒலித்தது, வீணை ஒலி,!

முகம் இறுக. "ஒரு நிமிஷம்,!" என்று. சற்று விலகிப் போய்ப் பேசியவன் உடனேயே திரும்பி வந்தான்,

முகம் கட்டுப்பாட்டுக்குள் இருந்தாலும். "அனு..." என்று அழைத்த குரலில் பதற்றம் தெரிந்தது,

கவலையுடன் நோக்கியவளிடம். "அனு. தொழிற்சாலையில் ஒரு பிரச்சினை, நான் போனால்தான். சமாளிக்க முடியும்,! சாரிம்மா, குருவை உன்னைக் கூட்டிப் போய் விடச் சொல்லுகிறேன், ... " என்றவனின் பேச்சில் அவள் குறுக்கிட்டாள்,

"நானே. எங்கள் வீட்டுக்குப் போய்க் கொள்வேன், ஆனால் பெரிய பிரச்சினையா?" என்று கவலையுடன் கேட்டாள் அனுபமா,

"உம், ஆனால். என்னால் சமாளிக்க முடியாதது அல்ல, அதைப் பற்றிக் கவலைப்படாதே, ஆனால். குருவுடனேயே வீட்டுக்குப் போ, நாங்கள் வந்து கூட்டி வந்துவிட்டுத் தனியே அனுப்புவது சரியல்ல, குரு. சதாவுக்குச் சொன்னால். உடனே டாக்சி அனுப்புவான், ஆனால் அதுவரை ச்சு,! ஐஸ்கிரீம் பார்லருக்குப் போக வேண்டும் என்று நினைத்தேன், சாப்பிட்டுவிட்டுப் போங்கள், குரு. கூட்டிப் போப்பா, நான் வரட்டுமா? அனு...அனும்மா. சாரிம்மா,!" என்றான் உண்மையான வருத்தத்துடன்,

"பரவாயில்லைப்பா, இந்த ஒரு நாள்தானா? அடுத்துக் கிடைக்கிற நாளில் போகலாம், இப்போது. நீங்கள் கிளம்புங்கள்,!" என்றாள் அவள்,

ஒரு மாதிரியாக. நித்திலனுக்கு ஆதரவாகவே பேசி அனுப்பி வைத்தபோதும். அனுபமாவுக்குப் பெரிய ஏமாற்றம்தான், நித்திலனின் கார் கண்ணுக்கு மறையும்வரை பார்த்திருந்துவிட்டு. குருவிடம் திரும்பிக் கேட்டாள்,

“ஏன்  குரு. உங்கள் அண்ணனின் தொழிலில் எந்தச் சிக்கல் என்றாலும். இவர்தான் போவாரா? இவருடைய அண்ணன். அவர்தானே பெரியவர்? முதலில். அவரிடம்தானே போக வேண்டும்?......அல்லது. ஒருவரால் சமாளிக்க முடியாதபடி. ரொம்பப் பெரிய பிரச்சினையா? நான் பயந்து போவேன் என்று. நித்திலன் சொல்லாமல் மறைக்கிறாரா? “ என்று வினவினாள்,

நேரடியாக முகத்தைப் பார்த்து அனுபமா கேட்ட விதத்தில். குருநாதன் சற்றுத் திணறிப் போனான்,

அண்ணன் வீட்டுப் பிரச்சினை. அவன் அறியாதது இல்லை, அரசல் புரசலாக விஷயம் வெளியே கசிந்து. அவனுடைய அன்புக்குரிய இந்தச் சின்ன அண்ணனின் திருமணம் தடைப்பட்டு வருகிறது என்பதும் அவன் அறிந்ததே,

தன்னாலும் அது நேர்ந்து விடக் கூடாது என்று எண்ணி. “இதென்ன கேள்வி அண்ணி                   மோதிரம் போட்டுவிட்டதால். அண்ணி என்று கூப்பிடலாம்தானே. அண்ணி?” என்று பதவிசாகக் கேட்டு அவள் முகத்தில் மலர்ச்சியைக் கொணர்ந்தான்,

“ம், “ என்று சம்மதம் காட்டிச் சற்றே சிவந்து குழைந்தபோதும். அவள் தன் கேள்வியை மறந்து விடவில்லை, “சொல்லுங்கள். குரு, இன்று நித்திலன் இப்படி வரப் போகிறார் என்று. அங்கேயும் எல்லோருக்கும் தெரியும்தானே? பிறகும். இவரை ஏன் அழைத்தார்கள்? அதுவும். அவ்வளவு அவசரமாக?” என்று. விடாமல் விவரம் கேட்டாள்,

ஏண்டா. நித்திலனோடு வந்தோம் என்று தோன்றத் தொடங்கியது குருநாதனுக்கு, ஆனால். எப்படியோ போகட்டும் என்று நித்திலனை விடவும் அவனால் முடியாது, சற்று முன். சின்ன அண்ணன் முகத்தில் தோன்றிய பிரகாசம் அழியாமல் காத்தாக வேண்டும்,

அவசரமாக யோசித்து. “ஒஒரே உறையில் இரண்டு கத்திகள்

போல. ஒரே வேலையை இருவர் பார்க்கக் கூடாது. அண்ணி, அதனால். வேலையைப் பிரித்துக் கொண்டார்கள், புது பிசினஸ் பற்றிப் பேச்சு வார்த்தை . அது பற்றிய லாப நஷ்டக் கணக்குகள் எல்லாம் பெரிய அண்ணன் வேலை, அதைச் சரியான படி செயல்படுத்துவது. தொழிலாளர்களை வேலை வாங்குவது. இதெல்லாம் சின்ன அண்ணன், அதாவது... தொழிற்சாலை. முழுக்க முழுக்க அவன் பொறுப்புதான், தொழிலாளர்களிடம் நேரடித் தொடர்பு நித்தியண்ணனுக்குத்தான் உண்டு என்பதால். அங்கே பிரச்சினை என்றால். எல்லோருமே. அவனைத்தான் கூப்பிடுவார்கள், “ என்று தன்னால் ஆன மட்டும் கோவையாக விளக்கி முடிக்கும்போது. குருநாதனுக்கு வியர்வையில் சட்டை நனையத் தொடங்கிவிட்டது,!

நல்லவேளையாக. அதற்கு மேல் அனுபமா எதையும் கேட்டுக் குடையவில்லை, வருங்காலக் கணவனைப் பற்றிய விவரங்களை ஆவலாகக் கேட்டு. மனதுள் பத்திரப்படுத்தி வைத்தாள்,

குருநாதன் சொல்லி முடித்ததும். “ரொம்பவும் நன்றி. குருநாதன், சும்மாப் பார்க்க வருகிறார்கள் என்று நினைத்தால். சட்டென்று திருமணத்தை உறுதி செய்துவிட்டார்களா? எனக்கு. இவரைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை, எங்கள் வீட்டில்... சித்தியிடம் ...சித்திக்கு ரொம்ப வேலையா? அவர்களிடம் நிறையக் கேட்டுக் கொண்டிருக்க முடியாது, உங்கள் அண்ணனிடம் கேட்கக் கூட. எனக்குத் தயக்கமாகத்தான் இருந்திருக்கும், நல்லவேளையாகத் தப்பாகக் கருதாமல். அந்த வீட்டு நடைமுறை எல்லாம் சொன்னீர்கள், ரொம்ப தாங்க்ஸ்,! “ என்றாள் அனுபமா,

நடைமுறையையா சொன்னேன் என்று தன்னையே கேட்டுக் கொண்டவனுக்கு. உள்ளம் சுட்டது,

தன் பிழைக்கு ஈடு செய்கிறவன் போல. வருங்கால அண்ணியிடம் உற்சாகமாகக் கேலி பேசி. பிடிவாதமாக ஐஸ்கிரீம் சாப்பிடக் கூட்டிப்போய் உண்ண வைத்து. அவளது வீட்டில் அனுபமாவைக் கூட்டிப் போய் விட்ட குருநாதன். நேராகத் தன் வீட்டுக்குச் செல்லவில்லை,

மாறாக. அண்ணன் வீட்டுக்குப் போனான், அவன்

எதிர்பார்த்தது போலவே. நித்திலன் வீட்டில்தான் இருந்தான்,

முகம் சற்று வாடியிருந்தபோதும். தங்கை மகனை வரவேற்று. சிற்றுண்டி பானம் அளித்து. மகாலட்சுமி அவனுக்கு உபசாரம் செய்தாள்,

பிறகு. “என்ன குரு. அனுபமா ஒன்றும் தப்பாக நினைக்கவில்லையே?” என்று மெல்லக் கேட்டாள்,

“தொழிற்சாலையில் பிரச்சினை என்று சமாளித்தாகிவிட்டது, “ என்று தங்கை மகன் புன்னகை செய்யவும். நிம்மதிப் பெருமூச்சுடன் தன் வேலைகளைப் பார்க்கப் போனாள்,

பெரியன்னை காது கேளாத தூரத்துக்குச் சென்றபின். தமையனைப் பார்த்து “இதற்கு மேல். இந்த மாதிரி வேலைக்கு என்னைக் கூப்பிடாதே. அண்ணா, பாவம். உன்னிடம் பேச ஆசையாக வந்துவிட்டு. ஏன். என்ன என்று கேட்கும்போது. சாரிப்பா. முகம் மாறாமல் பொய் சொல்லக் கூடியபடி. என் அம்மா என்னை வளர்க்கவில்லை,” என்றான். கறார்க் குரலில்,

சற்று நேரம் அங்கே மயான அமைதி நிலவியது

# அத்தியாயம் -4

தொடர்ந்த அந்த அமைதியைக் கலைத்தவனும் குருநாதனேதான்,

என்னடா. நீயே இப்படிச் சொன்னால் எப்படி என்று. நித்திலன் ஏதாவது பேசியிருந்தால்கூட. மேலும் அவன் மறுத்து. வாதம் புரிந்திருப்பான், ஆனால். தோற்றுப் போனவன் போல. அவனுடைய அன்புக்குரிய அண்ணன் சோர்வுடன் அமர்ந்திருப்பதை. அவனால் பொறுக்க முடியவில்லை,!

எனவே. நிலைமையைச் சீர் செய்ய என்ன செய்யலாம் என்று. அவனே யோசனை கூறலானான்,

“அண்ணா. இதை இப்படியே விட முடியாது, நம்முள் ஒருவன் . இப்படி மடத்தனமாகத் தன்னைத்தானே அழித்துக் கொள்வதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கவும் கூடாதுண்ணா,! இப்போது அது அவனைத் தாண்டி. உன்னையும் பாதிக்கிறது எனும்போது. கட்டாயமாக ஏதாவது செய்தே ஆக வேண்டும்,! பெரியண்ணன்தான் மது மயக்கத்தில். புத்தியில்லாமல் நடந்து கொள்கிறான் என்றால். நாமும். சரிசரி என்று விட்டுவிடுவதா? ஒரு யோசனை. நித்தியண்ணா,. நாம் இருவருமாகச் சேர்ந்து. ஒரு தடாலடி வேலை செய்வோமா? பேசாமல் அண்ணனைத் தூக்கிப்போய். மறுவாழ்வு மையம் எதிலாவது சேர்த்து விடலாமா? முதலில். அய்யோ குய்யோ என்றாலும். திருந்தி வந்த பிறகு. பெரியண்ணிக்கு சந்தோஷமாகத்தானே. இருக்கும்? சொல்லு,. செய்துவிடுவோமா?” என்று கேட்டான்,

சோர்ந்த குரலில். “உச்சு”க் கொட்டினான். பெரியவன், “இந்த யோசனை. நானும் நினைத்துப் பார்த்தேன். குரு, இதற்குப் பெரிய தடையாக இருப்பது. யார் தெரியுமா?

“நம் அண்ணி,! யாமினி அண்ணி, அவர்கள் அம்மா பேச்சைக் கேட்டுக்கொண்டு. அப்புறம். ஆண்பிள்ளையாக அனுப்ப மாட்டார்களாமே என்று அழுகிறார்கள், இவர்கள் எல்லாம் கல்லூரி வரை சென்று என்னதான் படித்தார்களோ. தெரியவில்லை, கொஞ்சம் கூடவா. பொது அறிவு இருக்காது? அப்படிக் கிடையாது என்றால்.

அம்மாக்காரி வந்து கத்துகிறார்கள்,! திருப்பிச் சொல்ல முடியாத வார்த்தைகள், அதைக் கேட்டுவிட்டு. அம்மாவுமே பயந்து. வேண்டாம் என்கிறார்கள்,! இது பற்றி. மருத்துவர்களையே அழைத்து வந்து விளக்கம் சொன்னாலும். காதில் வாங்கிக் கொள்வது இல்லை,! ஆப்பு அசைத்த குரங்கு என்பார்கள், அதைப் போல மாட்டிக் கொண்டிருக்கிறேன். குரு,

"மருத்துவத் தொழிலில். பிரசவம் பார்க்கிற டாக்டர்களுக்கு. நேரம் சொந்தமல்ல என்பார்கள், ஏனென்றால். எந்த நேரம் ஒரு கர்ப்பிணிப் பெண்ணுக்குப் பிரசவ வலி வரும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாதாம், நம் அண்ணனுக்கும் அப்படித்தான், எந்த நேரம் என்றாலும். போட வேண்டும் போலத் தோன்றினால். உடனே குடிக்கப் போய்விடுவான், சரிடா. குடிக்கிறவர்கள் எல்லாருமா இப்படி மொடாக் குடிகாரர்களாக இருக்கிறார்கள்? அளவோடு நிறுத்துவதில்லை? இவனை. அப்புறம் தூக்கித்தானே வர வேண்டியிருக்கிறது,! அது என் பொறுப்பு, அதுவும் ஊர் அறிந்து கேவலமாகி விடாமல். காதும் காதும் வைத்த மாதிரி. ரகசியமாகச் செய்ய வேண்டுமாம்,! குடும்ப மானம் வானமேறிப் பறந்துவிடுமாம்,! கூத்துதான். போ,!" என்றான் நித்திலன் வெறுப்பும். சலிப்புமாக,

குருநாதனின் மனம். சின்ன அண்ணனுக்காகப் பாகாய் உருகிப் போய்விட்டது,

சட்டென நினைவு வர. "அண்ணா. ஒரு முக்கிய விஷயம், பெரிய அண்ணன் மாமியார் வேறு. அண்ணனுக்காக உயிரையே நீ கொடுப்பாய் என்று. அனுபமா அண்ணி வீட்டில். அவர்களுடைய சித்திக்கு மேல் அலட்டினார்கள், என்னவோ குறிப்புக் காட்டுவது போலப் பேச்சு இருந்தது, எதற்கும். கல்யாணம் வரை எச்சரிக்கையோடேயே இரு," என்றான் சித்தி மகன்,

நம்பிக்கையற்றுத் தோளைக் குலுக்கினான் பெரியவன், "நான் என்னத்தை ஜாக்கிரதையாக இருப்பது? அண்ணன்தான். எந்தச் சாக்கடையில் எப்போது கிடந்து புரளுவான் என்று தெரியவில்லையே,! அனு வீட்டு முன்னாலேயே விழுந்து கிடக்காமல் இருந்தால் சரி,! " என்றான் கசந்த குரலில்,

"ஆனால். உனக்கும் அவளுக்கும் பொருத்தம் பிரமாதமாக இருக்கிறதுண்ணா, பிரிய நேர்ந்து விடாமல் கவனமாக இரு, ஆனால்.

அண்ணன் செய்வதற்கு. நீ எப்படிப் பொறுப்பாவாய்? அப்படியெல்லாம் காரணம் சொல்லிக் கல்யாணத்தை நிறுத்துவார்களா. என்ன? அவன் குடிப்பது. உன் தப்பில்லையே,! எடுத்துச் சொன்னால் புரிந்துகொள்ள மாட்டார்களா?"

"வாதத்துக்குச் சொல்லலாம்தான், ஆனால். நம்மையே எடுத்துக்கொள்,. நம் பிரமீலாவை. ஒரு குடிகாரன் வசிக்கும் வீட்டில் கொடுப்போமா? குடிகாரன் எந்த நேரத்தில் என்ன செய்வானோ என்று பயப்பட மாட்டோமா? அதே போலத்தானே. இந்தப் பெண்ணின் வீட்டிலும் நினைப்பார்கள்?"

"உண்மைதான், ஆனால். உன்னை எண்ணிப் பார்க்கும்போது. ரொம்ப அநியாயமாகத் தோன்றுகிறது, " என்கிறான் தம்பி,

கண்களை இறுக மூடித் திறந்தான் நித்திலன், "இப்போதெல்லாம். வாழ்க்கையில் நியாயத்துக்கு இடம் இருப்பதாக எனக்கு நம்பிக்கையே கிடையாது. குரு, அதுதான் இந்த வம்பே வேண்டாம் என்று பார்த்தால். அம்மா ஒத்துக் கொள்ள மாட்டேன் என்கிறார்கள், முப்பது ஆண்டுகளாகத் தனியே பட்டுப் பட்டுச் சலித்துவிட்டதாம், மனம் விட்டுப் பேசவேனும் ஆள் வேண்டுமாம்,! எங்கள்  வீட்டில் அம்மா ஓர் இயந்திரம், கோபமோ எரிச்சலோ. எவளியே காட்ட முடியாமல். தனக்குள்ளேயே புழுங்கிக் கொண்டு "

"அம்மா கூடச் சொன்னார்கள். அண்ணா, பெரியம்மா திருமணத்தின்போது. அவர்களுக்கு பதினெட்டே வயதுதானாமே,! நம் பாட்டிக்கு ஏதோ உடம்பு நன்றாக இல்லை என்று பள்ளிக்கும் சரியாக அனுப்பவில்லையாமே,! கல்யாணம் ஆன பிறகு. பிறந்த வீட்டுக்கு அனுப்பவே மாட்டார்களாமே,! அங்கிருந்து யாரும் வந்தாலும் பிடிக்காதாம், இந்தப் பாட்டி வேறு எப்போதும் திட்டுவார்களாம்,!......"

"இப்போதும். வாயைத் திறந்தால் வசைதான், கிட்டத்தட்ட இருவருக்கும் பேச்சு வார்த்தையே கிடையாது, அதனால்தான். தனக்கு ஒரு துணை வேண்டும் என்று. அம்மா கேட்டபோது. என்னால் மறுக்க முடியவில்லை,!"

"ஏய் அண்ணா. ரொம்பத்தான், ரொம்பத்தான் பீலா விடாதே,

எனக்கும் கண்ணிருக்கிறது, அனுபமா அண்ணியை நீ பார்க்கிற பார்வையும். வழிவதும் இதொன்றும் பெரியம்மாவுக்காகச் செய்கிற தியாகம் மட்டுமே அல்ல,! “

“உண்மைதான், உன்னிடம் சொல்வதற்கு என்னடா? எதனாலாவது திருமணம் நின்றுவிடுமோ என்று நினைத்து. அவ்வப்போது. என்னமாக மனது துடிக்கிறது. தெரியுமா?” என்று கூறி. உண்மையை ஒப்புக் கொண்டான். பெரியவன்,

“திவ்வியமாய்,!” என்று சிரித்தான் சின்னவன், “அவர்களைப் பார்த்தாலேதான். முகத்தில் ஆயிரம் வாட் பல்ப் போட்ட மாதிரி. பளீரென்னு உன் முகத்தில் ஒளி வீசுகிறதே,! அந்த மாதிரி நீ சிரித்து. நான் பார்த்ததே இல்லை. தெரியுமா. ஈயென்று அத்தனை பற்களையும் காட்டிக்கொண்டு… “ என்று அவன் கேலியாகப் பேசவும். அவ்வளவு நேரம் இருந்த கனத்த சூழ்நிலை மாறி. இருவரும் இலகுவாகப் பேசிசி சிரிக்கலாயினர்,

கேலியாகக் குருநாதன் கூறினாலும். அனுபமாவிடம் நித்திலன் முழுமையாக மனதைப் பறிகொடுத்துவிட்டது.நூறு சதவீதமான முழு உண்மையே,

அவள் இல்லாமல். தன் வாழ்வில் இனி சந்தோஷம் கிடையாது என்றும். அவன் நிச்சயமாக உணர்ந்தான், எதிரொலி போல. அதே மனநிலையே அனுபமாவுக்கும் இருப்பதும் அவனுக்கு உறுதியே,!

எனவே. இந்தத் திருமணம் தடைப்படாமல் நடப்பதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டான்,

அண்ணன் மகேந்திரனின் குடிப்பழக்கம் தெரிந்தால்கூட. அனுபமாவின் வீட்டில். பெரிதாகக் காட்டிக் கொள்ள மாட்டார்கள் என்று. என்னதான் உறுதியாக அன்னை சொல்லியிருந்தாலும். அதை சோதித்துப் பார்க்க. நித்திலனுக்கு விருப்பம் இல்லை,

ஒருவேளை. தாயாரின் ஊகம் தப்பாகிப் போனது என்றால். அதன் விளைவை அவனால் தாங்க இயலாது,

முதலாவதாகத் தனக்குத் தகவல் தெரிவிப்பதற்காக மட்டுமாய். அண்ணனுக்கு எடுபிடி மாதிரி அவனோடு சுற்ற அனுப்பியனுக்குத் தொழிற்சாலையில் வேறு வேலை கொடுத்து அனுப்பிவிட்டு. அண்ணனின் முழுப் பாதுகாப்பாளனாக. வாட்டசாட்டமான

ஒருவனை வேலைக்கு அமர்த்தினான்,

மகேந்திரன் அளவு மீறிக் குடிப்பதை அவனாலும் தடுக்க முடியாதுதான், ஆனால். குடித்து மயங்கிக் கிடக்கும்போது. அவனைத் தூக்கிப் போய். நிறுவனத்தின் “கெஸ்ட்ஹவுசு”க்குத் தூக்கிப் போய்ப் படுக்க வைத்துவிட்டு. நித்திலனுக்குத் தகவல் தெரிவிக்கும் பணி. அவனுக்கு அளிக்கப் பட்டது, இதன் மூலம். பலர் காணக் கூனிக் குறுகி. அண்ணனை இழுத்து வரும் வேலை நின்றது,

அந்த மாதிரி நிலையில். அவனை யாரும் பார்க்கவும் முடியாதல்லவா?

அடுத்து. அனுபமாவின் வீடு. குடும்பத் தொழில் இருக்கும் இடங்களுக்கு எதிர்ப்புறமாக வெகு தூரத்தில். அதே சமயம் அவர்களது சொந்த வீடு தாண்டியும் ஓரளவு தள்ளியே இருந்த . பார் வசதி உள்ள சில உயர் ரக ஒயின் ஷாப்புகளில். அண்ணனுக்குக் கணக்கு வைத்துக் கொடுத்தான்,

குடிக்கத் தோன்றும்போது. அங்கே போய் மனம் கொண்ட மட்டும் குடித்துவிட்டுக் கையெழுத்துப் போட்டுவிட்டால் போதும், வரும் தொகைக்கு மொத்தமாகச் செக் கொடுத்து விடலாம், டிப்சுக்கு மட்டும் கொஞ்சம் பணம் கையில் வைத்துக் கொண்டால் போதும்,

மகேந்திரனுக்கு. இந்த ஏற்பாடு பிடித்தமாகத்தான் இருந்தது, ஏனெனில். கண் மண் தெரியாத அளவில் போதை ஏறிவிட்டால். கொடுக்கும் பணம் ஆயிரம் ரூபாய் நோட்டா. ஐநூறு ரூபாய் நோட்டா என்று அவனுக்குக் கண்டுபிடிக்க முடிவதில்லை,! இதில். பேரர்களிடம் நிறையப் பணம் இழக்கிறோமோ என்ற ஐயம் அவனுக்கு எப்போதும் இருந்தது,

ஆனால். அதற்காக அளவோடு ஏற்றும் முடிவுக்கு அவன் வந்ததே இல்லை, போனால் போகிறது என்ற அலட்சியம்தான், அவனிடம்தான் நிறையப் பணம் இருக்கிறதே,!

ஆனால். பெரிய எதிர்ப்பு யாமினியிடம் இருந்து வந்தது,

“பாங்க்கில் இருந்து பணம் எடுத்து வரும் சிரமம் கூட இல்லாமல். நினைத்தால் போய்க் கொட்டிக்கொள்ள வசதி செய்து கொடுக்கிறீர்களே,! அப்படியானால். நிறையக் குடித்து. குடல் வெந்து சாகட்டும் என்று. நீங்கள் கூட நினைத்துவிட்டீர்களா? என்

அம்மா அப்போதே சொன்னார்கள். இந்த வீட்டில் யாருக்கும் பாசமே கிடையாது என்று,! அது நிஜம்தான் என்று காட்டி விட்டீர்களே,!” என்று அழுதாள்,

அவள் பேசி முடிக்குமட்டும். வெகு சிரமப்பட்டுப் பல்லைக் கடித்துப் பொறுமை காத்தான் நித்திலன்,

பிறகு. “நீங்கள் பேசி முடித்து விட்டீர்கள் என்றால். நான் சொல்லுவதையும் கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்கள். அண்ணி, முன்பு அண்ணன் கண்ட இடங்களில் குடிக்கும்போது. சில இடங்களில் கலப்படச் சரக்குகளையும் சேர்த்துக் கொடுத்திருக்கிறார்கள், அது தெரியாமல். அண்ணனும் உள்ளே தள்ளியிருக்கிறான், அதுதான். அவ்வப்போது அவன் உடம்பைப் பாதித்தது, இரண்டு முறை. வாந்தி. வயிற்று வலி என்று மருத்துவமனைக்குச் சென்றோமே. நினைவிருக்கிறதா? இப்போது நான் கணக்கு வைத்துக் கொடுத்திருக்கும் இடங்கள். பெரிய பெரிய ஆட்கள் வந்து போகும் இடங்கள், கலப்படத்துக்கே வழி கிடையாது, செலவு கொஞ்சம் அதிகம்தான், ஆனாலும். அண்ணனின் ஆரோக்கியம் கெடாது என்று அதாவது. மலிவான கலப்படச் சரக்குகளால் ஏற்படக் கூடிய ஆபத்து இராது என்று எண்ணினேன், அத்தோடு. கணக்கில்லாமல் நிறையப் பணத்தைக் கொண்டு செல்லுவதும் எவ்வளவு பெரிய ஆபத்து என்று உங்களுக்குத் தெரியாதா? வெறும் பத்தாயிரம் ரூபாய்க்காகக் கழுத்தை அறுக்கிறார்களே,! பத்திரிகைகளில் படிக்கவில்லை?” என்று கேட்டான்,

அர்த்தம் புரிந்து யாமினியின் முகம் வெளுப்பதைக் கவனித்துவிட்டு மேலே பேசினான், “அண்ணி. அந்த மாதிரி ஆபத்திலிருந்து. இத்தனை காலம் அண்ணன் தப்பியதே அதிசயம்,! குடித்து உடம்பைக் கெடுத்துக் கொள்வது போதாது என்று. அந்த ஆபத்தையும் எதற்காக வலிய அழைப்பது? அதனால்தான் இந்த ஏற்பாட்டைச் செய்தேன், சொல்லுங்கள் அண்ணி. நான் பாசம் இல்லாதவனா? உங்களுக்கு அப்படித் தோன்றினால். தயங்காமல் சொல்லுங்கள், இந்த ஏற்பாட்டை மாற்றி விடுகிறேன்,” என்றான்,

“ஐயோ. வேண்டாம்,” என்று அவள் வாயாலேயே சொல்ல வைத்தான்,

“உங்களைத் தப்பாக நினைத்துப் பேசிவிட்டேன் மன்னித்துவிடுங்கள், எனக்கு என்ன செய்வது. சொல்லுவது என்றே தெரியவில்லை,!” என்று வழக்கம்போல. யாமினி சோக நாயகியாக அழுதாள்,

நித்திலனுக்கும் வழக்கம் போல எரிச்சல் உண்டானாலும். விலகிப் போகாமல். எரிச்சலை அடக்கிக்கொண்டு பேசாமல் நின்றான்,

எல்லோருக்கும்தான் குழந்தை பிறக்கிறது, பேறுகாலத்துக்குப் போகிறவர்கள். இப்படியா பிள்ளை பிறந்து பத்து மாதங்கள் பிறந்த வீட்டில் டேராப் போடுவார்கள்?

சொத்தைப் பிரித்துக்கொண்டு வந்து. தனிக் குடித்தனம் போடும்படி. உபதேசம் நடந்ததாகக் கேள்வி,

தாத்தா. தாத்தாவுக்குக் கீழ் அப்பா எல்லோரும் ஒன்றாக வாழும் வீடு இது, செலவுக்குத் தாராளமாகப் பணம் கிடைக்குமே தவிர. எந்தச் சொத்தை. யாரிடம் கேட்டுப் பிரிப்பது? எல்லாமே. தாத்தாவின் சுய சம்பாத்தியம் வேறு,!

படிக்கிற காலத்திலேயே. மகேந்திரனுக்கு. ஒரு மாதிரி நண்பர்கள் சேர்ந்தால். அவர்களோடு லேசாகத் “தண்ணி” போடும் பழக்கம் இருந்தது, உண்மையாகவே. லேசாகத்தான்,

பெரிய இடத்துப் பிள்ளை என்றால். அப்படி இப்படி இருப்பதுதான் என்று. பாட்டி அதையும் பெருமையாகவே சொல்லிக் கொள்வாள்,! தாத்தாவும் தலையாட்டுவார்,

மகாலட்சுமி மகனைக் கண்டிக்க முயன்றால். அவளைத்தான் அடக்குவார்கள், அப்போதெல்லாம் ஈசுவரன் கண்ணிலேயே தென்பட மாட்டார், எப்போதும் போல. மகாலட்சுமிதான் அடங்கிப் போக நேரும்,

மறைவாகச் சென்று அன்னை கண்ணைத் துடைத்துக் கொள்வதைக் காணும்போது. நித்திலனின் மனம் கொதிக்கும், சின்னப் பையன் என்பதற்கு ஏற்ப. தாய்க்கு ஆதரவாக ஓரிரு முறை வெளிப்படையாகப் பேசியும் இருக்கிறான், கையில் பணம் இல்லாவிட்டால். எப்படிக் குடிப்பான் என்றுகூடச் சொன்னதுண்டு,

நியாயம் என்று நினைத்துச் சொன்னதுதான், ஆனால். கை நிறையப் பணத்தையும். நெஞ்சு நிறையக் கண்மூடித்தனமான பாசத்தையும் வைத்திருந்த தாத்தா வேறு மாதிரி செயல்படக் கூடும் என்று. அப்போது அவன் கற்பனை கூடச் செய்ததில்லை,!

சும்மாவே. ஒரே பிள்ளை என்றாலும் மகன் ஈசுவரனிடம் அவருக்கு நம்பிக்கை கிடையாது, மகனுக்குத் தன் திறமை கிடையாது என்று முடிவு செய்திருந்தார், அது பெருமளவு உண்மையே என்றாலும். தானேதான் எல்லாம் என்கிற தகப்பனாரால். உள்ள முயற்சியும் கெட்டு. விட்டுவிட்டவர். ஈசுவரன், கடைசியாக. ஜம்பமாகப் பேசுவதும்  எதையும் உருப்படியாகச் செய்யத் தெரியாதவருமான ஒரு வெற்று வேட்டாகிப் போனார். அவர்,!

தொழில் நடத்துவதில் மகனிடம் நம்பிக்கை இல்லாதவரே என்றாலும். பேரப் பிள்ளைகளிடம். அவருக்குப் பிரியத்தோடு. நம்பிக்கையும் இருந்தது, இருவரையுமே தொழிலில் பழக்கினார்,

அதிலும். சின்னப் பேரனிடம் தன்னையே கண்டவர். தொழிலில். அவனுக்கு அதிக உரிமையும் கொடுத்திருந்தார், மகேந்திரனும் அதைத் தவறாக எண்ணியதில்லை,

தம்பியின் திறமையை ஒப்புக்கொண்டு. அவனது அதிகாரத்தை. விருப்புடனேயே ஏற்றிருந்தான்,

திருமணமாகி. அவனுக்கு மகனும் பிறந்து. குடும்பத்தில் எல்லோர் மனதையும் மகிழ வைத்திருந்தான்,

இந்தச் சமயத்தில்தான். தாத்தாவுக்குத் திடுமென ஒரு தரம் “ஸ்ட்ரோக்” வந்து. எல்லோர் வாழ்வையும் புரட்டிப் போட்டுவிட்டது,

மரணத்தின் வாயில் வரை சென்று திரும்பிய பெரியவர். இந்த உடல் நலக் குறைவில் மிகவும் பயந்துபோனார், அதுவும் தனக்காக அல்ல, செல்லப் பேரனுக்காக,!

பட்ட காலிலேயே படும் என்பது போல. மகளையும் பேரப்பிள்ளையையும் ஆயுதங்களாகப் பயன்படுத்தி. சொத்தில் பாதியைப் பிரித்து வாங்கிக்கொண்டு வருமாறு. யாமினியுடைய தாய். இதே நேரத்தில்தான் மருமகனுக்கு ஓதத் தொடங்கினாள்,

ஓயாத உபதேசம்,!

ஆனால். எல்லாமே தாத்தாவின் சுய சம்பாத்தியம் என்பதோடு. தம்பி இல்லாமல் தொழிலைச் சமாளிக்கத் தன்னால் முடியாது என்பதும் புரிந்திருந்த மகேந்திரனுக்கு. வீட்டில் அது பற்றிப் பேச விருப்பம் இல்லை,

இப்போது மாமியார் வீட்டு விரட்டலும். சொந்த வீட்டில் அதைச் சொல்லப் பிடிக்காத உளைச்சலும் சேர்ந்து. மகேந்திரனை அலைக்கழித்தன, கூடவே. உருப்படியாக ஒரு முடிவெடுக்கும் திடமும் இல்லாது போகவே. எல்லாவற்றையும் போதையில் மறக்க முயன்றதில். “தண்ணி” ரொம்பவும் அதிகமாயிற்று,

தாராளமாகக் கையில் புழங்கிய பணம் முழுதும் குடித்துவிட்டு. வீட்டுச் செலவுப் பணத்தில் தருமாறு மகேந்திரன் தாயிடம் கேட்டு. அவள் கொடுக்க மறுத்திருக்கிறாள்,

அதே போல. தொழிற்சாலையில் அனாவசியமாகப் பணம் எடுக்கக் கூடாது என்று நித்திலனும் கூறியிருந்தான்,

துரதிர்ஷ்டவசமாக. இந்த இரண்டையுமே தாத்தா கேட்டுவிட நேர்ந்துவிட்டது,

சும்மாவே. மூத்த பேரன் என்றால் உயிர், இப்போது. கொள்ளுப் பேரனை வேறு பெற்றுத் தந்திருக்கிறானே,!

செலவுக்குப் பணம் இல்லாமல். செல்லப் பேரன் தாயிடமும் தம்பியிடமும் கையேந்துவது போலக் கற்பனை தோன்றிவிட. அந்த மாதிரி நிலை ஏற்பட்டுவிடாமல். மகேந்திரன் கைக்கு நிறையப் பணம் கிடைக்கும்படி உயில் ஒன்றை எழுதிப் பதிவும் பண்ணிவிட்டார்,

அதன்படி. லாபத்தில் அவனது பங்கு. டைரக்டர் சிட்டிங் பணம் எல்லாம். தானாக அவன் வங்கிக் கணக்குக்குப் போய் விடும், இவை போக. தாத்தாவின் பங்குகளின் வருமானத்தில் பாட்டிக்கு ஒரு சிறு தொகை போக மற்றதும் மகேந்திரனுக்கே சென்றது,

இப்படி எழுதி வைத்துவிட்டு. மனிதர் இறந்தும் போனார்,!

உயில்படி. இவ்வளவு பணம் அவன் கணக்கில் இருக்கிறது என்று ஆனதில் இருந்தே. மகேந்திரனுக்குக் கண் மண் தெரியாத குடிதான்,!

அளவு மீறிக் குடித்துவிட்டு எங்கேனும் விழுந்து கிடப்பதும்.

அல்லது ஏதாவது வம்புகளில் மாட்டிக் கொள்வதுமாக இருப்பவனை. அந்தப் பிரச்சினைகளில் இருந்து சத்தமின்றி மீட்பது. சின்ன மகனான நித்திலனின் பொறுப்பு ஆயிற்று,

பெரிய தொழில் குடும்பம் என்பதால். பத்திரிகைகளில் அடி பட்டுவிடுமோ என்ற பயம், அதற்கென்றேதான் பல உதிரிப் பத்திரிகைகள் இருக்கின்றனவே,!

நினைத்தது ஒன்று,. நடந்தது வேறொன்றாகி விடவே. அவன் மாமியார் பயந்துபோய். மகளையும் பேரனையும். மருமகன் வீட்டுக்கு அனுப்பி வைத்தாள்,

ஆனால். ஏழெட்டுமாதங்களுக்கு முன்பாக. மனைவி மகனுக்காக ஏங்கியிருந்த மகேந்திரன். இப்போது அடியோடு மாறிப் போயிருந்தான், குடும்பத்தை விடக் குடிதான் அவனுக்குப் பெரிதாக இருந்தது, யாமினியின் கொஞ்சல். கெஞ்சல். கடைசியாகக் கண்ணீர் எதற்கும் எந்தப் பயனும் இருக்கவில்லை,!

விரும்பிய பயன் இல்லாது போகவே. மாமியாரம்மாள் வேறு மாதிரித் திட்ட மிடலானாள், அண்ணனுக்காக வாழ்வை அர்ப்பணிக்க. நித்திலன் கடமைப் பட்டவன் என்பது போல. அவளது பேச்சு மாறியது,

இது நடந்துவிட்டால். முழுச் சொத்துமே. அவளுடைய பேரனுக்குத்தானே வந்து சேரும்? முட்டாள் மகளைக் கைக்குள் போட்டுக்கொண்டு. அவளே ஆளலாமே,!

இந்தக் குறிக்கோளுக்கு ஏற்ப. அண்ணன் மாமியார் காய் நகர்த்தலானாள்,

எல்லாமாக வீடு. நித்திலனுக்குக் காடாகிப் போயிற்று, தொழிலில் என்னதான் திறமைசாலியாக இருந்தாலும். வீட்டுக்குள் அவனது முயற்சிகள் எதுவும் பலிக்கவில்லை, ஓரளவுக்கு மேல். எப்படியோ போகட்டும் என்று. அவனுக்கும் வெறுப்பாகி. நடப்பது நடக்கட்டும் என்று விட்டுவிட்டான்,

இப்படியொரு விரக்தி மனப்பான்மையில். இதுவரை இருந்தவனுக்கு. அனுபமாவைப் பார்த்ததும். மீண்டும் மனதில் எழுச்சி ஏற்பட்டது, இதை நிறுத்தி. எப்படியும் வாழ்வில் ஜெயிக்க வேண்டும் என்று. பல்வேறு விதமாக முயற்சி செய்ய. உந்துதலும்

உண்டாயிற்று,!

அதனாலேயே. எரிச்சலை அடக்கிக்கொண்டு. அண்ணியின் அழுகை நிற்கும்வரை. பொறுமை காத்து. அங்கேயே நின்றான்,

கண்ணீரை விட்டால். இவளுக்கு வேறு ஒன்றும் தெரியாது,! அழுது அழுது. அதிலேயே ஆறுதல் காணத் தொடங்கிவிட்டாள்,. இதற்கு மேல் இவளிடம் சொல்லிப் பயனில்லை என்று வழக்கம் போல விலகிப் போய்விட்டால். அவனுக்கும் அல்லவா. இப்போது நஷ்டமாகும்,!

பொறுமையோடு காத்திருந்து. ஒருவாறு யாமினி அழுது முடித்ததும். அவளிடம் தன் யோசனையைச் சொன்னான்,

நடக்குமா என்று முதலிலேயே எதிர்மறையாகச் சந்தேகப் பட்ட யாமினிக்கு நம்பிக்கை ஏற்படுத்தி. முயற்சி பண்ண வைத்தான்,

அவளும் செய்தாள், ஆனால்

மனிதனின் திட்டங்மள் அப்படியேவா நடக்கின்றன?

# அத்தியாயம் - 5

யாமினிக்கும் நல்ல வாழ்வு தேவைதானே?

அவளுடைய தாய்க்குப் பணமும் சொத்துமே பிரதானமாகத் தோன்றலாம், ஆனால். பணத்தைக் கட்டிக்கொண்டு சிரிக்க முடியுமா? மகிழ முடியுமா?

ஏதோ அவ்வப்போது நண்பர்களோடு சேர்ந்து குடித்தாலும். மனைவியிடம் மிகவும் பிரியமாக இருந்தவன்தானே. மகேந்திரன்?

பிள்ளை என்று ஆனபோது எப்படி மகிழ்ந்தான்,! பூபால் பிறக்கும்போது. பசி தாகம் பாராமல். மருத்துவமனையிலேயே உட்கார்ந்திருந்தானே,! பிறகும் ஓடி ஓடி வரத்தான் செய்தான், ...,

இந்த அம்மா மட்டும் சொத்தைப் பிரி. தனியே வா என்று கண்டபடிப் பேசத் தொடங்கியிராவிட்டால். இன்னமும் அதே பிரியத்தோடுதான் இருந்திருப்பான்,!

“நீங்கள்தான் மனைவி, பூபால்தான் பிள்ளை, இந்த உறவைக் கொண்டு. அண்ணனை வீட்டில் கட்டிப் போட முயற்சி செய்யுங்கள்,” என்று நித்திலன் தம்பி சொன்னதில். அவனது சுயநலமாக என்ன இருக்கிறது?

குடியை மறந்து. அண்ணன் நல்லபடியாகக் குடும்பம் நடத்த வேண்டும் என்கிற ஆசைதான் தெரிகிறது,

அவனைப் போய். சுயநலம் பிடித்தவன் என்று எப்போதும் அம்மா சொல்வதுதான் தப்பு,! எப்போதும் நித்திலனிடம் குறை தேடுவதை விட்டுவிட்டு. மகள் வாழ்க்கை சீர்ப்படுவதற்கான வழியை அம்மாவும் தேடினால் நல்லது,!

நித்திலனின் யோசனை பற்றி. அன்னையிடம் அபிப்பிராயம் கேட்கலாமா என்று யோசித்துவிட்டு. வேண்டாம் என்று. யாமினி முடிவு செய்தாள்,

கொழுந்தன் நல்லது சொல்கிறான் என்று நிச்சயமாகத் தெரிந்தபின். அதைப் பற்றி இன்னொரு அபிப்பிராயம் கேட்டு மனதைக் குழப்பிக் கொள்வானேன்? அதை விட. அவன் சொன்னது போல நடப்பதே நல்லது,

இப்படி எண்ணித்தான். கணவனிடம் சோக முகம் காட்டி அழுவதை. குற்றம் சாட்டி வாதமிடுவதை நிறுத்தி. மகனை அவனிடம் கொண்டு நிறுத்தி. இப்படிச் செய்கிறான்,. அப்படி விளையாடுகிறான் என்று பேசத் தொடங்கினாள்,

இன்னமும் மனைவியிடம் முகம் கொடுத்துப் பேசாவிட்டாலும். மகனைத் தொடுவது. தூக்குவது. அவனோடு விளையாடுவது என்று பிள்ளையோடு. மகேந்திரன் பழகத் தொடங்கினான்,

இது வீட்டில் எல்லோருக்குமே மகிழ்ச்சியை அளித்தது,

பாட்டி நாகவல்லி அம்மாள். பேரன். கொள்ளுப் பேரனோடு சேர்ந்து நின்று ஃபோட்டோ எடுத்துக் கொண்டாள்,

“இப்படியே போனால். மகேன் குடியை விட்டுவிட்டுத் தொழிலில் உனக்கு உதவியாக இருப்பான்,” என்று மகாலட்சுமி சந்தோஷப்பட்டாள்,

“இன்னும். அவர் என்னிடம் பேசுவதே இல்லை,!” என்று வருத்தப்பட்டபோதும். “ஆனால். உங்கள் ஐடியா நல்லதாகத்தான் தெரிகிறது,. தம்பி, எப்படியும் பிள்ளையிடமாவது பிரியம் காட்டுகிறாரே,! அதுவே பெரிது,!” என்று பெருமூச்சு விட்டாள் யாமினி,

இந்தச் சிறு மாற்றம். கொஞ்சமும் பிடிக்காதது. யாமினியைப் பெற்றவளுக்குத்தான்,

ஏழெட்டு நாட்களாக. மகள் ஃபோனில் புலம்பக் காணோமே என்று பார்க்க வந்தவள் விவரம் அறிந்ததும். “உச்சுக் கொட்டி. தாடையைத் தோளில் இடித்து வக்கணை காட்டினாள்,

“அப்படித்தான் மாப்பிள்ளை திருந்தி விடப் போகிறார்,. மழையும் கொட்டோ கொட்டென்று கொட்டி. இந்தச் சென்னை மாநகரமே வெள்ளத்தில் முழுகி விடப் போகிறது,! நடக்கிற காரியத்தைச் சொல்லுடி,!” என்றாள் மகளிடம் ஏளனமாக,

“மெய்தான். அம்மா, சரியாக எட்டு நாட்களாக. மகி குடிக்கப் போகவே இல்லைம்மா, இப்படியே பிள்ளை ஆசையில். தண்ணியை மறந்துவிட்டார் என்றால். எனக்கு வேறு என்ன வேண்டும்?” என்றாள் தாயிடம்,

வேறு என்னவா? சொத்துடீ,. அதுவும் கோடிகளில் என்று எண்ணியதை வாய்விட்டுச் சொல்லாமல். "என்னவோடி. சூரியன் திசை மாறி உதித்தது போல. நம்ம மாப்பிள்ளை இந்தக் குடியை மறந்து. உன்னோடு நல்லபடியாகக் குடித்தனம் நடத்தினால். அதற்கு மேல். எனக்கும்தான் வேறு என்ன வேண்டும்?" என்று பொடி வைத்துப் பேசி முடித்தாள் பெரியவள், "ஆனால். அது நிலைத்து இருக்க வேண்டுமே,!" என்று உரக்கப் பெருமூச்சு விட்டாள்,

"எல்லாம் சரியாகி விடும்," என்று விட்டுக் கொடாமல் கூறினாலும். மகாலட்சுமி வாடிய முகத்துடன் விலகிப் போவதைத் திருப்தியுடன் பார்த்தாள். சம்பந்தியம்மாள்,

பிறகு. மகளை. அவளது அறைக்கு அழைத்துப் போய். நோண்டி நோண்டிப் பல கேள்விகள் கேட்டு. அவளுக்கு வேண்டிய விவரங்களை அறிந்துகொண்டாள்,

அதன் பின் உட்கார்ந்து. வேண்டிய மட்டும் உண்டு களித்துவிட்டுக் கிளம்பிச் சென்றாள்,!

ஒரு வாரத்துக்கும் மேலாக. மகேந்திரன் குடியை நாடவில்லை,. மகனைக் கையில் பிடித்தவாறு வீட்டுத் தோட்டத்தில் சுற்றுகிறான்,. விளையாடுகிறான் என்பதெல்லாம் மற்றவர்களை விடவும் நித்திலனுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது,

குடும்பத்தில் எல்லோருக்கும் நிம்மதி மட்டும்தான், ஆனால் அவனுக்கு. எதிர்காலம் பற்றிய அச்சமும் அல்லவா. மறைந்து கொண்டிருந்தது,!

கவலை மறைந்து. தயக்கம் அகன்று. உரிமையோடு. அனுபமாவுடன் அடிக்கடி பேசலானான்,

பொதுவாகக் காலையில் ஒரு "குட்மார்னிங். ஹோவ் எ குட் டே"யோடு நின்றது. மெல்ல மெல்ல வளர்ந்து. அடுத்தவருக்கு என்னென்ன பிடிக்கும். பிடிக்காது என்ற விசாரணை வரை வந்திருந்தது, சொந்த வாழ்வைத் தொடாத வினவல்கள்,!

அதிலும்கூட. அவளது குரலைக் கேட்பதே அவனுக்கு ஆனந்தம்தான்,

பூபால் பிறந்த பிறகு. பிள்ளையையும் யாமினியையும் புகுந்த வீட்டுக்கு அனுப்பாமல் அவள் வீட்டில் அழிச்சாட்டியம் செய்த

காலத்தில். அவ்வப்போது மருமகளுக்கு ஃபோன் செய்து நலம் விசாரிக்கும் மகாலட்சுமி. சில சமயம் ஆனந்த பரவசத்தோடு அப்படியே மெய்மறந்து நிற்பாள், “என்ன” என்று கேட்டால். “பேச்சின் இடையே. தூரத்தில் பேரன் குரல் கேட்டதும்மா,!” என்பாள்,

இங்க வராத பேரனின் குரலைக் கேட்பதில். இவ்வளவு மதி மயக்கமா என்று. உள்ளூர ஏளனத்துடன் நித்திலன் நினைத்திருக்கிறான்,!

ஆனால். வெறுமனே அனுபமாவின் குரலைக் கேட்கும்போதே. உள்ளம் துள்ளுவதை உணர்ந்தபோதுதான். தாயின் அன்றைய மனநிலை. நித்திலனுக்குப் புரிந்தது, புரிந்த மனம் உருகவும் செய்தது,!

அன்று. மகேந்திரன் மகனோடு. மனைவியையும் அழைத்துக்கொண்டு. காரில் ஒரு சுற்று சுற்றிவிட்டு வந்தான்,

பூபால் அழுக்குப் பண்ணிவிட்டால். வம்பு பண்ணி அழுதால். அப்போது உதவுவதற்காக என்று. அதுவும் மகாலட்சுமி சொல்லித்தான். யாமினிக்கும் அந்தக் காரில் இடம் கிடைத்திருந்தது,

ஆனால். அது தெரியாத நித்திலன். அவர்கள் மூவருமாகக் காரில் செல்வதைப் பார்த்ததும். அண்ணனின் குடும்ப உறவு கிட்டத்தட்டச் சீர்ப்பட்டு விட்டதாகவே. கருதிவிட்டான், இனிப் பழைய நிலைக்குப் போக. அண்ணி விட்டுவிட மாட்டாள் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டுவிடவே. மிகுந்த உற்சாகத்தோடு. அனுபமாவை செல்ஃபோனில் கூப்பிட்டு. தன் மகிழ்ச்சியைக் காட்டிக் கொண்டான்,

“நான் இப்போது ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன். தெரியுமா? கூடுதல் மகிழ்ச்சியாக உன் குரலைக் கேட்க வேண்டும் போல இருந்தது,!” என்று. தன் அதிகப்படி அழைப்புக்கு அவன் காரணம் சொல்லவும். அவளும் கூடச் சேர்ந்து குதூகலப்பட்டாள்,

கூடவே. வருங்காலக் கணவனுக்கு இவ்வளவு மகிழ்வூட்டும் விஷயம் என்ன என்று அவன் வாயால் அறியவும் ஆசைப்பட்டாள்,

ஏனெனில். அன்றையத் தினம் சற்று அதிகப்படி ஒளி நிரம்பியதாகத் தோன்றுவதற்கு. அவளுக்கு ஒரு காரணம் இருந்தது,

ஆனால். அவனுக்கும் அதே உணர்வு இருக்குமா என்பதில். அனுபமாவுக்கு ஐயம் இருந்தது, ஏனெனில். அவள் பார்த்த அளவில். அவளுடைய சிற்றன்னை சங்கரி முக்கியமானதாகக் கருதும் பல விஷயங்களை. தந்தை கண்டு கொள்வதே கிடையாது,

ஒருவேளை. ஆண் மனது யோசிப்பது வேறு விதமாக இருக்குமோ என்ற சந்தேகத்தில். அது பற்றிக் குறிப்பாகச் சொல்லக் கூட. அவளுக்கு வாய் வரவில்லை, ஒருவேளை. அப்படி இல்லை என்று ஆனால். அவளுக்கு மிகவும் வேதனையாக இருக்குமே,!

எனவே வேறு யோசித்து. "என்னப்பா. வீட்டில் உங்கள் அம்மாவும் அப்பாவும். எதற்காகவேனும் உங்களைப் பாராட்டினார்களா?" என்று. ஆவல் காட்டி விசாரித்தாள்,

அன்னை தந்தையின் புகழ் வார்த்தைகள். அவளுக்கு ஒரு நாளும் கிடைத்திராத அரிய பரிசுகள் அல்லவா?

நித்திலன் பதில் சொல்ல யோசிக்கும்போதே. "ஒரு வேளை. குட்டிப் பையன் பூபால். வேடிக்கையாக ஏதாவது செய்தானா? ... அல்லது... தொழிலில் ஏதாவது பெரிய லாபமா?" என்று வரிசையாகக் கேட்டாள்,

மகிழ்ச்சிக்கான காரணங்களை. அவள் வரிசைப்படுத்திய விதம். நித்திலனுக்கு மிகவும் பிடித்தது,! மற்றவர்கள் போல அல்லாமல். இவள் பணத்தைக் காடைசிக் காரணமாகச் சொல்கிறாளே,!

ஆனால். அவளுக்குப் பதில் சோல்லியாக வேண்டுமே,! தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ள அவசரமாக அழைத்தவனுக்கு. அது அனுவோடு பகிர்ந்து கொள்ளும் விஷயமல்ல என்பது உறைக்க. அவசரமாக வேறு காரணங்களை யோசித்தான்,

ஆனால். அவனே எதிர்பார்க்காத விதமாக. வடிவான கூழாங்கற்களைத் தேடியவனுக்கு வைரமே கிடைத்தாற்போலத் திடுமென ஒன்று நினைவு வர. அவனது முகமே ஒளி பெற்று பளபளத்தது,

மிகவும் மகிழ்ச்சியோடு. "நீ சொன்ன எல்லாமே தினம்தினம் நடக்கிற சமாசாரங்கள்தானே? ஆனால். எல்லாமே. இன்று போல ஒன்று சேர்நது நடந்தது இல்லை,! அது மட்டுமாக இல்லாமல். இன்று இன்னொரு தனிப்பட்ட. முக்கியமான நாள், நம் இருவருக்கும்,!

அதுதான் மனதிற்கு ஆனந்தமாக இருக்கிறது போல,!" என்று பூடகமாகப் பேசியவன். அவளிடமே கேள்வியைத் திருப்பினான், "சொல்லு. இன்று உனக்கு எப்படி இருக்கிறது?" என்று உல்லாசக் குரலில் வினவினான்,

ஆனால். அவளா மறக்கிறவள்? ஒவ்வொரு நாளையும் எண்ணிக்கொண்டு இருக்கிறவள் ஆயிற்றே,! அவனும் குறிப்பாகக் கூறிவிடவே. தயக்கம் அகன்று. "ரொம்ப ரொம்ப சந்தோஷமாக,!" என்று தன் மனதை வெளிப்படையாக அவனிடம் கொட்டினாள்,

"இன்று காலையில் விழித்ததில் இருந்தே எனக்கு அதே நினைவுதான், போன மாதம் இதே நாளை. அப்படியே நினைத்துப் பார்த்துக்கொண்டே இருந்தேன், நீங்கள் வந்தது. பார்த்தது. பக்கத்தில் நின்று ஃபோட்டோ. வீடியோ எடுத்தது. எல்ல் , லாம்,!" என்றபோது. அவளது குரல் கொஞ்சியது,

நித்திலனுக்கு மனம் சுட்டது,

விடிந்ததில் இருந்து. அவனையே நினைத்துக்கொண்டு இருந்திருக்கிறாள். அவள்,! ஆனால். தொழிலிலும். குடும்பப் பிரச்சினைகளிலும் மூழ்கி. அவன் அனுவை நினைக்கவே இல்லையே,!

ஆனால். மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள். அவனது மனம் நாடியது. அவளைத்தானே,!

சற்றே மனம் ஆறுதல் அடைந்தவனாக. "எனக்கு மகிழ்ச்சி என்றாலே. உன் நினைவுதான் வரும். அனு,!" என்று ஒரு மாதிரி உண்மையையே இயம்பினான், அடுத்து.

"அந்த மகிழ்ச்சிக்குச் சிகரம் போல . இருக்கிறது உன்னுடன் பேசுவது ,!" என்று அவளுக்கு ஐஸ் வைத்து. மெல்லப் பேச்சை திசை மாற்றினான்,

"சொல்லும்மா. உனக்கு எப்போது இடையூறின்றி. என்னோடு தாராளமாகப் பேச முடியும்? உன் வேலை நேரத்திலோ. குடும்பத்தினரோடு கலந்து உரையாடும் நேரத்திலோ குறுக்கிட்டுத் தொல்லை செய்ய எனக்கு விருப்பம் இல்லை," என்று. அவன் விவரம் கேட்ட தினுசில். அவளது கண்கள் பனித்தன,

வன் கொடுமை செய்வது கிடையாதுதான், ஆனால். அவளுக்குத் தொல்லை. அவளது சுகம் என்று. அந்த வீட்டில் யார் பார்த்தார்கள்,?

கொஞ்சம் வளர்ந்த பிறகு. சுகன் கவனித்தான், அலட்சியம் செய்தவர்களை. முக்கியமாக அவனுடைய தாயை அதட்டிக் கேட்டான், அதுவும் கூட விரிசலையே பெரிதாக்கியதால். அனுபமா அவனிடமும் எதுவும் சொல்வதே கிடையாது, அதற்கு மேல். குடும்பத்தாரோடு கலந்து பேசுவதா? அது எப்படி இருக்கும் என்றே அவளுக்குத் தெரியாதே,!

ஆனால். இப்போது. இவனிடம் என்ன கூறுவது?

“என்ன பதிலையே காணோம்? நான் பேசுவதே. அங்கே. அவ்வளவாகப் பிடித்தம் கிடையாதோ? “ என்ற கேள்வியில் சற்றுப் பதறி. “ஐயோ. அப்படி எதுவும் இல்லை, வேலை நேரம் முடிய. நாலு மணியாகும், வீட்டுக்கு வந்துவிட்டால் வந்து. சில சமயம் தம்பி தங்கைகள் பாடம் கேட்க வருவார்கள்,” என்று அவள் தெரிவித்தாள்,

சொல்லித் தர முடியுமா என்று கூட யாரும் கேட்பதில்லை,!

“அக்கா. இந்தப் பாடம் கேள்வி பதில் குறித்து வை, நான் ஃபேஸ் புக்கில் சாட் பண்ணிவிட்டு வந்து படித்துக் கொள்கிறேன்,!” என்று. எப்போதும் அதிகாரம்தானே?

சுகன் வீட்டில் இருந்தால். அக்காவை இப்படி அதிகாரம் பண்ணக் கூடாது என்று அதட்டுவான், பணிவாகக் கேட்கச் சொல்லுவான், அப்போது முக்கி முனகிக்கொண்டு. ஒரு “ப்ளீஸ்” சேர்த்துக் கொள்ளுவார்கள்,

சில சமயம் அவளுக்கே அந்த வீட்டில் யாரோ போலத் தனியே கிடப்பதற்கு. இப்படி உரிமையோடு அதட்டுவது கூட. நன்றாகத்தான் இருக்கும்,

ஆனால். முதல் தடவையாக. “பேசலாமா” என்று அவளிடம் அனுமதி கேட்டதே.

அவன்தானே? அவளது சுய கௌரவத்துக்கு மதிப்புக் கொடுத்தவன்,!

“ஓகோ,! அதாவது. உன்னுடைய நேரம் என்று குறிப்பிட்டுச்

சொல்ல முடியாது என்று தெரிகிறது,! போகட்டும், இரவு தூங்கச் செல்லுமுன். அல்லது அன்று போல உணவு இடைவேளை போன்ற சமயங்களில் பேசிக் கொள்ளலாம்,! அல்லது ஒன்று செய், சற்று நேரம் பேச அவகாசம் கிடைக்கும்போது. நீ எனக்கு "மிஸ்டு" கால் கொடு, நானும் இடையூறு இல்லாதபடி இருந்தால். கூப்பிடுகிறேன், இரண்டும் சரிவரச் சேருகிறபோது. நாம் பேசுவோம்," என்று நித்திலன் சொன்னது. அனுவுக்கு உவப்பாக இருந்தது,!

அதே போல. இருவரும் சில. பல முறைகள் பேசினார்கள், தடவைக்குத் தடவை. நித்திலனிடம் தான் ஈர்ப்புறுவதை மகிழ்ச்சியுடன் அனுபமா உணர்ந்தாள், வருங்காலம் அவனோடுதான் அல்லவா?

நித்திலனுக்கோ. அனுபமாவோடு பேசாத நாட்கள் எல்லாம். வீணான நாட்களாகவே தோன்றின,

அந்த நாட்களில். ஏதோ பெரிய குறை நேர்ந்துவிட்டது போல. இரண்டு முறை தூக்கமின்றித் தவித்ததில். அனு "மிஸ்டு கால்" கொடுத்தால். வேறு என்ன மாதிரி முக்கிய வேலையில் ஈடுபட்டிருந்தாலும். அப்போதைக்கு. அதைத் தள்ளி வைத்துவிடுவான், உள்ளம் குளிரும் விதமாக. அவளுடன் ஓரிரு வார்த்தைகளேனும் பேசிவிட்டே. இடையில் நிறுத்தி விட்ட வேலையை. மறுபடி தொடர்வான், அப்போதுதான்.
இலகுவாகத்  தொடரவும்
முடிந்தது,!
பைத்தியமாகிக் கொண்டிருக்கிறோம் என்று நன்றாகவே தெரிந்தாலும். சந்தோஷமாகவே பைத்தியமாகிக் கொண்டிருந்தான் நித்திலன்,

அடுத்த மாதம் இந்த நாளில். அனுவை நேரில் போய் சந்திக்க வேண்டும், இந்த முறை விட்டதற்கு ஈடு செய்ய வேண்டும், இடையில். அவளது பிறந்த நாள் வருகிறது, அன்றும். நேரில் பார்த்து வாழ்த்தலாம்,! அவளது வீட்டுக்கே போய் வாழ்த்திவிட்டு. பரிசு வாங்கிக் கொடுப்பதற்காக எங்காவது அழைத்துப் போக வேண்டும்
மாமியார்தான் அதற்கு. அன்றைக்கே பச்சைக்கொடி காட்டிவிட்டார்களே அதனால். அங்கே தடையிராது,

அதே நினைவாக ஏகப்பட்ட திட்டங்களை மனதில்

உருவாக்கிக்கொண்டு இருந்த நித்திலனுக்கு. அண்ணனுக்கு மெய்க்காப்பாளன் போல  வேலை கொடுத்துக் கூடவே  இருக்குமாறு வைத்திருந்த ஆண்டியப்பன் அவ்வப்போது விடுமுறை எடுத்தது. பெரிதாக மனதில் படவில்லை,

அது. பெரிய பிரச்சினையாகத் தோன்றவுமில்லை,! காரணம். யாமினி அடிக்கடி மகேந்திரனோடு வெளியே சென்றது,

குடும்பத்தோடு செல்லும்போது. மகேந்திரன் குடிக்க மாட்டான், எனவே. அவனைத் தூக்கிக் கொண்டு வந்து போடவும். ஆள் தேவையில்லைதானே?

அத்தோடு.குடும்பமாகச் செல்லும்போது. கரடி மாதிரி அவன் கூட இருப்பதுதான் தொல்லையாக. கணவன் மனைவி மனம் விட்டுப் பேச இடையூறாக இருக்கும்,

எனவே. ஆண்டியப்பன் அடிக்கடி லீவு எடுப்பதும் நல்லதற்கே என்று நித்திலன் எண்ணினான்,

ஆக. சுற்றிச் சுற்றிப் பார்க்கையில் எல்லாமே. நித்திலனுக்கு நல்லதாகவே  தோன்றியது, அது நிலைக்கும் என்று நம்பவும் செய்தான், ஆனால்

# அத்தியாயம் - 6

அனுபமாவின் பிறந்த நாள் பற்றி. அன்று நித்திலன் அவளோடு பேசினான்,

தன் பிறந்த நாள் நெருங்க. நெருங்க. அது பற்றி நித்திலனுக்கு நினைவு வர வேண்டுமே என்று அனுபமாவுக்கு ஒரே தவிப்பாக இருந்தது,

முதலில். அது எப்போது என்று. அவனுக்குத் தெரியுமோ. தெரியாதோ என்று அதுவே சந்தேகம்,! “என் பிறந்த நாள் இது” என்று சொல்லவும் அவளுக்குப் பிடிக்கவில்லை, ஏதோ பரிசுக்குப் பறக்கிற மாதிரி தோன்றக் கூடும்,

ரொம்பவும் யோசித்து. இருவருக்கும் வயது வித்தியாசம் எவ்வளவு என்று பேச்சுக் கொடுத்ததில். எத்தனை ஆண்டுகள் என்று அவன் அறிந்து வைத்திருந்தது புரிந்தது,

“அஅப்புறம். மாதம். நாள் எல்லாம் தெரியுமா?” என்று அவள் சுற்றி வளைத்துக் கேட்கவும் நித்திலன் வாய் விட்டுச் சிரித்தான்,

“ஏய்...உன் பிறந்த நாள் என்றைக்கு என்று எனக்குத் தெரியும்ப்பா,!” என்று அவன் மேலும் சிரிக்கவும். அவளது முகம் செக்கர் வானமாகச் சிவந்து போயிற்று,

கன்றிச் சிவந்த முகம் ரசனையைத் தூண்டினாலும். அவளது தவிப்பைக் கண்டு இரங்கி. “உண்மையில். அன்றைக்கு உன்னை வெளியே அழைத்துப் போய் உனக்குப் பிடித்ததாகப் பரிசு வாங்கிக் கொடுக்க வேண்டும்,. அப்படியே ஏதாவது சினிமாவுக்குக் கூட்டிப் போக வேண்டும் என்று. எனக்கு ஆசை, உன் சித்தி தடுக்க மாட்டார்கள் என்று தெரியும், ஆனால். என்னோடு நீ தனியாக வருவாயா? அல்லது. இப்படி உறவு. தோழி என்று யாரையாவது மேற்பார்வைக்கு வைத்துக் கொண்டுதான். சுற்ற வேண்டுமா? “ என்று கேட்டபோது. அவனது குரலில் சிறு கடுமை இருந்தது,

சற்றுத் தள்ளி அமர்ந்து. ஏதோ புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த தோழியைப் பார்க்கையில். அனுவுக்குப் பரிதாபம்தான், ஆனால். எந்த அளவுக்குச் சிற்றனனை. அவளை

நித்திலனோடு ஊர் சுற்ற வைக்க முயன்றாளோ. அந்த அளவுக்கு. அவள் அப்படிச் செல்லப் பயந்தாள்,

“பாய் ஃபிரண்டு”. நண்பன் என்று தாராளமாகச் சேர்ந்து உலா வரும் இந்தக் கால்த்தில். வருங்காலக் கணவன் என்று முத்திரையிட்ட பிறகும். அனுபமா கவனத்துடனேயே இருந்தாள், சித்தியின் திட்டம் என்னவாக இருந்தாலும். அது தனக்கு மகிழ்ச்சியூட்டுவதாக இராது என்பது. அனுபமாவுக்கு நிச்சயம்,!

இப்போது. பிறந்த நாளுக்கு. அவளுக்குப் பிடித்தமான பரிசு கொடுக்க விரும்புவதாக நித்திலன் சொன்னது. உண்மையில் அனுபமாவுக்கு மிகவும் ஆனந்தமாக இருந்தது

அவளது அபிப்பிராயத்துக்கு மதிப்பே கொடுக்காமல். நாலு பேருக்குக் காட்டுவதற்காக மட்டுமே சித்தி வாங்குவது. ஒரு நாளும் அவளுக்குப் பிடித்ததாக இல்லை,

அவள் யோசிக்கவும். “என்ன? தனியாக வந்தால். காய்ந்த மாடு போல. மேலே பாய்ந்து விடுவேன் என்று பயமா?” என்று அவன். மேலும் சினம் காட்டவும். அனுபமா பதறிப் போனாள்,

“ஐயோ. அப்படியில்லை. நித்தி,!” என்று பதறியவள். உடனே குரலை அடக்கி. “அ... அப்படியில்லை. நித்திலன், எங்கள் வீடு எங்கள் வீட்டில். வந்து...எல்லார் வீட்டிலும். ஏதோ ஒரு தினுசான பாலிடிக்ஸ் இருக்குமே. உங்களுக்குத் தெரியாததா?” என்று நிறுத்தவும். நித்திலனுக்கு வயிற்றுக்குள் “பகீரே”ன. அவனது பேச்சு கப்பென்று அடங்கிப் போயிற்று,

அவன் குடும்பத்தில் இல்லாத பிரச்சினையா? எவ்வளவு பெரிய பிரச்சினை,! அதைத் தொடர்ந்து. இன்னும் எத்தனை,!அது பற்றி மட்டும் இவளுக்கு முழுமையாகத் தெரிந்தால். அப்புறம் இவளை மணக்கும் வாய்ப்பே பறி போய்விடக் கூடுமே,!

கூடுமே என்ன? நிச்சயமாகத் துண்டைக் காணோம். துணியைக் காணோம் என்று. அவனை விட்டு எங்கோ ஓடி விடுவாள்,...

“உன் கண்ணில் இருக்கும் உத்திரத்தை எடுத்துவிட்டு. அடுத்தவன் கண்ணில் இருக்கும் தூசியைப் பார்” என்று ஏசுநாதர் சொன்னதாகக் கூறுவார்கள், அதுபோல. அவன் வீட்டில் பெரிய தப்பை வைத்துக்கொண்டு. அது என்ன பாலிடிக்ஸ் என்று.

மேற்கொண்டு அவளிடம் விவரம் கேட்கக் கூட. நித்திலனுக்கு வாய் வரவில்லை,!

ஆனால். அவனது மௌனத்தை வேறுபாடாகக் கருதாமல். தட்டுத் தடுமாறிக்கொண்டு. தன் விளக்கத்தை அனுபமா தொடர்ந்தாள்,

“பாருங்கள். பொதுவான மனித இயல்பு போலவே. எங்கள் வீட்டிலும் வேறு வகையாய் ...இன்னொரு மாதிரியாகப் பிரச்சினைகள் வெடிப்பதுண்டு, என்னை வைத்து எதுவும் தொடங்கி விடக் கூடாது என்று நான் கவனமாக இருப்பேன், எதையும். இரண்டு விதமாக யோசிக்காமல். திடுதிப்பென்று முடிவெடுப்பது என்னால் முடியாது, அதனால் நான் தயங்குவது போலத் தோன்றுமே தவிர. நிஜமாக அப்படியில்லை,...” என்று அவள் இழுக்கவும். நித்திலனின் கண்கள் சட்டென ஒளிர்ந்தன,

அவன் அண்ணனின் குடிப் பிரச்சினை பற்றி. பாவம். இவளுக்கு ஒன்றுமே தெரியாது,!

அனுபமாவுடைய சிற்றன்னை சங்கரியைப் பற்றி நித்திலனுடைய அன்னைக்கும் அவனுக்கும். மிகச் சரியான ஓர் ஊகம் இருப்பது தெரியாமல். தன் குடும்பத்தில் தாய் நிலையில் இருப்பவளைப் பற்றி அவனிடம் நேரடியாகக் குறை கூறப் பிடிக்காமல். அனு தவிக்கிறாள்,! இயல்புதான், அவனும். அண்ணனைப் பற்றி மறைக்கத்தானே செய்கிறான்?

இருவருக்குமே அடிப்படைக் காரணம் குடும்ப கௌரவம்தான், அடுத்து. அவனுக்கு. அவளை இழக்க மனம் இல்லாதது, அவளுக்கும் அவளுக்கும் அதே ஆசையே இருக்கட்டுமே,!

குடும்ப நிலையை மறைப்பது. இதற்காகத்தான்,

ஆனால். அந்தப் பொல்லாத சிற்றன்னையிடம் இருந்து. அவன்தான் அவளை விரைவிலே மீட்டுவிடப் போகிறானே,!

உள்ளூர மகிழ்ச்சி பொங்க. கிடைத்த வாய்ப்பைப் பற்றி. “ஓ. அப்படியானால் என்னோடு தனியாக வருகிறாய் என்று சொல்லு,!” என்று கேட்டான்,

கிடுக்கிப் பிடிதான், ஆனால். அவனோடு செல்லும்போது.

அவன் காட்டுகிற அன்பில் முக்குளிக்கும்போது. அனுவிற்கு. அவளது தொல்லை மிக்கப் பிறந்த வீடே மறந்து போகாதா?

மறக்கும், மறக்க வைப்பான்,! கேலியும் கிண்டலுமாகச் சிரித்துச் சிரித்து சந்தோஷமாகப் பேசி. அவர்கள் இருவரைத் தவிர. மற்ற உலகம் இருப்பதையே. அவளுக்கு மறக்க வைப்பான்,!

அடுத்த சில தினங்கள். அனுபமாவுக்குப் பிறந்த நாள் பரிசாக என்ன கேட்பாள். இன்னும் என்னென்ன வாங்கிக் கொடுக்கலாம். அவளுடன் எப்படியெப்படிப் பேசுவது என்று. அது தொடர்பான சந்தோஷக் கனவுகள். கற்பனைகளிலேயே. அவனுக்குப் பொழுது இனிமையாகக் கழிந்தது,

ஆனால். இந்தக் கனவுகளிலேயே மூழ்கி. உண்மை நிலையை அடியோடு மறந்து போகாதேடா. மடையா என்று மண்டையில் ஓங்கி அடித்துச் சொல்வது போல. அவன் வீட்டில் ஒன்று நடந்து. அவனைக் கலங்க வைத்தது,

அன்று மதியம். தொழில் முறை மதிய உணவோடு சேர்ந்த கலந்துரையாடல் ஒன்று இருந்தது, மற்ற ஒத்த தொழில் அதிபர்களைப் போலவே. நித்திலனும் அதில் கலந்து கொண்டிருந்தான்,

அப்போது ஏற்பட்ட சில புதிய தொடர்புகளின் மூலம் கிடைக்கக் கூடிய தொழில் வாய்ப்புகள். லாபம் பற்றி மனதுள் உற்சாகமாக அசை போட்டவாறே வீட்டு கேட்டினுள் காரைத் திருப்பியவனை. எதிரில் கண்ட காட்சி. அதிர வைத்தது,!

அண்ணன் மகேந்திரனின் சின்னக் கார். தானாகத் தோட்டத்தினுள் சென்று கொண்டிருக்க. “ஐயோ. ஐயோ,!” என்று பதறியபடி. யாமினி. காரைப் பின்தொடர்ந்து ஓடிக் கொண்டிருந்தாள்,

அவள் பின்னோடு இன்னும் பலர் ,! மகாலட்சுமி. வேலையாட்கள்,!

என்ன இது என்று. நித்திலன் காரை ஓரமாக நிறுத்திவிட்டு. அவசரமாக இறங்கி ஓடினான், அப்போதுதான் தெரிந்தது. அண்ணனின் காருக்குள் பூபால் தனியே இருந்து. பயந்து அழுவது. தெரிந்தது,

எப்படியாவது காரில் ஏறி பிரேக் போட எண்ணி. இரண்டு எட்டில். எல்லோரையும் முந்திக்கொண்டு ஓடிப் போய்ப் பார்த்தால். கார் உட்புறமாகப் பூட்டியிருந்தது, சாவி. உள்ளே காரிலேயே இருந்ததும் கண்ணில் பட்டது,

கார் அதற்குள். தோட்டத்து மரம் ஒன்றில் மோதிக்கொண்டு நின்றது,

நல்லவேளையாக ஆக்சிலேட்டர் கொடுக்காததால். மரத்தில் மோதியதில். பிள்ளைக்கோ. காருக்கோ பெரிய பிரச்சினை எதுவும் இல்லை,

ஆனால். பூபால் ரொம்பவும் பயந்துகொண்டு. வீர் வீரென்று அலறி அழுவது. பூட்டியிருந்த கண்ணாடிக் கதவு வழியே தெளிவாகத் தெரிந்தது,

“ஐயோ கண்ணா. கண்ணா் என்று முன் கதவின் முன்னே நின்று. யாமினி. மகனுக்கும் மேலாகக் கதறினாள்,

நாலு கதவுகளையும் திறந்து பார்த்ததில். எல்லாமே உள்ளே பூட்டியிருந்தது. தெரியவந்தது,

“யார் பூபாலைக் காரில் ஏற்றியது?” என்று. எல்லோருக்கும் மேலே குரலை உயர்த்தி நித்திலன் கேட்கவும். ஆளாளுக்கு எதோ பதில் சொன்னார்கள், அதன்படி. மகேந்திரன் பிள்ளையோடு காரில் அமர்ந்து விளையாடிக் கொண்டிருந்ததும். திடுமெனப் பெரிய காரில் அவன் வெளியே போனதும் தெரிய வந்தது,

“இவன் ஏன் போனான். எங்கே போனான்?” என்று ஈசுவரனின் கேள்விகளுக்குப் பதிலைத் தேடி அறிவதைக் காட்டிலும். பூபாலனை வெளியே கொண்டு வருவது அவசரமான அவசியம் என்று உணர்ந்து. “இந்தக் காரின் இன்னொரு சாவி எங்கே? முதலில் அதை எடுத்து வாருங்கள்,!” என்று யாமினியை ஏவினான் நித்திலன்,

அவனது பேச்சைக் காதிலேயே வாங்காமல். “ஐயோ. என் பிள்ளை…ஏசி வேறு ஓடுகிறதே,! அந்தச் செய்தியில் வந்த மாதிரி விஷவாயு ஏறி என் பிள்ளை சாகப் போகிறானே…” என்று பதறிக் கதறிக் கொண்டிருந்தாள் அவள்,

“ஐயையோ,! அப்படி ஆகி விடுமாடா?” என்று மகாலட்சுமி கலங்க. “பின்னே? நீ பத்திரிகை படித்தால் அல்லவா. தெரியும்? மூன்று பேர் காருக்குள்ளேயே...” என்று. ஈசுவரன். தான் பத்திரிகை படித்த பிரதாபத்தை அளக்கத் தொடங்கினார்,

யாமினிக்குக் கைகால் உதறல் எடுப்பதைக் கண்டு. “அப்பா. வாயை மூடுங்கள்,!” என்று அதட்டினான் நித்திலன்,

யாமினி இருக்கும் நிலையில். அவளிடம் எதைக் கேட்பதும் வீண் என்று புரிந்து. தாயிடம் திரும்பி. “அம்மா. இன்னொரு ஸ்பேர் சாவி இருக்குமே,. அது எங்கே இருக்கிறது என்று தெரியுமா?” என்று கேட்டான்,

பேரனிடம் இருந்து கவனத்தைத் திருப்பி. மகனின் கேள்வியை உள்வாங்கி. மூளையைத் தட்டிவிட. அவளுக்கும் சிறு பொழுது தேவைப்பட்டது,

தாயின் நிலையை ஊகித்து. நித்திலன் மிகவும் தெளிவாக. காரின் இன்னொரு சாவியை. மீண்டும் கேட்டான், “அது கிடைத்தால். பூபாலை உடனே காரிலிருந்து வெளியே கொண்டு வந்து விடலாம்மா, “

நல்லவேளையாக. இந்த வார்த்தைகள் யாமினியின் மூளைக்குள்ளும் ஊடுருவ. “அந்தச் சாவி. என் ஆலிவ் கலர் பீரோவில் , ,பீரோவில் ஒரு மமரப்பெட்டியில் இருக்கிறது, வந்து...பீரோ சாவி. சின்ன மேஜையின் இழுப்பறை ” என்ற அவளது பேச்சை அதற்குமேல் கேட்க. நித்திலன் அங்கே இல்லை,

மின்னலாய் வீட்டுக்குள் பாய்ந்து சென்று. சாவியோடு வந்தவன். கார்க் கதவைத் திறந்து. சோர்ந்து கிடந்த பிள்ளையைத் தூக்கி. அதன் தாயிடம் ஒப்படைத்தான்,

அவளிடம் பூபாலைக் கொடுக்கும்போதே. “ஏதேனும் காரணத்தால் “எக்சாஸ்ட் பைப்” அடைத்திருந்தால்தான். அப்பா சொன்னது போல அபாயங்கள் நேரக் கூடும். அண்ணி, பூபாலுக்கு வெறும் பயத்திலும். அழுகையிலும் வந்த சோர்வு இது, நீங்கள் இவனை உள்ளே கூட்டிப் போய். ஈரத் துணியால் முகத்தைத் துடைத்து. சாக்கலேட் ஏதாவது சாப்பிடக் கொடுங்கள், உங்கள் திருப்திக்காக. எதற்கும். நம் டாக்டரையும் உடனே வரச்

சொல்லுகிறேன்,'' என்று. ஆறுதலாகக் கூறவும். ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன். அவள் மகனைத் தூக்கிக்கொண்டு வீட்டினுள் செல்லலானாள்,

எல்லாம். அத்தோடு சாதாரணமாக முடிந்திருக்கும், அன்றாட இயல்பு வாழ்க்கை தொடர்ந்தும் இருக்கும், ஆனால். அதற்குமே. கொடுத்து வைத்திருக்க வேண்டுமில்லையா?

சரியாக அந்த நேரம் பார்த்து. கழுகுக்கு மூக்கிலே வேர்த்த மாதிரி யாமினியுடைய தாயார் அருந்ததி வந்து சேர்ந்தாள், ,

வெளி கேட் தாண்டி. அவளுடைய சிவப்பு நிறக் கார் உள்ளே வருவதைப் பார்த்ததுமே. மகாலட்சுமி தன்னை மீறி "ஐயோ,!" என்றுவிட்டான்,

முகன் இறுகிவிட்டபோதும். "ஷ். அம்மா,!" என்று அடிக் குரலில் நித்திலன் எச்சரிக்க. உடனே சுதாரித்துக்கொண்டு. "வாருங்கள். அண்ணி," என்று. சம்பந்தி அம்மாளை முறைப்படி வரவேற்றாள். அந்த இல்லத்தரசி,

சந்தேகமாகப் பார்த்தபடி. "என்ன? எல்லோரும். இந்த நேரத்தில் இங்கே நிற்கிறீர்கள்? யாமினி எங்கே? பூபால் கண்ணு எங்கே?" என்று விசாரித்தாள் சம்பந்தி அம்மாள்,

சொல்வது அறியாமல் மகாலட்சுமி அமைதி காக்க. "எனக்கு பிசினஸ் லஞ்ச். அத்தை, முடிந்து இப்போதுதான் வந்தேன்," என்று. நித்திலன் இலகுவாகப் பதில் சொல்லும்போதே. "நல்லவேளையாக. இவன் இந்த நேரம் பார்த்து. வீட்டுக்கு வந்தான், இல்லாவிட்டால் என்ன நடந்திருக்கும் என்று நினைக்கவே எனக்குநெஞ்சு நடுங்குகிறது,!" என்று கண்ணை உருட்டிச் சொன்னார் ஈசுவரன்,

தகப்பனாரைஒரு தரம் முறைத்துப் பார்த்துவிட்டு. "எதுவும் நடந்திருக்காது,..." என்று நித்திலன் சமாளிக்க முயற்சிக்கும்போதே. தாயின் குரலைக் கேட்டு. யாமினி வெளியே ஓடி வந்தாள்,

"அம்மா. நீங்கள் எச்சரித்த மாதிரியே ஆகிவிட்டதும்மா, என் பிள்ளையைப் பறி கொடுக்க இருந்தேன்... " என்ற கதறலுடன். தாயின் மீது சாய்ந்தாள் அவள்,

இதற்கு மேல் எந்த சமாளிப்பும் செல்லாது என்று புரிந்து.

“அண்ணி. ப்ளீஸ்,! பூபாலுக்கு எந்த விதமான ஆபத்தும்  இல்லை, எப்படியோ. திறந்திருந்த காரில். தனியாக ஏறிவிட்டான் போல, துறுதுறுப்பு அதிகமா? கதவைச் சாத்திக்கொண்டு. கைக்குக் கிடைத்ததை எல்லாம் இழுத்துப் பார்த்திருக்கிறான், கியர் விழுந்து. கார் கொஞ்சம் நகர்ந்து விட்டது, அதுதான் உடனேயே பாரர்த்து. அவனை மீட்டுவிட்டோமே,! இப்போது. அவன் எங்கே? யாரிடம் விட்டு வந்தீர்கள்? அத்தை அவனைப் பார்க்க வேண்டுமாம்,. வாருங்கள். உள்ளே கூட்டிப் போகலாம்… “ என்று எல்லோரையும் உள்ளே அழைத்துச் செல்ல முயன்றான்,

சற்றும் அசையாமல் அழுத்தமாகக் கால்களை ஊன்றி நின்றுகொண்டு. “என்னாது? கேப்பையிலே நெய் ஒழுகுது என்றால். கேட்பாருக்கு மூளை இல்லாமலா. போகும்? இரண்டேகால் வயசுப் பையன். தானாகக் காரிலே ஏறிப் பூட்டிக் கொண்டானாம்,. காரை ஓட்டி… அட. இதோ மரத்திலே முட்டிக்கொண்டு நிற்குதே,! இந்தக் காருக்குள்ளே என் பேரன்                    ஐய்யோ கடவுளே. என் பேரன் உயிரோட இருக்கிறானா. இல்லையா? காரிலே ஏற்றி. கியரைப் போட்டுக் கதவைப் பூட்டி. மரத்திலே மோதிக் கொல்லப் பார்த்தாங்களா? வாரிசாக அவன் பிறந்ததே. இங்கே யாருக்கும் பிடிக்கலைன்னு தலை தலையாக அடித்துக் கிட்டேனே,! கேட்டியா?” என்று அலறிக் கதறினாள் அருந்ததி அம்மாள்,

“ஐயோ. அநியாயமாகச் சொல்லாதீர்கள். அண்ணி, பூபால் என்றால். எங்கள் எல்லோருக்குமே உயிர்,” என்றாள் மகாலட்சுமி,

“இருக்கும்,. இருக்கும், அதுதான் உயிரையே எடுக்கப் பார்க்கிறீர்கள், ஏண்டி. உன் பிள்ளைக்குப் பேச்சு மூச்சு. ஏதானும் இருக்குதா. இல்லையா? “ என்று மகளை அதட்டிக் கேட்டாள் அந்த அம்மாள்,

“ஐயையோ அம்மா. பூட்டின காருக்குள் மாட்டியதில். அவனுக்கு மயக்கம் மாதிரி வந்ததும்மா,…” என்று யாமினி சொல்லிக் கொண்டிருக்கும்போதே. அவளது வார்த்தைகளைப் பொய்யாக்குகிறவன் போல. கலகலவென்று கிளுக்கிச் சிரித்துக்கொண்டு. வேலைக்காரியின் கைகளில் பிடிபடாமல் நளுக்கியபடி. பூபால் அங்கே ஓடி வந்தான்,

வந்தவன் “என் கண்ணூ...” என்று அழைத்த தாய் வழிப் பாட்டியிடம் போகாமல். “பாத்தீ,! தூக்கு,!” என்று மகாலட்சுமியிடம் ஓடிக் கைகளைத் தூக்கிக்கொண்டு நின்றான்,

பிள்ளையைத் தூக்கி அணைத்து. “என் செல்லக் குட்டீ,!” என்று கொஞ்சிய பிறகே. மகாலட்சுமி தன் பிழை உணர்ந்து பார்த்தால். சம்பந்தி அருந்ததியின் முக்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தது,

யாமினியும் முகம் கடுக்க அருகில் வந்து. மாமியாரிடம் இருந்து. மகனைப் பிடுங்காத குறையாகத் தூக்கிக் கொண்டு போய்த் தாயிடம் கொடுத்தாள்,

எதையும் கவனிக்காத மாதிரி. “வாருங்கள் எல்லோரும் உள்ளே போகலாம், யாமினி. அம்மா இந்த நேரத்தில் என்ன குடிப்பார்கள்? காஃபியா? ஜூசா? கேட்டுச் சொல் செய்து அனுப்புகிறேன், நீங்கள் உள்ளே வாருங்கள் அண்ணி,” என்று உரைத்தவாறே. வீட்டுப் பக்கம் நோக்கி நடக்கலானாள். மகாலட்சுமி,

“காஃபிதான். அண்ணி, ஜூஸ் குடித்தால். இந்தக் குளிர் காலத்திலே. எனக்கு மார்ச் சளி பிடிச்சுக்கும், ராத்திரி முழுக்க இருமல் பிடுங்கும், எதுக்குக் கஷ்டம்? அதனாலே. நல்ல திக்காக் காஃபியே போட்டு விடுங்க,!” என்றபடி பிள்ளையை மறுபடியும் மகளிடமே கொடுத்துவிட்டு. தன் பருத்த தேகத்தைச் சிரமத்துடன் தூக்கிப் படியேறி. மகாலட்சுமியைப் பின் தொடர்ந்தாள்,

எல்லோரும் வீட்டினுள் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த நித்திலனுக்கு. என்னவோ மனதில் உறுத்தியது,

சரியாக இந்த நேரத்தில். அருந்ததி அம்மாள் எப்படி வந்தாள்?

இங்கெல்லாம் வந்தால். மதிய உணவுக்குப் பிறகு. அடித்துப் போட்டாற்போலத் தூங்குகிறவள். மாலைக் காஃபிக்குத்தான். படுக்கையை விட்டு எழுவாள், இப்போது மணி மூன்றுதான் ஆகிறது, இந்த நேரத்தில். அரை மணி நேரம் பயணம் செய்து. இங்கே வீட்டுக்கே வந்துவிட்டாளே,!

ஒரு வேளை. தானாடா விட்டாலும் சதையாடும் என்கிறார்களே,! அதுபோல. பூபாலுக்கு என்னவோ என்று மனம் துடித்து. அவனைப் பார்க்க வந்திருப்பாளோ?

ஆனால். என்ன முயன்றும். நித்திலனால். இதை ஒத்துக்கொள்ள முடியவில்லை,! அருந்ததி அம்மாளுக்குக் காசு. பணம் நல்ல சாப்பாட்டுக்குப் பிறகுதான். பெற்ற மகள் கூட,! மகளும்கூட. நகை நட்டுக்கு அப்புறம்தான்,

மற்றபடி. பேரனிடம் பாசம் உந்தி. அவள் வந்திருக்கக் கூடும் என்றால். அது. சர்வ நிச்சயமாகக் கேப்பையில் நெய் வடிகிற கதையேதான்,!

பின்னே எப்படி என்று சற்றுக் குழம்பியவன். அப்போதைக்குப் பயனற்ற சிந்தனை என்று. அதை ஒதுக்கி வைத்தான்,

இந்த அயனான நேரத்தில் வந்துவிட்ட அருந்ததி அம்மாள். இனிச் சும்மா இருக்கப் போவதில்லை, ஏற்கனவே. பூபால் பிறந்ததே...அதுவும் வீட்டு வாரிசாகப் பிறந்ததே. இங்கே யாருக்கும் பிடிக்காதது போல. ஒரு விதையைப் போட்டாயிற்று,

இனி. அதை வேகமாக வளர்த்து. அண்ணியின் மனதில் சந்தேகத்தை வளர்த்து.  அழ வைத்து... இன்னும் என்னென்ன செய்யப் போகிறாளோ?

மாமியாருக்கு வசதியாக அண்ணனை வேறு. ஆளைக் காணோம்,!

இப்போது அனாதை போல நிற்கும் அம்மாவுக்குச் சாதகமாக. அவனாவது துணை யிருக்க வேண்டும்,!

“தம்” பிடிப்பது போல. ஒரு பெரிய மூச்சை உள்ளிழுத்துக்கொண்டு. நித்திலன் வீட்டினுள் செல்ல அடியெடுத்து வைத்தபோது. அவனது தனி செல்ஃபோன் ஒலித்தது,

பேசியவன் ஆண்டியப்பன், அண்ணன் மகேந்திரனுக்குத் துணையாக. நித்திலன் அமர்த்தியிருந்த அடியாள்,! அவன் கேட்ட முதல் கேள்வியில். நித்திலனுக்குக் கோபம் பொங்கிவிட்டது,

# அத்தியாயம்-7

ஆண்டியப்பனின் குரலைக் கேட்டதுமே. நித்திலனுக்கு முதலில் மகேந்திரனின் நினைவுதான் வந்தது, பெரிய காரில் வெளியே போனவன். இப்போது எங்கே இருக்கிறான்? ஆண்டியப்பன்தான். அண்ணனைக் கூட்டிப் போனானா?

அதை நித்திலன் கேட்டதற்கு. "அதிருக்கட்டும். சார், குழந்தை காரிலே. தனியாக இருந்தது, யாரேனும் பார்த்து. காரிலே இருந்து இறக்கி விட்டுவிட்டாங்களா என்று கேளுங்கள். சார், சின்னப் புள்ளை,. பயந்துக்கப் போகுது," என்று எச்சரிக்கை செய்தான் மற்றவன்,

அப்படியானால். பூபால் காரில் தனியே இருந்தது. இவனுக்குத் தெரியும்,! ஆனால். விட்டுவிட்டுப் போயிருக்கிறான்,!

"உனக்கு மூளை. கீளை என்று மண்டைக்குள் ஏதாவது இருக்கிறதா? பூட்டின காரில் பிள்ளையைத் தனியே விட்டுவிட்டு. நீ பாட்டில். அண்ணனோடு போயிருக்கிறாயே,! அவனை இறக்கி. யாரிடமாவது ஒப்படைத்துவிட்டுப் போகக் கூடாது? இதைக் கூட. வேறு யாராவதுதான் உனக்குச் சொல்ல வேண்டுமா? அவ்வளவுக்குக் கூட. அறிவில்லையா?" என்று சீறினான் நித்திலன்,

ஆனால். பணியாள். அவனுக்கும் மேலே குரலை உயர்த்தி. "என்ன சார். மூளை. அது இது என்றெல்லாம் பேசுகிறீங்க? நான். சாரைப் பார்த்தாக வேண்டாமா? டிரைவர் சீட்டில். ஏறி உட்கார்ந்துகொண்டு இருக்கிறார், அவரே காரை வேகமாக ஓட்டிப் போய்ப் பெரிதாக விபத்து ஏதும் ஏற்பட்டுவிட்டால். என்ன செய்வது? அப்போதும். என்னைத்தானே கேட்பீங்க? அவரோடு இருக்கத்தானே. எனக்குச் சம்பளம் தருகிறீர்கள்?" என்று வேகமாகப் பேசினான்,

ஆனால். நித்திலனின் கோபம் சற்றும் தணியவில்லை,

"அண்ணனைப் பார்த்துக் கொள்ளத்தான் உனக்குச் சம்பளம், ஆனால். நீயும் மனிதன்தானே? சின்னப் பிள்ளை,! ஏசி போட்ட

காரில் தனியே இருக்கிறானே,. என்ன ஆகுமோ என்று. கொஞ்சம் கூடவா. தோன்றவில்லை? " என்று ஆத்திரத்துடனேயே கேட்டான்,

என்னவோ. ஆண்டியப்பனின் சத்தம் இறங்கிவிட்டது, "சாரி. சார், என்னை மன்னித்துவிடுங்க, ஆனால். அந்த நேரத்தில். ஒரு நிமிசம். எனக்கும் என்ன செய்கிறது என்று குழப்பமாகத்தான் இருந்தது, ஆனால். இங்கே பிள்ளையை யாராவது பார்த்துக் காப்பாற்றி விடுவார்கள் என்று நினைத்தேன், ஆனால். மகேந்திரன் சார் காரைக் கிளப்பிவிட்டால். அப்புறம். என்ன நடக்கும் என்றே. சொல்ல முடியாதே,! அதனால்தான். சாரோடு சென்றேன்," என்று மெல்ல விளக்கினான்,

இதற்கு மேல். அவனை எப்படிக் கோபிப்பது?

அத்தோடு. ஆண்டியப்பன் சொல்வதும். பெரிதும் சரிதானே?

அவன் சொன்னது போலவே. பூபாலைக் கண்டதோடு. ஒரு சேதமும் இல்லாமல். அவனை வெளிக் கொணர்ந்தும் ஆயிற்று,! இப்போது. அண்ணனுக்கும் பிரச்சினை  கிடையாது,!

இந்த நேரத்தில் போய். அண்ணனுடைய மாமியார் மட்டும் வராமல் இருந்திருந்தால். எந்த விதமான தொல்லைக்கும் இடமே இருந்திராதே,!

"இப்போது எங்கே இருக்கிறீர்கள்? "

"வீட்டுக்குத்தான் வர வேணுமின்னு. ஒரே அழும்பு சார்,... " என்று அவன் சொல்லும்போதே. நித்திலன் அவசரமாகக் குறுக்கிட்டு. "வேண்டாம். வேண்டாம்,  இப்போது இங்கே வந்துவிடாதே, அண்ணனிடம் செல்ஃபோனைக் கொடு," என்றான்

நடையில் தடுமாற்றமும். பேச்சில் குழறலுமாக. மகேந்திரன் மட்டும் இங்கே வந்துவிட்டால். அப்புறம். இந்த வீட்டை எரித்துச் சாம்பலாக்கத் தீக்குச்சியே தேவையில்லை, அந்த அருந்ததி அம்மாளே போதும்,

செல்ஃபோனில் அண்ணனிடம் பேசியதில் ஒரு பயனும் இருக்கவில்லை,

பழைய சினேகிதன் ஒருத்தன். கூப்பிட்டதாகக் குழறலோடு உளறியது தவிர. வேறொன்றும் கூற. அவனால் இயலவும் இல்லை,

ஆனால். என்ன நடந்திருக்கும் என்று புரிந்துகொள்ள. மகேந்திரன் பேசித் தெரிவிக்க வேண்டிய அவசியமும். அவன் தம்பிக்குச் சிறிதுமில்லை,

விளையாட்டாகப் பிள்ளையைக் காரில் ஏற்றி. ஒரு ரவுண்ட் போகும் எண்ணத்தில். மகேந்திரன் காரில் சாவியைப் போட்டு ஆன் பண்ணியிருக்கிறான், அந்த நேரத்தில் ஃபோன் வந்திருக்கிறது, காரை விட்டிறங்கிப் பேசியிருக்கிறான், குழந்தையும் இறங்கி விடாமல். தன் போக்கில் கதவைச் சாத்தியிருக்கிறான்,

எந்தப் பாவி நண்பனோ... நண்பனா அவன்? நண்பன் என்ற பெயரில் நடமாடும் சத்துரு,! அவன் வற்புறுத்தவும். மகேந்திரனுக்குக் குடிக்கும் ஆசை வந்துவிட்டது, அந்த எண்ணம் வந்துவிட்டால்தான். அவனுக்கு நல்லது கெட்டது. கண் மண் எதுவும் தெரிவதில்லையே,!

சாவியை உள்ளே வைத்துக் கதவைச் சாத்திவிட்டதால். அவனாலும் வெளியில் இருந்து காரைத் திறக்க முடிந்திராது, மகனைப் பற்றிய அக்கறையே இல்லாமல். பெரிய காரை எடுத்துக்கொண்டு கிளம்பி. குடிக்கப் போய்விட்டான்,!

பூபால் துறுதுறுப்பானவன், சும்மா இராமல் கியரைப் பிடித்துக் கண்டபடி ஆட்டியதில். எப்படியோ கார் ஓடத் தொடங்கிவிடவும். பயந்து அழுதிருக்கிறான்,

கணவனையும் மகனையும் பார்க்க வந்த யாமினியும். பயந்து அலறிக்கொண்டு. கார் கூடவே ஓடிக் கார்க் கதவைத் திறக்க முயன்றிருக்கிறாள், மரத்தில் முட்டிக் கார் தானாக நின்றிருக்கிறது,

யாமினி போட்ட சத்தத்தில் மற்றவர்கள் வர. ஒரே களேபரமாகிவிட்டது,!

பட்ட காலிலேயே படும் என்பது போல. அவர்களது கெட்ட நேரம். அருந்ததியும் அங்கே வருமாறு நேர்ந்திருக்கிறது,!

மற்ற எல்லாப் பிரச்சினைகளையும். நித்திலனால் சமாளிக்க முடியும், யாமினி கூட. எடுத்துச் சொன்னால். சரியாகப் புரியாவிட்டால் கூடப் பொறுத்துப் போகிறவள்தான், ஆனால். எப்படியோ அந்த நேரம் பார்த்து வந்துவிட்ட அருந்ததியைச் சமாளிக்க. அம்மா. மகன் இருவரும் சேர்ந்தும்கூட முடியாது,!

ஒன்றும் இல்லாமலே வம்பு வளர்க்கிறவள்,! இப்போது நல்ல ஆயுதம் வேறு கிடைத்திருக்கிறது, என்ன பண்ணுவாளோ..., என்று நித்திலன் கவலையோடு யோசிக்கும்போதே. வீட்டின் உள்ளிருந்து. அந்த அம்மாளின் உரத்த குரல் முழங்கத் தொடங்கிவிட்டது,

நித்திலன் அவசரமாக உள்ளே ஓடிச் சென்றபோது. " ..... இனியும். இந்தாளை நம்பிப் பிள்ளையை எப்படிக் கொடுப்பது? அந்த மனிதன் திருந்துமுன் பிள்ளைக்கு ஏதேனும் விபத்து. ஆபத்து நேராது என்று என்ன நிச்சயம்?" என்று குரலை உயர்த்திக் கேட்டுக் கொண்டிருந்தாள். அண்ணனுடைய மாமியார்,

நித்திலனைக் கண்டதும். "இதோ. இந்தத் தம்பியோட வேலைதானே? என்னமோ. அண்ணன் உத்தம புத்திரன் மாதிரி. மகனுக்காகத் திருந்தி விடுவான் என்று ஆசை காட்டி. அவனை அப்பன் கிட்டே விட்டு. நீங்களே அழிக்கப் பார்த்தீங்களோ. என்னமோ? ... " என்று. ஒரு பெரிய டம்ளர் காஃபி உள்ளே போன தெம்பில். வாய் கிழியப் பேசினாள்,

"அத்தை. என்ன பேசுகிறோம் என்று புரிந்துதான் பேசுகிறீர்களா?" என்று அவளை நேராகப் பார்த்து. அழுத்தமான குரலில் நித்திலன் கேட்கவும். ஒரு கணம் அவளது பேச்சு அடங்கியது,

ஆனாலும் உடனேயே. "பேரனுக்கு ஆபத்து என்றதும். எனக்குத் தலை சுற்றிப் போய்விட்டது. தம்பி, என்ன நினைப்பது. என்ன பேசுவது என்று ஒன்றுமே புரியவில்லை,! நீங்களே சொல்லுங்கள். இத்தனை காலம். அண்ணன் குடும்பத்துக்காகவே வாழ்கிற மாதிரித் தனிக்கட்டையாவே இருந்தீங்களே, அப்படியே இருந்திருந்தால். இப்படி ஒரு சந்தேகம். யாருக்காவது வந்திருக்குமா? யார்யாரோ. எக்கேடோ கெடட்டும் என்று. கல்யாணம் செய்துக்கப் போகிறீங்க, தான். தன் சுகம் என்று வரும்போது. மனித மனம் எப்படி மாறும் என்று. யாராலே சொல்ல முடியும்? எப்படியோ. என் பேரன் நல்லபடியாக இருந்தால் சரி,! அதுதான் எனக்கு வேண்டும்,!" என்று விடாப்பிடியாகத் தன் கருத்தையே நிலைநாட்ட முயன்றாள் அருந்ததி,

"இங்கே எல்லோரின் குறிக்கோளுமே. அதுதான் அத்தை,! என்ன. நீங்கள் குறுகலாக. இன்றைக்கு மட்டும் பார்க்கிறீர்கள், நான் தொலை நோக்காய். இன்னும் ஐம்பது. அறுபது ஆண்டுகள்

எல்லோருமாய் நல்லபடியாக வாழ்வதற்காகச் செயல்படுகிறேன், விஷயம் அவ்வளவுதான், கிட்டத்தட்ட இரண்டு வாரமாகப் பிரச்சினையே இல்லாமல்தானே. இருந்தது? அதனாலே. இந்த ஒரு நாளை வைத்து முடிவு செய்யாமல். தொடர்ந்து முயற்சி செய்யும்படி. அண்ணியிடம் சொல்லுங்கள்," என்றான் நித்திலன்,

"என்னாது? இதே முயற்சியைத் தொடருவதா? ஐயய்யோ,! அப்படியெல்லாம். அவளிடம் சொல்லவே முடியாதுங்க, பாவம். யாமினி ஒரே அழுகை புருஷன்தான் சரியில்லை, எப்படியோ வாழ்க்கையிலே ஒரே ஒரு சந்தோஷமாக இருக்கும் பிள்ளையும் போய்விட்டால் என்ன பண்ணுவேன் என்று. கதறோ கதறென்று. அப்படிக் கதறினாள்,! அவளைப் போய். இன்னமும். இதே விஷப் பரீட்சையைத் தொடரச் சொல்வதா? நானே ஒருநாளும் அப்படிச் சொல்ல மாட்டேன், சொன்னால். அவள் கேட்கவும் மாட்டாள், வேணுமானால். நீங்களே அவளிடம் சொல்லிப் பாருங்களேன்,!" என்று முடித்தபோது. அருந்ததியின் குரலில் ஒரு வித எக்காளம் இருப்பதை. நித்திலனின் கூர்செவிகள் கண்டுபிடித்தன,

என்ன உருவேற்றி. எப்படி வாக்கு வாங்கி வைத்திருக்கிறாளோ?

அவன் கலங்கியதற்கு ஏற்ப. "மகேன் என்ன ஆனாலும். எனக்குப் பரவாயில்லை, என் பிள்ளையை. இனிமேல் அவர் கையில் கொடுக்க மாட்டேன், குடி வெறியில். அவரே பூபாலைக் கொன்றே போட்டுவிட்டால் கூட. யாரால் என்ன செய்ய முடியும்? என்னால் முடியாது,! முடியவே முடியாது,!" என்றாள் அண்ணி யாமினி. ஒரே பிடிவாதமாக,

"அப்படியெல்லாம் ஆகாது. அண்ணி,! எப்போதும். யாரேனும் கூடவே இருந்து. நாம் பார்த்துக் கொள்ளுவோம், நம்பிக்கையைத் தளர விடாதீர்கள்,!" என்று. அவளைத் திடப்படுத்த முயன்றான் நித்திலன்,

ஆனால். "என்ன பெரிய நம்பிக்கை? ஒருவரிடம் நம்பிக்கை வைப்பதற்குக் கொஞ்சமேனும் அடிப்படை வேண்டாமா? என் அம்மா சொல்வது போலக் கார் கொஞ்சம் வேகமாகப் போய் இடித்து. பூபாலுக்கு என்னமும் ஆகியிருந்தது என்று வையுங்கள்,! உங்களால் மட்டும் அவன் உயிரை மீட்டுத்தர முடியுமா? முடியாதே,! அதனால்.

நானும் மட்டேன், இனியும். என் மகனின் உயிரோடு விளையாட என்னால் முடியாது, மகேனின் பக்கத்தில்கூட. இனி என் பிள்ளையைப் போக விடமாட்டேன், இது நிச்சயம்,! இனியும். இந்த "முயற்சி"ப் பேச்சை எடுத்தீர்கள் என்றால். என் அம்மா போலத்தான் நானும் நினைக்க நேரும்," என்று. கடுமையான குரலில் எச்சரித்தாள். யாமினி,

நித்திலன் திகைப்புடன் பார்க்கையிலேயே. தாயிடம் திரும்பி. "அம்மா. இங்கே உட்கார்ந்து என்ன செய்கிறீர்கள்,! வாருங்கள். என் அறைக்குப் போகலாம், பூபால் பற்றிய அதிர்ச்சி நீங்க. நீங்கள் கொஞ்ச நேரம் படுத்துத் தூங்குங்கள்," என்று பரிவுடன் அழைத்தாள்,

"ஆமாம்மா, இன்னிக்குப் பகல் தூக்கம் வேறே தூங்காமல். பேரனை நினைத்து ஓடி வந்தேன், " என்று எழுந்தவள். நித்திலனை அலட்சியமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு. மகளோடு சென்றாள்,

அவ்வளவு நேரமும் ஒதுங்கி நின்று கவனித்துக் கொண்டிருந்த மகாலட்சுமி. ஓசைப்படாமல் மகன் அருகில் சென்றாள்,

"நித்திம்மா. நான் எல்லாம் கேட்டேன், கண்ணில் பட்டால். என்னிடம் சொல்கிற சாக்கில். அந்தம்மா இன்னும் ஒரு தரம் உன்னைப் பேசுவாளே என்று. உள்ளேயே நின்றேன்,

ஆனால். நீயும் விட்டு விடும்மா, கார் ஓடியபோது. நானுமே ரொம்பவும் பயந்துவிட்டேன், நல்லவேளை. பாட்டி பகல் தூக்கம் போடப் போனவர்கள். இன்னமும் விழிக்கவில்லை, அல்லது. கொள்ளுப் பேரனுக்குப் பெரிய விபத்தே நேர்ந்துவிட்டது போல. அவர்கள் வேறு கூப்பாடு போடுவார்கள், விட்டுவிடு, உன் அண்ணனுக்கு நல்ல விதி இருந்தால். அவனே திருந்தட்டும், அம்மன் கோயிலில் நெய்விளக்குப் போடுவதாக நேர்ந்திருக்கிறேன், எல்லாம் சரியாகிவிடும்," என்று மகனைத் தேற்றிவிட்டுப் போனாள்,

என்ன தேறுதல் இது? அன்னையும் முயற்சியை விட்டுவிடத்தானே சொல்கிறாள்,! கோவிலில் விளக்குப் போடுவதாமே,! தனக்குத்தானே உதவாதவர்களுக்குத் தெய்வமும் உதவி செய்வதில்லை என்று. அம்மாவுக்குக் கூடத் தெரியவில்லையே,!

தெரியாமல் இராது, ஆனால். கண்ணுக்குத் தெரியாத

எத்தனையோ தளைகளால் கைகால் அசைக்க முடியாமல் கிடந்து பழகிப் போனவளுக்குக் கடவுள்தானே. கடைசிக் கதி,! இப்போது. அவனது நிலையும் அப்படித்தான் முடியப் போகிறதா?

அந்தக் கணத்தில். நித்திலனின் உடல் மனம் முழுவதிலும் மாபெரும் சோர்வு பரவியது,! எல்லாம் நன்றாகிவிடும் என்று நம்பிக்கை. அதனால் ஏற்பட்ட உற்சாகம் எல்லாம் மறைந்து. உலகமே இருட்டாகி விட்டது போன்ற உணர்வு,!

ஒரே ஒரு வெளிச்சமாக. அனுபமாவின் முகம் மட்டுமே எங்கோ மினுக்கிட்டது,

சட்டென நிமிர்ந்தவன். செல்ஃபோனை எடுத்து. அழுத்தினான்,

“என்ன நித்தி?”

வியப்புடன். சற்றுக் கவனமுமான குரல்தான், ஆனால். ஏதோ விதத்தில். அவனது புண்ணில் மருந்திட்டது,

“உடனே உன்னைப் பார்க்க முடியுமா?”

ஒரே வினாடி மௌனத்தின் பின். “எங்கே வரட்டும்?” என்று கேட்டாள் அவள்,

“மால்” வாயிலில் அவளைப் பார்த்ததுமே. அவனுக்கு அப்பாடி என்று இருந்தது,

, கேள்வி கேட்கப் போனவள். அவனது களைப்பு பார்த்து. நெகிழ்ந்து. “என்ன பிரச்சினை. நித்தி? என்னிடம் சொல்லக் கூடியதானால் சொல்லுங்கள்,” என்றாள் கனிந்த குரலில்,

அடுத்த அதிர்ச்சி அவனுக்கு, இவளிடம் என்னவென்று சொல்வது? இவளிடம்தானே. அவன் எதையுமே காட்டிக் கொள்ளவே முடியாது,! பெற்ற பிள்ளையிடம் இப்படி நடப்பவன் ஏன் இப்படி நடந்தான்? மற்றவர்களிடம் எப்படி நடப்பான்? என்ன வேண்டுமானாலும் செய்வானா? அப்படி என்ன வெறி?

என்னென்ன கேள்விகள் எழும்? விடை தெரிந்தால். விளைவு என்னாகும்?

நல்லவேளையாக. இளைஞர்கள் கூட்டம் ஒன்று திமுதிமுவென்று முட்டி மோதிக்கொண்டு உள்ளே புகவும்.

நித்திலனுக்கு யோசித்துப் பதில் சொல்ல அவகாசம் கிடைத்தது, “ஒரு காஃபி குடித்துக்கொண்டே பேசுவோமே,!” என்று அழைத்துப் போனான்,

கவுன்டரில் காஃபி ஆர்டர் பண்ணிவிட்டுக் காத்து நிற்கையில் அவள் கேள்வியாக நோக்கவும். “உஉன்னிடம் சொல்வதற்கென்ன. அனு? சொல்லலாம், ஆனால். உன்னையும் வருத்துவானேன் என்று இருக்கிறது,” என்று தொடங்கி. “தொழிலாளர் பிரச்சினை. அதில் புகுந்து விளையாடும் அரசியல் கட்சிகள். இன்னும் எத்தனையைச் சொல்வது. அனு? அவ்வப்போது ஏதாவது ஒன்று என்றால் பரவாயில்லை, எல்லாம் ஒன்றாக வரும்போது. கொஞ்சம் சலித்துப் போகிறது,” என்று முடித்தான்,

மென்மையாக முறுவலித்தாள் அவள், “அன்றைக்கு சந்தோஷங்கள் ஒன்றாக வரவில்லையா? ஒரு மாறுதலுக்கு இப்போது. இது,! இனிப்பே உண்டால் திகட்டி விடும் என்று. இடையில் கொஞ்சம் காரம்,! அவ்வளவுதான் சீக்கிரமே சரியாகிப் போகும்,” என்றவள். ஆறுதலாக அவனது கரத்தை லேசாக வருடினாள்,

அவனுக்குத் தொண்டை அடைத்தது, அன்றும் பொய்தான், இன்றும் அப்படியே, என்றேனும் இவளிடம் மனம் விட்டு. உண்மை பேச முடியுமா?

வருடிக் கொடுத்த கையைப் பற்றிக் கண்கள் மேல் வைத்துக் கொண்டபோது. பாரம் குறைந்த உணர்ச்சி. நித்திலனுக்கு உண்டாயிற்று,

பொய்க்கு மேல் பொய்தான், ஆனால். உலகில் எதற்காகவும். இந்த ஆறுதலை அவனால் விட்டுக் கொடுக்க முடியாது,!

“சார். காஃபியை எடுத்துக்கொண்டு நகருங்க. சார். பின்னாடி நிற்கிறவங்களுக்குக் கொடுக்கணுமில்ல? கண்ணுக்கு ஒத்தடம் எல்லாம் அங்கிட்டுப் போய் உட்கார்ந்துகிட்டு கொடுக்கலாமில்ல?” என்ற கேலிக் குரல் கேட்கவும். இருவரும் காஃபியை எடுத்துக்கொண்டு சென்றனர், புன்னகையோடுதான்,!

அடுத்த நாலு நாட்களில். அனுபமாவின் பிறந்த நாள் வந்தது,

சரியாகப் பன்னிரண்டு மணிக்கு அவளுக்கு வாழ்த்து அனுப்பி.

காலையில் ஆறுமணிக்குக் குரலால் வாழ்த்தியவன். மாலை ஐந்து மணிக்கு இருவரும் சந்திப்பதாகத் திட்டமும் போட்டான்,

இப்போது அவனுள் ஒரு சிக்கல், அனுபமா விரும்பிக் கேட்கும் பரிசு மட்டுமின்றி. அவள் எதிர்பாராத வண்ணம். தானாகவும் ஒரு பரிசு கொடுக்கவும். நித்திலன் ஆசைப்பட்டான்,

ஆனால். இன்றைய இளம் பெண்களுக்கு என்னென்ன பிடிக்கக் கூடும்?

கூடப் பிறந்த பெண்கள் இல்லாதவன். அண்ணி யாமினியிடம் யோசனை கேட்டான்,

தாயார் என்றதும் யாமினி மாறுவாளே தவிர. மற்றபடி. நல்ல குணம்தான்,. நன்றாகப் பழகுகிறவள்தான்,

விஷயத்தைக் கேட்டதும் சற்று நேரம் கேலி செய்துவிட்டுத் தனக்குத் தெரிந்ததைச் சொன்னாள்,

கூடவே. “கொஞ்சம் பொறுங்கள். தம்பி, இரண்டு மூன்று வருஷங்களாக. எனக்கும் இதில் கொஞ்சம் தொடர்பு விட்டுப் போயிற்று, சுந்தரிச் சித்தி மகள் வனிதா நன்றாக அலங்கரித்துக் கொள்வாள், அவளிடம் கேட்கிறேன், “ என்று அவளுடனும் பேசி. சில குறிப்புகள் கொடுத்தாள்,

இவள் தாயார் எப்படியோ? அண்ணி பழகுவதற்கு இனியவள்தான், இவளைப் போய்ச் சோகப் பதுமையாக்கிவிட்டானே. அண்ணன்,! எங்கே போய்க் குடித்துவிட்டு உருண்டு கொண்டிருக்கிறானோ,! ஏதோ. ஆண்டியப்பனைக் கொண்டு. ஒரு விதமான ஏற்பாட்டைச் செய்திருப்பதால். பார்த்துப் பார்த்து. எப்போதும் அழுகிற நிலை இல்லை,!

உள்ளூர அவளுக்காகப் பரிதாபப் பட்டபடி. யாமினிக்கு நன்றி சொல்லிவிட்டு. நித்திலன். அவனது அறைக்குச் சென்றான்,

ஏற்கனவே வேலையை ஒதுக்கிவிட்டு வந்திருந்ததால். சற்று நேரம் ஓய்வாகப் படுத்திருந்துவிட்டுக் குளித்துக் கிளம்பி மணியைப் பார்த்தால். சரியாக நாலரை ஆகியிருந்தது,

இப்போது கிளம்பினால். ஐந்து மணிக்கு அனுவின் வீட்டுப் பக்கத்துப் பூங்கா வாயிலுக்குப் போய் விடலாம்,

அனுபமாவின் வீட்டில் அவனை யாரும் தடுக்கப் போவது இல்லை என்றாலும். அவளுடைய சிற்றன்னையின் லொடலொடப்பைத் தவிர்ப்பதற்காக. இருவருமாகச் சேர்ந்தே. இப்படித் திட்டமிட்டிருந்தனர்,

நித்திலன் சந்தோஷமாகக் கிளம்பினால். வெளி கேட்டைத் தாண்டும்போதே. ஆண்டியப்பன். அவனைக் கூப்பிட்டுவிட்டான்,

எரிச்சலை அடக்கிக்கொண்டு. "கெஸ்ட் வீட்டுச் சாவி. உன்னிடம்தானே இருக்கிறது? அண்ணனை. அங்கே கூட்டிப் போகாமல் எனக்கு ஏன் ஃபோன் செய்கிறாய்?" என்று. கேட்டான் அவன்,

"அதுக்கெல்லாம் வழியே இல்லை. சார், " என்றான் அவன் ஏதோ பேரழிவை அறிவிக்கும் குரலில்,

"ஏன்?"

"சார். உங்க அண்ணாத்தை. முட்டக் குடித்துவிட்டு. பக்கத்து மேஜையில் உட்கார்ந்து தண்ணியடித்துக் கொண்டிருந்த. ஆளும் கட்சி அரசியல் பிரமுகரோடு பயங்கரத் தகராறு பண்ணிவிட்டார், அந்த ஆள் என்னடா என்றால். அடியாள் வைத்து அடிப்பேன்,. பொய்க் கேசு போட்டு உள்ளே தள்ளுவேன் அப்படி இப்படி என்கிறான், வகையாக ஒரு பெரிய தொகை எதிர்பார்க்கிறான் என்று தோணுது, நீங்க உடனே. நேரிலே வந்தால்தான் சமாளிக்க முடியும். சார்,! இல்லாவிட்டா. அண்ணாத்தையைப் படித்துப் போய் விடுவார்கள் போலத் தெரியுது,!" என்று விவரம் சொன்னான் ஆண்டியப்பன்,

நேரிலே போவதா? அப்படியானால். அனுபமா?

# அத்தியாயம் - 8

பல நாட்களாகத் திட்டமிட்டது, இந்தப் பிறந்தநாள் சந்திப்பை. நித்திலன் மட்டுமல்ல,. அனுபமாவுமே எவ்வளவு ஆவலாக எதிர்பார்த்தாள் என்பது. அவனுக்குத் தெரியும்,

அவள் கண்ட கனவுகள் அத்தனையும் பலிக்கும் என்பது போல. நள்ளிரவில் இருந்து ஆசை காட்டிவிட்டு. இப்போது. ஒன்றுமில்லை என்பதா?

ஏற்கனவே. நிச்சய மோதிரம் வாங்கிய நாளில். அது போல ஒரு பிழை நேர்ந்திருக்கிறது, அதை விடவும் மோசமாக. அடுத்தும் ஓர் ஏமாற்றத்தை அவளுக்குக் கொடுப்பதா?

ஆனால். அண்ணனை ஆபத்தில் விட்டுவிட்டுத் தன் சுகம் பெரிதென்று செல்லவும். அவனால் முடியாது,!

வேகமான யோசனையின் பின். விவரம் தெரிந்தபின் முதல் முதலாக. நித்திலன். அவனுடைய தந்தையிடம் உதவி கேட்டுப் போனான்,

அவரைத் தனியே அழைத்து. விவரத்தைச் சொன்னான்,

“ஐயய்யோ,! ஐயய்யோ,!” என்று பதறியவரை அமைதிப் படுத்தி. “சத்தம் போட்டு. ஊரைக் கூட்டாதீர்கள். அப்பா, இங்கே. யாருக்கும் எதுவும் தெரியக் கூடாது, ஓசையின்றிப் போய் அண்ணனை மீட்டு வர வேண்டும்,” என்றான் சின்ன மகன்,

புரியாமல் பார்த்துவிட்டு. “பின்னே போயேன், போய். அண்ணனுக்கு வேண்டியதைச் செய்து. அவனை மீட்டு வா, இங்கே கதவைச் சாத்திக்கொண்டு. என்னிடம் என்ன ரகசியம் வேண்டிக் கிடக்கிறது?” என்று கதவைத் திறக்கப் போனார். தந்தை,

“ஷ், அப்பா. ப்ளீஸ், இப்போது. நான் அண்ணனிடம் போக முடியாது, எனக்கு வேறு முக்கியமான வேலை இருக்கிறது, அதனால். உனக்குப் பதிலாக நீங்கள் போய். அங்கே பணத்தைக் கொடுத்துவிட்டு. அண்ணனை எப்படியாவது மீட்டு வாருங்கள்,” என்ற மகனை. ஏதோ வேற்று கிரகவாசியைப் பார்ப்பது போல. வெறித்தார் ஈசுவரன்,

“என்னடா உளறுகிறாய்? அண்ணனை விட முக்கியம் வேறு என்ன இருக்க முடியும்?”

சும்மாவே. நேரம் ஓடிக் கொண்டிருந்தது, காரை வேகமாக ஓட்டி. ஒரு பத்துப் பதினைந்து நிமிஷத் தாமதத்தை. எப்படியோ சமாளித்து விடலாம்,!

“ஏய். என்னடா சும்மா நிற்கிறாய்? ஓடு,! உடனே அண்ணனைப் போய்ப் பாரு,! மற்ற வேலை எதுவானாலும். பிறகு பார்த்துக் கொள்ளலாம்,!” என்று விரட்டினார் தந்தை,!

வேறு வழியின்றி. நித்திலன் தந்தையிடம் விவரத்தைச் சொன்னான், “ஏற்கனவே ஒரு தரம். இப்படி ஆகிவிட்டதுப்பா, திரும்பவும் செய்தால் நன்றாக இராது, அதனால்...இங்கே நீங்கள் பார்த்துக் கொண்டால் ” என்று அவன் முடிக்கு முன்பே. ஈசுவரன் பொரியத் தொடங்கிவிட்டார்,

“என்னடா. கல்யாணம் ஆகு முன்பே. நீ பெண்டாட்டிதாசன் ஆகிறாயா? பெண்களை வைக்கிற இடத்தில் வைக்க வேண்டும், இல்லையானால். நம்மையே கால் பிடித்துவிடச் சொல்வாள்கள், அந்த மாதிரி மாட்டிக்கொள்ளாதே, பேசாமல் மகேந்திரனைப் போய்ப்பார், உன் அம்மா. பாட்டியிடம் கேட்டாலும். இதையேதான் சொல்லுவார்கள், இன்னும். யாமினிக்குத் தெரிந்தால். அவ்வளவுதான், வீட்டில் பணம் இருக்கிறதா? போதாது என்றால். உன் அம்மா நகைகளை எடுத்துப் போ,” என்றவர். அதற்கு மேல் அங்கே நில்லாமல். கதவைத் திறந்துகொண்டு. ஓட்டமும் நடையுமாக விரைந்து சென்றுவிட்டார்,

பெற்றவரின் மகத்தான பேருதவி,! அம்மா பாட்டி என்றதே. அவனை மிரட்டச் சொன்னது,! இதற்கு மேல். “யாமினிக்குத் தெரிந்தாலாம்! ”

எங்கே போய் முட்டிக் கொள்வது?

வேறு வழியின்றி. ஆண்டியப்பன் சொன்ன இடத்தை நோக்கிக் காரை வேகமாகச் செலுத்தினான் நித்திலன், ஒரு வேளை,...

ஆனால். சற்றுத் தொலைவில் இருந்து பார்க்கும்போதே. இது எளிதிலோ. விரைவிலோ தீரக் கூடிய பிரச்சினை அல்ல என்று . அவனுக்குப் புரிந்து போயிற்று,

எனவே. அங்கேயே வேகத்தைச் சற்றுக் குறைத்து. அனுபமாவை செல்லில் தொடர்பு கொண்டான்,

அவள் பேசுமுன்பாகவே. "அனு. ப்ளீஸ். என்னை மன்னித்துவிடு, இஇங்கே ஒரு மாபெரும் பிரச்சினை,! நான்தான் பார்த்தாக வேண்டும், இப்போது. அங்கெ வர இயலாது, வேறொரு தரம். கட்டாயம். இதற்கு ஈடு செய்வேன், ஆனால். அனும்மா. தயவு செய்து இப்போது என்னை மன்னித்துவிடு, வைத்துவிடுகிறேன்," என்று பேச்சை முடித்ததோடு. செல்லையே ஸ்விட்ச் ஆஃப் செய்து வைத்தான்,

பாவம்,! அவளுக்கு. எத்தகைய ஏமாற்றத்தைக் கொடுத்துவிட்டான்,!

அதற்கு மேல். நித்திலனுக்கு வேறு எதைப் பற்றி நினைப்பதற்கும் நேரமில்லை,

அதற்குள் அங்கே திரண்டு விட்டிருந்த கூட்டம். அரசியல்வாதியின் செல்வாக்கைப் பறை சாற்றியது, அல்லது. அவருடைய அடியாட்களை,!

ஆய்ய். என்னாய்யா நினைச்சுக்கிட்டே,! எங்க அண்ணாத்தை ஒரு விரலை அசைச்சாக்க. நாடே அதிரும் அண்ணன் கிட்டே நீட்டின கையைக் காட்டு. வெட்டிடுறேன் கெட்ட கெட்ட வார்த்தைகளோடு. இன்னும் என்னென்னவோ,!

வார்த்தைகளைக் கேட்டபடியே செல்லும்போதே. நித்திலனின் நெஞ்சு பதறியது, மகேந்திரனை. உருப்படியாக வீட்டுக்குக் கூட்டிப் போய்ச் சேர்க்க வேண்டுமே,!

காரை நிறுத்திவிட்டு இறங்கும்போதே செல்ஃபோனில் "அப்படி ஒன்றும் நீங்களே வந்தாக வேண்டும் என்று அவசியம் இராது. எஸ்பி. சார், ஆனால். எதற்கும் அண்ணன் கிட்டே ஒரு வார்த்தை போட்டு வையுங்கள், தேவைப்பட்டால் கூப்பிடுவேன் என்று சொல்லுங்கள், ஆனால் அவசியம் இராது, பார்த்தால்...சொல்வதைப் புரிந்து கொள்கிற மாதிரிதான் தெரிகிறது, ம்ம்ம். இங்கே வந்துவிட்டேன் வைக்கிறேன், ஆன்ட்டியைக் கேட்டதாகச் சொல்லுங்கள்," என்று என்று பேச்சை முடித்த பிறகே நிமிர்ந்து சுற்றுமுற்றும் பார்த்தான் நித்திலன்,

“எஸ்பி சார்”. “அண்ணன்” என்ற வார்த்தைகள். என்ன மாதிரி விளைவை உருவாக்கும் என்று அவன் எதிர்பார்த்துச் சொன்னது போலவே. சூழ இருந்தவர்களிடம் இறுக்கம் கலந்த கவனம் தெரிந்தது,

கட்டளையை எதிர்பார்த்தவர்கள் போல. எல்லோருமே. ஒரே திசையில் நோக்கவும்.

நித்திலனும் அந்தப் பக்கம் பார்த்தான்,

பக்கத்து மேஜை ஒன்றின்மேல் கவிழ்ந்து கிடந்த மகேந்திரனைப் பார்க்கையில். அவனது நெஞ்சு பதறியது, அருகிலேயே. இரண்டு கட்டைத் தடியன்களின் நடுவே. ஆண்டியப்பன் நின்றான்,

எடுபிடி போல ஒருவன். உர்ரென்னு உட்கார்ந்திருந்த ஒரு மனிதனின் காதுகளில் ஏதோ ஓதிக் கொண்டிருந்தான், அவன் ஓதி முடிக்கவும். அமர்ந்திருந்த அந்த ஆள். கண்களை உயர்த்தி. நித்திலனைப் பார்த்தான்,

அளவிடுவது போலச் சில கணங்கள் அவன் பார்க்க. நித்திலனும் அதே பார்வையைத் திருப்பினான்,

அந்த மனிதனை மகேந்திரன் அடித்திருந்தாலும். எங்கேயும் வலித்திருக்கக் கூட வாய்ப்பில்லை என்று நித்திலனுக்குத் தோன்றியது,

ஆனால். இவர்களுக்கெல்லாம். கையை ஓங்கினாலே போதுமே,! அல்லது. குடி மயக்கத்தில். உளறிக் குழறி மகேந்திரன் தடுமாறியதைக் கூடத் தவறாக எடுத்துக் கொண்டிருக்கலாம், எங்கே எங்கே என்று அலைகிற அடிவருடிகள் வேறு,!

தனிமையில் பேசியபோது. அரசியல்வாதி. சற்று அமைதியாகவே பேசினார்,

“பாருப்பா தம்பி. குடி என்னவெல்லாம் பண்ணுமின்னு எனக்குத் தெரியும், ஆனால். இப்ப எனக்குத் தொண்டர்கள் கூட்டம் அதிகமாயிட்டுது, அவங்க முன்னாலே என் மதிப்பைக் குறைக்கிற விதமாக யாரும் பேசினால். நான் சும்மா விட முடியாது, அதிலேயும். உங்க அண்ணார் கூட. ரொம்ப மோசமாக எதுவும் பேசிவிடலை, ஆனால்.

அந்த வேலைக்காரப் பயல். இப்படித் துள்ளப் படாது, உங்க அண்ணனைக் கிளப்பி விட்டது மட்டுமாய் இல்லாமல். அவனும் ரொம்பப் பேசிவிட்டான், நம் ஆளுங்களும் கூட்டம் சேர்ந்து விட்டாங்கள்,

"இவர்களை நான் சும்மா அனுப்ப முடியாது. தம்பி, ஆளுக்கு ஆயிரம் என்றாலும். இருபத்தைந்து பேர் இருக்கிறார்கள், இவர்களில் மூன்றுபேர் கூட்டம் சேர்க்கிறவர்கள், அவர்களுக்குக் கூடுதலாகப் பத்து. பதினைந்து கொடுக்க வேணும், பிரியாணி. சிக்கன் சாப்பாடு வேறு போட வேணும், அத்தோடு. உங்க ஆள் மோசமாகப் பேசியதுக்கு ஒரு லட்சம், மொத்தமாக ஐந்து லட்சத்தைக் கட்டிவிட்டு. அண்ணாரைத் தூக்கிட்டு போ," என்று முடித்தார்,

ஐந்து லட்சம்,!

"இவ்வளவான்னு பார்க்காதே. தம்பி, உனக்கு ஒரு எஸ்பி. ஒரு அண்ணனைத் தெரியுமின்னால். நமக்கு. அண்ணனுக்கு அண்ணனையே தெரியும், எங்கே போனாலும். ஏதோ கொடுத்து சமாதானமாகப் போ என்றுதான் சொல்வாங்க, தொண்டனுங்களுக்குத் தீனி போடுகிறதுன்னா. என்னான்னு அவங்களுக்குத் தெரியும், அப்பறம் பெரிய இடம் வரை கொடுப்பதுக்கு. அது வேறே எவ்வளவு ஆகும் என்று நீயே யோசிச்சு. நீயாவே முடிவு பண்ணிக்க, ஆனால் சீக்கிரமாகப் பண்ணு, நேரம் ஆக. ஆக. பயலுக எகிறத் தொடங்கி விடுவானுங்க,! கட்டுப் படுத்துகிறது கஷ்டம் செலவும் அதிகம் ஆகும்," என்று எச்சரிக்கை விடுத்தார் அரசியல்வாதி,

பாச மிகுதியில். யோசனையின்றி. தாத்தா போட்டு வைத்த சிடுக்கு,! மேலும் மேலும் சிக்கல் பெரிதானதே தவிர. விடுபடும் வழி இருப்பதாகவே. அவனுக்குத் தெரியவில்லை,

ஐந்து லட்சத்தைத் தூக்கிக் கொடுக்கவும். மற்றவர் வாயெல்லாம் பல்லாயிற்று, "கையோட மருந்தைக் கொண்டு வந்துவிட்டு. இவ்வளவு நேரம் பேசணுமா. தம்பி? தூக்கிப் போட்டால். அப்பவே கவ்விக்கிட்டு. ஓடியிருப்பானுகளே,! ஒரு பத்து நிமிசம் பயலுக கிட்டே நான் நல்ல விதமாகப் பேசி அனுப்பின பிறகு. நீங்க கிளம்புங்க, இனிமே. நண்பராயிட்டீங்க, உங்களுக்கு ஏதேனும்

வேலை ஆகணுமின்னா. நம்ம கிட்டே வாங்க. தம்பி,” என்றுவிட்டு. முன்புறம் சென்று. அவருடைய தொண்டர்களிடம் பேசினார்,

தேவையற்ற துன்பம், இனி. இந்த அரசியல்வாதி. எங்கே பார்த்துத் “தம்பீ” என்று அழைத்து. என்ன பேசுவாரோ?

“என் உயிருக்கும் மேலான உண்மைத் தொண்டர்களே... “ என்று மேடைப் பாணியில் பேசி. பணத்தைப் பட்டுவாடா செய்து அனுப்பிவிட்டுத் திரும்பி வந்தார்,

அவரது பாக்கெட்டில் தெரிந்த புடைப்பைக் காணாதிருக்க முயன்றபடி. “நாங்கள் கிளம்புகிறோம். சார்,” என்று விட்டு. மகேந்திரனைக் காருக்கு அழைத்துவருமாறு. ஆண்டியப்பனுக்கு சைகை செய்தான் நித்திலன்,

தோளடியில் கை கொடுத்து. அவன் மகேந்திரனை அழைத்து வர. வேகமாகப் போய்க் கார்க்கதவைத் திறந்து வைத்தான்,

இருவருமாகச் சேர்ந்து மகேந்திரனைக் காரில் ஏற்றியதும். “நீயும் ஏறிக்கொள், காரிலிருந்து இறங்கும்போதும் உன் உதவி தேவைப்படக் கூடும், அந்தக் காரை. அப்புறமாக எடுத்துக் கொள்ளலாம்,!” என்று ஏவினான்,

ஆண்டியப்பனைக் காரோட்டச் சொல்லிவிட்டு. பக்கத்தில் லேசாகத் திரும்பி அமர்ந்து. மூத்தவனிடம் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு. நித்திலன் பேசத் தொடங்கினான்,

“நீ கொஞ்சம் சும்மா இருந்திருக்கலாம் போலத் தெரிகிறதேப்பா,! “ என்றான் சற்று அலுத்த குரலில்,

ஆண்டியப்பனும் மறுத்துப் பேசவில்லை, ஊதியம் தருகிறவனின் பேச்சை ஒத்துக்கொண்டு. “அப்படித்தான் போல. இப்பத் தோணுது. சார்,!” என்றவன் யோசனையோடு மேலும் தொடர்ந்து பேசினான், “ஆனால் சார். நம்ப அண்ணாத்தையை அந்தாளு பேசின பேச்சுலே. அப்போ ரத்தம் கொதிச்சுப் போயிட்டுது, கை நீட்டி வாங்குகிற பணம், அதுக்கு உண்;மையாக இருக்க வேண்டாமா? எஜமான விசுவாசம் இல்லாட்டி. அப்புறம். அந்தப் பணம். நம்ப ரத்தத்திலே எப்படி ஒட்டும்? நீங்களே. சொல்லுங்க?” என்று நித்திலனையே கேட்டான்,

“என்னவோப்பா. உன் பேச்சுக்குத் தனியான ஒரு லட்சம் வாங்கிவிட்டான், இனி எப்போதும. நினைவு வைத்துக்கொள், அண்ணன் என்ன வேண்டுமானாலும் பேசட்டும், எஜமான விசுவாசம் என்று. அவனோடு நீயும் சேர்ந்து வாயை விடாதே,! வினையாகி. வீண் செலவும் ஆகிவிடுகிறது,!” என்றான் சலிப்புடன்,

சொல்லும்போதே. என்னவோ அவனுக்கு முரணாகப் பட்டது,

ஆண்டியப்பனுக்கு ஊதியம் கொடுப்பது. மகேந்திரன் இல்லையே,! அண்ணனின் பாதுகாப்புக்காக அவனை இந்த வேலையில் அமர்த்திக் கொழுத்த சம்பளத்தையும் கொடுப்பவன். நித்திலன் ஆயிற்றே,!

ஒருவேளை. மகேந்திரனுக்காகத்தானே இந்த வேலையே,. அவன் மட்டும் பிரச்சினை அற்று இருந்திருந்தால். ஆண்டியப்பனுக்கு இந்த வேலையோ. அதற்காக இவ்வளவு அதிகமான சம்பளமோ யார் கொடுப்பார்கள்?

பின் சீட்டில். சிறு குறட்டையுடன் உறங்கிக் கொண்டிருக் கொண்டிருந்த அண்ணனைப் பார்த்தவனின் மனது எங்கேயோ பறந்தது,

அனுபமா,! இதைப் போல ஒரு மோசமான பிறந்தநாளை. இதுவரை அனுபவித்திருப்பாளா?  இத்தனைக்கும். மிக மிக சந்தோஷமாகப் பொழுதைக் கழிக்க வேண்டும் என்று எத்தனை நாளாகத் திட்டமிட்டது,!

மகேந்திரனை “கெஸ்ட் ஹவுசி”ல் படுக்க வைத்துவிட்டு. ஆண்டியப்பன் போய் அண்ணனின் காரை எடுத்து வரும்வரை காவலிருந்தான்,

அண்ணனின் சிறு குறட்டையைக் கேட்டபடி செய்கையற்று அமர்ந்திருந்தவனின் நெஞ்சு தவியாய்த் தவித்தது,

மணி பத்து,

ஐந்து மணிக்குச் சந்தித்து. அனுபமாவைப் பரிசுகளால் திணறடித்து. உல்லாசமாகப் பேசியபடியே உணவருந்தி. அவளை ஒன்பது மணிக்கு வீட்டில் விட்டு. வீடு திரும்பி. அன்றைய நினைவுகளை எண்ணி மகிழ்ச்சியில் ஆழ்ந்திருக்க வேண்டிய நேரம்,!

ஆனால். இப்போது என்ன சொல்லி அனுபமாவைச் சமாதானப்படுத்துவது என்று தெரியாமல் கலங்கியபடி. இப்படி உட்கார்ந்திருக்கிறானே,!

இது போல. எத்தனை நாள் ஓடும்?

வேறு எந்த வழியிலாவது தெரிவதைக் காட்டிலும். என் அண்ணன் குடிகாரன்,. அவனுக்காகக் கண்ட கண்ட நேரத்திலும் நான் எங்கெங்கோ ஓட வேண்டியிருக்கிறது,. இது என் தலைவிதி,. என்னோடு சேர்ந்து. இதையும் ஏற்றுக் கொவாயா என்று அனுவிடம் நேரிலேயே கேட்டுவிட்டால் என்ன?

எப்போது உண்மை தெரிந்து போகுமோ என்கிற அச்சமேனும் தீர்ந்து போகுமே என்று ஒரு தரம் நித்திலன் யோசித்தான்,

ஆனால் உடனேயே. ஐயையோ. உங்கள் அண்ணன் குடிகாரரா? தன்னிலை மறக்கும் அளவு குடிப்பவரா? அப்படிப்பட்ட ஒருவர் எந்த நேரம். என்ன செய்வாரோ என்று பயந்துகொண்டே உங்கள் வீட்டில் எப்படி வாழ்வது? உங்கள் சகவாசமே வேண்டாம் என்று. அவள் விலகிவிட்டால்?

அவளாக அப்படிச் சொல்லத் தயங்கினால் கூட. அவளுடைய பெரிய தம்பி. அந்த மீசை அரும்பிக் கொண்டிருந்த கண்ணன் நிச்சயமாக. அவர்களது திருமணத்தை நடத்த விட மாட்டான்,

தம்பியின் பிரியமும். அவளுக்கு அவனிடம் இருக்கும் பாசமும். அனுபமாவின் பேச்சில் அவ்வப்போது வெளிப்படும், அவளுக்காகப் பெற்றவளைக் கூடத் தூக்கியெறிந்து பேசிவிடுவானாம், அவ்வளவு பெருமை,! சொல்லும்போதே குரலில் குழைவும் பூரிப்பும் சொட்டும்,!

பெற்ற தாயையே தூக்கி எறியத் துணிகிறவன். இன்னமும் உறவென்றே ஆகியிராத நித்திலனைத் தன் அன்புத் தமக்கையின் எதிர்காலத் துணைவனாக எப்படி ஒப்புவான்?

கட்டாயமாகத் திருமணத்தை நிறுத்தியே விடுவான், அதை எப்படித் தாங்குவது?

விவரம் தெரிந்துவிட்டாலும்கூட. அனுபமா வீட்டில் கண்டுகொள்ள மாட்டார்கள் என்கிற அன்னையின் வாதம். நிச்சயமாக இங்கே செல்லுபடி ஆகாது,!

அனுபமா இல்லாத ஒரு வாழ்க்கையை வாழ்வதை விட. அன்றோடு தன் வாழ்வே முடிந்துவிட்டால் கூடப் பரவாயில்லை போல. அந்த வினாடியில் நித்திலனுக்குத் தோன்றியது,

முடியாது, எந்தக் காரணம் கொண்டும் அவளை இழக்க முடியாது,

திருமணம் முடிந்துவிட்டாலும் கூட. அந்தக் கண்ணன் தகராறு பண்ணத்தான் செய்வான்,

ஆனால். அன்றைக்குக் கணவன் என்ற உறவோடு. அனுவை நெருங்கி. தன் அன்பைக் கொட்டி. அவளை சமாதானப்படுத்த நித்திலனால் முடியும்,

வெறும் செக்சினால் மட்டுமல்ல, அவளுக்குச் சிலபல சலுகைகளை அளித்து. அவளது விருப்பங்களுக்கு மதிப்புக் கொடுத்து எத்னையோ வழிகள் அப்போது கிடைக்கும்,

ஆனால். இப்போது உண்மை தெரிந்துபோனால். அவளைச் சந்தித்து. சமாதானப்படுத்தும் வாய்ப்புக் கூட. அந்தத் தம்பியின் தடையால். நித்திலனுக்குக் கிடைக்காமல் போகக் கூடும்,!

அதனால். இப்போதைக்கு அண்ணனின் இந்தக் கேடான குடிப் பழக்கம் பற்றி. அனுபமா வீட்டாருக்குத் தெரியாதிருப்பதே நல்லது, நிச்சயமாகத்தெரிவே  கூடாது,!

ஆனால். வெடிக்கப் போகும் “டைம்பாமி”ன் மேல் எந்த வினாடி வெடிக்குமோ என்ற அச்சத்துடன் உட்கார்ந்திருப்பது போல. எப்போது அண்ணனைப் பற்றி அனுபமா வீட்டாருக்குத் தெரிந்துபோகுமோ என்று அஞ்சியபடி. என்ன வாழ்க்கை இது?

ஆண்டியப்பன் காரோடு திரும்பி வந்து. அவனிடம் மகேந்திரனை ஒப்படைத்துவிட்டு. நித்திலன் வீட்டுக்குக் கிளம்பும்போது. மணி பன்னிரண்டைத் தாண்டி விட்டது,

சும்மாவே அலுப்புடன்   இருந்தவனுக்கு. கார் செல்ல இடமின்றி ஆட்டோ ரிக்ஷாவை நிறுத்தி அதிகப் பணம் கேட்டோ என்னவோ. வாதம் செய்துகொண்டிருந்த ஆட்டோ ஓட்டியிடம் கோபம் வந்தது,

இன்னொரு கார் செல்லும் அளவுக்கு. ரோடு அகலமானதுதான், ஆனால். சாலையின் ஒரு புறம் முழுதும் இடத்தை அடைத்துக்

கார்களைப் பார்க் செய்து வைத்திருந்தார்கள்,

உள்ளே பார்க் பண்ண வசதி இல்லாதவர்கள் ஏன்தான் கார்களை வாங்கித் தொலைக்கிறார்களோ என்று உள்ளூர எரிச்சல் பட்டவன். அந்த எரிச்சலைத் தொடர்ந்து ஹார்ன் செய்து. ஆட்டோ ஓட்டியிடம் காட்டினான்,

“பொறு. சார்,” என்று வாயாலும் சைகையாலும் தெரிவித்த ஆட்டோக்காரன். இறங்கி நின்ற பெண்களில் ஒருத்தி கொடுத்த பணத்தை வாங்கிக்கொண்டு. அதன் பிறகே வண்டியைக் கிளப்பிச் சென்றான்,

“ஹூம்,!” என்று பிரேக்கிலிருந்து காலை எடுத்துக் காரை ஓட்டும்போது. இறங்கி நின்ற பெண்களில் ஒருத்தி. திகைப்புடன் கையை உயர்த்துவது போலத் தோன்றியது,

காரை நிறுத்தாமல் ஓட்டியபடியே பின்புறக் கண்ணாடியை லேசாகத் திருப்பிப் பார்த்தபோதும். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை,

எல்லா இளம் பெண்களையும் போலவே தோன்றிய அந்த ஒருத்தி. கூட இருந்தவர்களிடம் காரை...அல்லது காரை ஓட்டிய அவனைக் காட்டி ஏதோ சொல்வது போலத் தோன்றியது,

எந்த விதத்தில். அந்தப் பெண்ணுக்கு. அவன் அறிமுகம்?

ஒரு கணம் யோசித்தாலும். மறு வினாடியே மனம் அவளை மறந்துவிட்டு. அனுபமாவிடம். அவளிடம் என்ன விளக்கம் கூறுவது என்று. அந்தப் பிரச்சினையிலேயே உழலலாயிற்று,

தொழிற்சாலையில் பிரச்சினை என்று அதையே மறுபடியும் சொல்ல முடியாது,

வேறு பொய் மேல் பொய்யாக எத்தனை? அதுவும். அவனது உயிராக மாறிவிட்டவளிடம் என்று மனது ஒரு புறம் குத்தியபோதும். இப்போதைக்கு வேறு வழி இல்லை என்று. தன்னைத்தானே சமாதானப்படுத்திக்கொண்டு. தீவிரமாக யோசித்தான்,

வெகுவாக யோசித்து. கடைசியாக ஒரு வழியைக் கண்டுபிடித்தான்,

அதன்படி. மறுநாள் மதிய உணவு இடைவேளையின் போதே.

அனுபமா பணி புரியும் இடத்துக்குப் போய் நின்றான்,

யாருடனோ சேர்ந்து உணவருந்தக் கிளம்பியவள் சில வினாடிகள் பேசாமல் அவன் முகத்தைப் பார்த்தாள்,

பிறகு. கூட வந்த பெண்ணின் பக்கம் திரும்பி ஏதோ சொல்லிவிட்டு. நித்திலனை நோக்கி வந்தாள்,

வந்தவள் கோபப்படவில்லை,. வருத்தப்படவில்லை,. எரிச்சல் படவில்லை,. ஏமாற்றத்தையும் காட்டவில்லை, மெதுவாக. “என்ன ஆயிற்று. நித்தி?” என்று மட்டும். மெதுவாகக் கேட்டாள்,

அவள் பார்த்த அந்த வினாடிகளில். அவனும் அவள் முகத்தைத்தானே பார்த்துக் கொண்டிருந்தான், அவளது முக வாட்டமும். கண்களுக்கடியில் லேசான வீக்கமும். அதை மறைக்கும் விதமாகச் சிறு ஒப்பனையும். கூர்ந்து பார்த்த அவனது கவனத்துக்குத் தப்பவில்லை,

குரலின் சிறு கரகரப்பும் கூட ,

நன்றாக அழுதிருக்கிறாள், ஏமாற்றம் வருத்தம் எல்லாமும்தான், ஆனாலும். அவனிடம் நம்பிக்கை வைத்துப் பொறுமையாக. விவரம் கேட்கிறாள்,!

யாருக்குக் கிடைக்கும் இந்த மாதிரிப் பொக்கிஷம்?,!

ஆனால். இவளிடம் பொய் சொல்ல வேண்டியிரக்கிறதே என்று உள்ளூர நொந்தபடி. யோசித்து வைத்த கதையைச் சொன்னான்,

அவளைச் சந்திப்பதற்காகக் கிளம்பி வரும் வழியில் ஒரு விபத்து பார்த்தால் மாட்டிக் கொண்டிருந்தது. அவனுடைய நண்பன், அவனைப் பத்திரமாகக் கூட்டிப்போய்த் தன் பொறுப்பாய் மருத்துவமனையில் சேர்த்துவிட்டு. அவனுடைய உறவினரை அழைத்து. விவரம் சொல்லி... எல்லாம் முடியுமுன் இரவு வெகு நேரம் ஆகிவிட்டது. அனும்மா, அதற்குப் பிறகு. உன்னை எழுப்பி விவரம் சொல்ல எனக்குப் பிடிக்கவில்லை, அதை விட. இன்று இப்படி நேரிலேயே சொல்லி. மன்னிப்புக் கேட்கலாம் என்று. இங்கே வந்தேண்டாம்மா,” என்றான் அன்பு சொட்டும் குரலில் கெஞ்சலாக,

லேசாகப் புன்னகை செய்தாள் அனுபமா, “அந்த

மருத்துவமனை கேகே நகர் பக்கம் இருக்கிறது போல?" என்று மென் குரலில் கேட்டாள் அவள்,

நித்திலனின் மனதில் எச்சரிக்கை மணி அடித்தது, அங்கே. அவனது நிறுவனத்தின் "கெஸ்ட் ஹவுஸ்" அல்லவா இருக்கிறது,!

திரும்பும்போது பார்த்த பெண்ணின் முகம் நினைவில் மின்னலடித்தது, மருத்துவமனை அங்கே என்று சொன்னால். எந்த மருத்துவமனை என்று கேள்வி எழக் கூடும், எனவே எச்சரிக்கையோடு. "இல்லையேம்மா, அந்தப் பக்கம். நண்பனுடைய உறவினர் ஒருவரைக் கொண்டு விடும்படி ஆயிற்று, நல்லவேளை,! ஒரு குறுக்குத்தெரு முனையிலேயே இறங்கி. நடந்து போய்க் கொள்கிறேன் என்றுவிட்டார், இல்லாவிட்டால். அங்கே வேறு எத்தனை சுற்று. சுற்ற வேண்டியிருந்திருக்குமோ? ஆனால் என்ன. திடீரென்று இப்படிக் கேட்கிறாய்?" என்று விசாரித்தான் அவன்,

சோர்ந்த முகத்தில் இன்னொரு புன்னகை. சற்று அதிகமாக விரிந்தது, "பெரிதாக ஒன்றுமில்லை, அந்த நேரத்தில் என்னை எழுப்ப வேண்டாம் என்று. நீங்கள் எனக்காகப் பார்த்திருக்கிறீர்கள், ஆனால். வீட்டுக்கு வந்த உறவுக்காரியோடு ஊர் சுற்றிவிட்டு வந்த என் தோழி சுதா. உங்களை அந்த நேரத்தில் பார்த்திருக்கிறாள், என் பிறந்த நாள் என்பது நினைவு வர. அப்போது கூப்பிட்டு வாழ்த்தியதோடு. என்னைத்தான் வீட்டில் விட்டுவிட்டு நீங்கள் திரும்பிப் போவதாக நினைத்துக் கலாட்டா பண்ணினாள், சரி. அப்படியே எண்ணிக் கொள்ளட்டும் என்று. சும்மா இருந்துவிட்டேன், மற்றபடி. உங்களைப் பார்க்கவே முடியாமல் போனதை எல்லாம். எதற்காகப் பறைசாற்ற வேண்டும், சும்மாவே. கொஞ்சம் பொறாமைக்காரத் தோழி அவள், அய்யோ பாவம் என்று போலியாகப் பரிதாபப் பட்டால் என்னால் தாங்க முடியாது என்று. சும்மாவே இருந்து சமாளித்துவிட்டேன்,"

என்று அனுபமா சொல்லச் சொல்ல. நித்திலனுக்கு மனம் மிகவும் வேதனைப்பட்டது,

அவனுடைய கண்மணி. எவ்வளவு நொந்திருக்கிறாள்,!

அதை வெளிக்காட்டாமல். எப்படி சமாளித்திருக்கிறாள்,! தோழி பேசப் பேச. மனதைக் கூறு கிழிக்கிற மாதிரியல்லவா வலித்திருக்கும்,!

இதற்கெல்லாம் ஈடு செய்வது போல. இனி அவளுக்கு ஒரு துன்பமும் நேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று மனதுக்குள் சூள் உரைத்தான் நித்திலன்,

ஆனால். அது. அவன் கையில் மட்டுமா இருக்கிறது?

# அத்தியாயம் - 9

உணவு இடை வேளை முடிகிற வேளை நெருங்குகிற வரையும். நித்திலன். அனுபமா இருவருக்குமே உணவு பற்றிய எண்ணமே வரவில்லை,

அண்ணன் அறையில் இருந்து நினைத்ததை மட்டும் அவன் சொன்னான்,

ஏதோ காரணம் இருக்கும் என்று புரிந்தாலும். ரொம்பவும் ஏமாற்றமாகி. தன்னை மீறிக் கண்ணீர் வந்துவிட்டதாக. அவள் சொன்னாள்,

கைகளை இறுக மூடி. "உன்னை இறுக அணைத்து. உன் தவிப்பையெல்லாம் என்னுள் இழுத்துக் கொண்டுவிட வேண்டும் என்று மனது துடிக்கிறது, ஆனால். வளர்ந்த முறையும். இருக்கும் இடமும் தடுக்கின்றன," என்று அவன் சொன்னபோது. அவள் அழகாக முகம் சிவந்தாள்,

அப்போதும் அவனையே நோக்கி. "உங்கள் வார்த்தைகள் என் துன்பத்தை.ஒட்டத் துடைத்துவிட்டன, ஆனால். நீங்களும் எவ்வளவோ வேதனைப் பட்டிருக்கிறீர்கள்தானே? அத்தோடு. நண்பருக்காக அலைந்து திரிந்தது வேறு,! " என்று அவள் இரங்கவும்.

அவனது பேச்சு நின்றது,

உண்மை நிலையைச் சொன்னபோது. தங்கு தடையறியாமல் அருவியாய்ப் பொங்கி வழிந்த வார்த்தைகள். இப்போது பேச மாட்டாமல் தொண்டையில் சிக்கின,

தொண்டையைச் சீர்ப் படுத்துகிறவன் போல லேசாகச் செறுமித் திரும்பியவன். அலுவலர்கள் உணவு முடிந்து ஓரிருவராகத் திரும்புவது கண்டு திடுக்கிட்டான்,

இன்னமும் அனுபமா ஒரு வாய் கூடச் சாப்பிடவில்லையே,! முன்தினம்தான் அவள் மனதை நோகடித்தான் என்றால். இப்போது பட்டினி போட்டு உடலையும் வருத்துவதா?

அவசரமாக அவளது கையில் இருந்த உணவுப் பாத்திரத்தை ப் பிடுங்கித் திறந்து. வேகமாகச் சாப்பிடச் சொன்னான்,

“நீங்களும்தானே சாப்பிடவில்லை?” என்று அவள் மறுத்தாள்,

“ஷ், வாதம் செய்து நேரத்தை வீணாக்காமல். சொல்வதைச் செய். அனு, நான் செல்லும் வழியில் கூடச் சாப்பிட்டுக் கொள்வேன், நேற்றுக் கூட ஏதேனும் உண்டாயோ. இல்லையோ, இன்றும் நீ பட்டினியாய் வேலைக்குத் திரும்பிச்சென்றால். எனக்குத் தாங்கவே முடியாது, அப்புறம். நானும் இன்று முழுதும் சாப்பிட மாட்டேன்,” என்று அவன் மிரட்டவும். அவனைக் காதலுடன் பார்த்தவாறே. வேகமாக உண்ண முனைந்தாள் அனுபமா,

வேக வேகமாக. அவள் கிட்டதட்ட உண்டு முடிக்கிறபோது. கான்டீனிலிருந்து கடைசி ஆளும் திரும்பி வந்து. அலுவலகத்துக்குள் சென்றுவிடவே. “கட்டாயம் சாப்பிட வேண்டும்,” என்ற செல்லக் கட்டளையுடன். சிட்டாகப் பறந்துவிட்டாள்,

முந்தைய தினம் அடியோடு மறந்து. அவன் முகத்திலும் புன்னகை மலர்ந்தது,

இவளுடன் வாழும் வாழ்க்கை. இப்படித்தான் தினமும் சந்தோஷமாக் கழியப் போகிறது,!

அக்கறையோடு அனு சொன்னாளே என்பதற்காகவே எதையோ வாங்கிச் சென்று. சுவையறியாமலே மனதார ருசித்து உண்டுவிட்டு. வேலையைத் தொடங்கினால். வழக்கமான நெட்டி முறிக்கும் வேலை. அவனுக்கு வேலையாகவே தெரியவில்லை,

“காற்றி ஏறி அவ்விண்ணையும் சாடுவோம்,. காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே” என்று பாரதியார் கூறியது இதைத்தான் போலும்,

நேசத்துக்கு உரியவளின் இனிய நினைவுகளோடு செய்யும்போது. எந்த வேலையும் எளிதாகிவிடும் போலும்,!

அலுவலக வேலை நேரம் முடிந்து. எல்லோரும் கிளம்பிச் சென்ற பிறகும். அனுபமாவின் அழகாகச் சிவந்த முகத்தையும். நேசமிகுந்த பார்வையையும். அன்பும் உரிமையுமாக உண்ணச் சொன்ன குரலையும் நினைத்து நினைத்துப் பரவசப்பட்டபடி. ஆஃபீஸ் அறையிலேயே சற்று நேரம் உட்கார்ந்திருந்தான் நித்திலன்,

பிறகும் அதே நினைவுடனேயே. “ஷிஃப்ட்”படி வேலை நடக்கும்

தொழிற்சாலைப் பக்கம் சென்று வழக்கம் போலச் சுற்றிப் பார்த்தான்,

கூடவே வந்த தொழிற்சாலை நிர்வாகி. வேலை விவரம் பேசி முடித்ததும் சற்றுத் தயங்கிவிட்டு. "சார். இன்றைக்குத் தொழிற்சாலை சுற்றிப் பார்க்க வருவீர்களா என்று ஒருவர் விசாரித்தார், இதற்கு முன்பும் ஓரிரு முறை இப்படி விசாரித்ததால். உங்கள் காதில் போட்டு வைக்கலாம் என்று நினைத்தேன், " என்றார்,

அவனது நடவடிக்கைகளை வேவு பார்க்கிறார்களா? யார்? பொதுவாகப் பெண் வீட்டார் அப்படிச் செய்வார்கள் என்று சொல்வார்களே,!

ஒரு கணம் அண்ணன் விவகாரம் பற்றி எண்ணி. உள்ளம் பதறியபோதும். அனுபமா குடும்பத்தினர் யாருக்கும் அப்படி ஐடியா எதுவும் கிடையாது என்று அறிந்திருந்ததால். நித்திலன் உடனேயே நிம்மதியடைந்தான்,

ஆனால். வேறு யார்? யாருக்கு இந்த நோண்டல் புத்தி?

"யார். எதற்காகக் கேட்கிறார் என்று விசாரித்தீர்களா?" என்று நிர்வாகியிடம் கேட்டான்,

"ஆமாம். சார், அதைக் கேளாமல் இருப்பேனா? எல்லாம் உங்கள் வந்து. உஉங்கள் அண்ணாத்தைக்காகததான் கேட்பதாகச் சொன்னான் ... சொன்னார். சார், கேட்டவர் செல் எண்ணைக் குறித்து வைத்தேன், " என்று. அவரது குறிப்புப் புத்தகத்தில் இருந்து ஓர் எண்ணைக் காட்டினார்,

"அண்ணாத்தை" என்ற வார்த்தையிலேயே நித்திலன் ஊகித்தது போல. ஆண்டியப்பனின் எண்தான், ஆனால். இவனுக்கு எதற்காக இந்த விசாரணை?

"ஓ. இவனா? அண்ணனுடைய காரோட்டி " என்று கூறும்போதே. பிரச்சினை என்றால் எந்த நேரமும் நேரிலேயே அழைக்கும்படி பணித்திருக்க. வேறு நேரடி எண்ணும் கொடுத்திருக்க. இவன் ஏன் இங்கே கேட்கவேண்டும் என்றும் நித்திலனுக்குத் தோன்றியது,

எதுவாகவும் இருக்கட்டுமே,. ஏன் என்று கேட்டால் சொல்லிவிடப் போகிறான் என்று எண்ணி. "கேட்டால் சொல்லுங்கள். மேனேஜர், ஆனால்... அவன் கேட்ட விவரம்

என்னிடமும் தெரிவித்து விடுங்கள்,” என்று முடித்தான்,

எண்ணியது போலவே. ஆண்டியப்பனிடம் கேட்கவும் செய்தான்,

ஒரு கணம் தயங்கினாற்போலத் தோன்றியபோதும். ஆண்டியப்பன். உரிய பதில் சொல்லாமலும் இருக்கவில்லை,

“என்ன செய்கிறது. சார், அந்த மனுஷர். அதான் உங்கள் அண்ணாத்தை. கொஞ்சம் மூடு ஒரு மாதிரி மாறினாக்க. உங்களைக் கூப்பிடத் தயாரா. இந்த விவரமெல்லாம். நான் கேட்டுக் கொள்கிறதுதான், அப்பத்தானே. கூப்பிடுகிறப்போ. உங்களாலே சுளுவா. வெரசா வர முடியுமா. இல்லை நேரமாகுமா என்று எனக்கும் தெரியும்? அதுக்குச் சரியாக. அவரு கிட்டேயும் பேசிச் சமாளிக்க முடியுதான்னு பார்க்கலாம், என்னவானாலும் நான் வேலைக்காரன், சின்னப் புள்ளை மாதிரி. அடிச்சுப் பிடிச்சா. அண்ணாத்தையை நிறுத்தி வைக்க முடியும்? அதுதான். அப்பப்போ இப்படி உங்களைப் பற்றியும் கேட்டுக்கிடறது,” என்று நீளமாகப் பேசி முடித்தான்,

“ஆனால். என்னிடமே கேட்கலாமே? “

“அடப் போங்க. சார்,! வீடு. தொழிலு அல்லாத்தையும் முளுக்கத் தாங்கற ஆளு, அதுக்கு மேலே. அண்ணாத்தை வேற, இந்தச் சின்ன விவரத்துக்கு எல்லாமா. உங்களைத் தொல்லை பண்ணுகிறது? அதான். அந்தாள் கிட்டே கேட்டாலே சொல்லிடுவானே,!” என்றான் ஆண்டியப்பன்,

பணியாள். அவனுக்காகத்தான் யோசித்துச் செயல்பட்டிருக்கிறான் போல, வீடும் வெளியுமாக எல்லாம் பார்க்கிறவன் என்று. இப்போது வந்த இந்த ஆண்டியப்பனுக்குத் தெரிகிறது, பிறந்ததில் இருந்து பார்த்து வளர்த்த தாத்தா. அவனை நம்பாமல் ஒரு வேலை செய்து. அண்ணனை நாசமாக வழி செய்துவிட்டாரே,!

வேலையாளின் பேச்சை இதமாக உணரும்போதே. உள்ளே இடித்தது,

அவன் இதமாக உணர வேண்டும் என்ற நோக்கத்துடனேயே சொல்லப்பட்டதோ?

ஏனெனில். இதே ஆண்டியப்பன். அண்ணனிடம் எஜமான விசுவாசம் என்று அரசியல்வாதியிடம் அதிகம் பேசியது. நித்திலனுக்கு நினைவிருந்தது, ஏன்? நித்திலனிடமே சற்று அலட்சியம் தொனிக்கப் பேசியும் இருக்கிறான், இப்போது ஏன் இந்த மாற்றம்?

மனிதர்கள் அப்படி ஒன்றும் இலகுவாக மாறிவிட மாட்டார்கள் என்பது. நித்திலன் அனுபவத்தில் கண்டறிந்த உண்மை,

ஆண்டியப்பன் நடப்பைக் கண்டு உண்மை உணர்ந்தும் சொல்லியிருக்கலாம், சம்பளத்தைத் தருகிறவனுக்குக் கொஞ்சம் ஐஸ் வைக்கவும் எண்ணியிருக்கலாம், எதற்கும். அவன் சொல்வதை. அப்படியே நம்பி விடக் கூடாது என்று. நித்திலன் தனக்குள் உறுதி கொண்டான்,

அடுத்து. அவர்களது திருமணத்தை உறுதி செய்த நாள் வந்தபோது. இருவரும் பகலிலேயே சந்தித்துக் கொண்டனர்,

தெளிவான நேரம். காலம் என்று மகேந்திரனுக்குக் கிடையாது என்றாலும். மாலை வேளைகளில். குடிக்கும் உந்துதல் அதிகம் இருப்பதை. நித்திலன் கவனித்திருந்தான்,

அதனால். மாலையில் வேலை இருப்பதால் மதியம் சந்திப்போமா என்று  அனுபமாவிடம் கேட்டான், அவளும் சம்மதித்து. ஒரு மணி நேரம் அதிகப்படியாக விடுப்பு எடுத்துக்கொண்டு வரவே. இருவரும் சந்தோஷமாகச் சுற்றினார்கள்,

பிறந்த நாளன்று தானாகக் கொடுப்பதாக இருந்த பரிசுகளை நித்திலன் அப்போது கொடுக்க. அனுபமா உருகிப் போனாள்,

“இப்படியெல்லாம் திட்டம் போட்டுவிட்டு. நண்பருக்காக மருத்துவமனையில் உட்கார்திருந்தபோது. பா...வம். உங்களுக்கு எப்படி இருந்திருக்கும்?,!” என்று அவள் பரிவாகப் பேசவும். அவனுக்கு இருமல் வந்தது,

இருமிச் செறுமித் தொண்டையைச் சீர் செய்துகொண்டு. “சந்தோஷம் தவிர. இன்று வேறு எதையும் பேசக் கூடாது, சொல்லிச் சிரிக்கத்தக்க ஏதாவது இருந்தால். பழைய கதை சொல்லு, மற்றபடி. நம் இனிய எதிர்காலம் பற்றி. மகிழ்ச்சியோடு கனவு காண்போம்,!” என்று அவன் அழுத்தத்தோடு கூறவும். அவளும் சம்மதித்தாள்,

பெறப் போகும் பிள்ளை குட்டி வரை. இருவரும் கணக்குப் போட்டார்கள்,

“நாமிருவர். நமக்கிருவர் என்று அவள் சொல்ல. “ஊகூம், நாமிருவர். நமக்கு ஆளுக்கு இருவர்,!” என்றான் அவன்,

“நம் நாட்டு  மக்கள் தொகை என்ன என்று தெரியுமா என்று அவள் கேட்க. “மக்களா? எங்கே இருக்கிறார்கள்? நாம் இருவர் மட்டும்தான் இந்த ஊரில். உலகத்தில் இருப்பதாக என்கண்ணுக்குத் தெரிகிறது,” என்றான் அவன். கண்ணில் சிரிப்புடன்,

வேடிக்கையும் சிரிப்புமாக இனிமையாகச் சில மணி நேரத்தைக் கழித்துவிட்டு. நித்திலனோடு சென்று அலுவலகத்தில் இறங்கியபோது. அனுபமாவின் உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பி இருந்தது,

அந்த மகிழ்ச்சி. திருமணத்துக்கு முந்திய நாள். மணமகளுக்கு நலங்கு வைக்கும் சடங்குக்காகத் திருமண மண்டபத்துக்குச் செல்லும் வரையும் அப்படியே நிலைத்திருந்தது,!

அனுபமா அளவு கலப்படமற்ற குதூகலத்தில் மனம் பூரித்திரா விட்டாலும். நித்திலனும். மிகவும் சந்தோஷமாகத்தான் இருந்தான்,

இத்தனைக்கும். இரண்டாவது திருமண உறுதி நாளன்று மாலையில். மகேந்திரன் மறுபடியும் அதிகம் குடித்ததோடு. மது மயக்கத்தில். இன்னொரு காரில் ஏறப் போய். அந்தக் காரின் உரிமையாளரோடு கை கலப்பாகி. நித்திலன் போய்த்தான். அந்த மனிதரைச் சமாதானப்படுத்தி. அண்ணனை மீட்டு வர நேர்ந்தது,

அப்போதும் கூட. மூத்தவன் இப்படிப் பணத்தையும் உடம்பையும் பாழடித்துக் கொள்கிறானே என்ற வழக்கமான வருத்தம் தவிர. இதற்கு விடிவே கிடையாதோ என்ற நிராசையில். அவன் சோர்ந்து போய்விடவில்லை,

உள்ளே ஒளிர்ந்து கொண்டிருந்த மகிழ்ச்சி. அவனுள் மந்திர ஜாலம் செய்து. இந்த நிலை எப்படியும் மாறும்,. அண்ணனும் ஒரு நாள் கட்டாயமாகத் திருந்திவிடுவான் என்ற நிச்சயத்தை அவனுக்குத் தந்தது, எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர்நோக்கவும் வைத்தது,!

ஆண்டியப்பனே ஆச்சரியமாக நோக்கி. “என்ன சார். வழக்கமா ரொம்பவும் சோர்ந்து போவீங்க, இன்றைக்கு. ரொம்பத் திடமா.

தென்பா இருக்கிறீங்களே,!” என்று ஆச்சரியப்பட்டான்,

“ஆமாம். ஆண்டியப்பன், அண்ணன் பழைய மாதிரி நன்றாகி விடுவார் என்ற நம்பிக்கை. இன்று எனக்கு ஏற்பட்டுவிட்டது,!” என்று நித்திலன் புன்னகையோடு கூறவே. நம்ப மாட்டாதவன் போலத் திகைத்துப் போய். வாயைப் பிளந்துகொண்டு நின்றான் மற்றவன்,!

முக்கால் கிணறு தாண்டிவிட்ட உணர்வு நித்திலனுக்கு, இன்னும். தாண்டும் செயல் வேகத்தில்தான் அவன் இருந்தான், விழுந்துவிடாமல் தாண்டி விடுவோம் என்ற நம்பிக்கையிலும் இருந்தான்,

திருமணநாள். மிக நெருங்கி வந்துவிட்டது,!

அன்று மாப்பிள்ளை அழைப்பும். அதன் பின்னர். அவர்கள் முறைப்படி மணப் பெண்ணுக்கு. மணமகன் வீட்டார் கொண்டு வரும் பட்டுச் சேலையை உடுத்தி நலுங்கு வைக்கும் சடங்கும் நடக்க இருந்தன,

அழகான அடர் ரோஜா வண்ணச் சேலை, பட்டும் சரிகையுமாக வேய்ந்திருந்தது, கூடவே. திருமணப் பட்டும் அரக்கு வண்ண டிஷ்யூவில் இலை. பூ காய்களோடு. சரிகைக் கொடிகள் பின்னியயதாகப் பார்த்து வாங்கி வந்தனர், முகூர்த்தப்பட்டு. அப்படி சரிகைக் கொடிகளோடு கூடியதாகக் கிடைத்தது வேறு. மகாலட்சுமிக்கு மிகவும் நல்ல சகுனமாகத் தோன்றிற்று,

நித்திலனும் கூடச் சென்று. எல்லோருமாகத்தான் காஞ்சீபுரம் சென்று வாங்குவதாக இருந்தது, ஆனால். தொழில் துறை அமைச்சர் சந்திப்புக்கு அன்று நாள் தந்ததால். நித்திலன் அவர்களோடு கூடப் போகவில்லை,

ஆனால். அதை ஈடு கட்டுவது போல. குடும்பத்தில் எல்லோருக்கும் மகிழ்ச்சியூட்டும் விதமாக. மகேந்திரன். தானே குடும்பத்தோடு காஞ்சீபுரத்துக்குச் செல்வதாகக் கூறவும். எல்லோருக்குமே மட்டில்லாத ஆனந்தம்,!

“பிரச்சினையே இல்லாமல். எல்லாவற்றையும் கடவுளே முன்னின்று நல்லபடியாக நடத்தப் போகிறார், பாரடா,!” என்று. இளைய மகனிடம் சொல்லிச் சொல்லி. மகாலட்சுமி ஆனந்தப் பட்டாள்,

அவள் விரும்பிய விதமாகச் சேலைகள் அமைந்தது. இன்னொரு சந்தோஷம்,!

எந்த விதமான பிரச்சினையும் இல்லாமல். குடும்பத்தினர் எல்லோருக்குமே துணிமணிகள் வாங்கிக்கொண்டு. அனைவரும் சிரித்த முகமாகவே திரும்பி வரவும். நித்திலனுக்குமே தாயின் பேச்சில் முழு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது,

அன்று திருமணத்துக்கு முன்தினம், விளக்கு வைத்து. வெளியே இருள் பரவியதும். பெட்ரோமாக்ஸ் விளக்குகள் சகிதம் மாப்பிள்ளை அழைப்பு தொடங்குவதாகத் திட்டமிட்டிருந்தனர்,

பெண் வீட்டாருக்கு அருகில் இருந்த திருமண மண்டபத்துக்குப் போய்ச் சேரவே வெகு நேரம் பிடிக்கும் என்பதோடு. அவ்வளவு தூரம் ஊர்வலம் போக நித்திலனும் விரும்பவில்லை,

போக்குவரத்துக்கு எவ்வளவு இடைஞ்சலாக இருக்கும் என்பது. அவனது வாதம்,

எனவே. பெரிய திருமண மண்டபத்துக்கு அருகிலேயே. இன்னொரு சிறு ஹாலில் தன் வீட்டார் தங்க நித்திலன் ஏற்பாடு செய்திருந்தான், அடுத்த தெரு அளவுதான் ஊர்வலம்,

ஏழு மணியாகி இருள் கவியவும். மணமகன் வரும்போது நன்கு பார்க்க வசதியாக. ஒரு தனியிடத்தில். அனுபமா வசதியாக நின்றுகொண்டாள்,

ஆனால். பார்லரில் லேசாக “டச்சப்” செய்துகொண்டு ஆறே முக்காலுக்கு வந்துவிடுவதாகச் சொல்லிச் சென்ற நித்திலன்தான். சொன்ன நேரம் தாண்டிப் பலமணி நேரம் ஆன பிறகும். திரும்பி வரவே இல்லை,!

யாதொரு தகவலும் தரவும் இல்லை,!

சுமார் ஒரு மணி நேரம் காத்திருந்து. ஏழு மணி எட்டானதும். “கிளம்பி விட்டீர்களா?” என்று கேட்டுப் பெண் வீட்டில் இருந்து ஆள் வந்தது,

“கிளம்பி விட்டால். அங்கே வந்து நிற்காமல். இடையிலே என்ன. உட்கார்ந்து ஊறுகாயா போட்டுக் கொண்டிருப்பார்கள்?” என்று எரிந்து விழுந்தாள் அருந்ததி,

“அண்ணி. ப்ளீஸ்,! தாமதம் ஆனதால்தானே தேடி வந்திருக்கிறார்கள், கோபமாகப் பேசாதீர்கள், “ என்று மகாலட்சுமி ஓடி வந்தாள்,

அதற்குள். “இதோ இருக்கிற அடுத்த தெருவுக்கு வருவதற்கு ஒரு மணி நேரம் பிடிக்கிறதே,! ஒரு வேளை. ஊறுகாயோடு வத்தலும் சேர்த்துப் போட்டுக்கொண்டு இருக்கிறீர்களோ என்றுதான் பார்க்க வந்தோம்,!” என்றான். பெண் வீட்டில் இருந்து விசாரிக்க வந்தவன்,

“எஎன்னதூ... “ என்று முழங்கத் தொடங்கிய சம்பந்தி அம்மாளை மறைத்தவாறு முன்னே வந்து நின்றாள் மகாலட்சுமி,

“யாமினி. உன் அம்மாவைக் கூட்டிப் போம்மா,” என்று நாத்தனார் சாரதா சொல்ல. மகாலட்சுமி வந்தவர்களுடன் பேசினாள்,

“பாருங்கப்பா. உங்கள் நிலையில்தான். நாங்களும் இருக்கிறோம், ஆறே முக்காலுக்குள். லேசாக “டச்சப்” செய்துகொண்டு வருகிறேன் என்று போன பிள்ளை,! பார்லரில் அதிகக் கூட்டம் போல,! இவ்வளவு நேரமாகிவிட்டது, சீக்கிரம் வந்து விடுவான், அவன் வந்ததும். நாங்களும் கிளம்பி விடுவோம்,” என்றாள். உள்ளே இருந்த பயத்தை மறைத்து. நம்பிக்கையைக் காட்டும் குரலில்,

“சரி சரி, வந்ததுமே எங்களுக்குத் தகவல் கொடுங்கள்,” என்று சிறு எரிச்சலுடனேயே கூறிவிட்டு. பைக்கை உதைத்துக் கிளப்பினான். கண்ணன், அனுபமாவுடைய தம்பி,

தமக்கையிடம் போய். “பார்லருக்குப் போய் மணிக்கணக்கில் அலங்காரம் செய்கிறார். உன் ஆள், சும்மாப் பார்த்தால். சகிக்காதா. அக்கா?” என்று வெடுவெடுத்தான்,

“அதெல்லாம் இல்லையடா...” என்று மறுத்தபோதும். அனுபமாவின் முகம் வாடிவிட்டது,

தாமதமாக வருவதும். வராமலே இருந்து விடுவதும். நித்திலனுக்கு ஒன்றும் புதிதில்லையே,!

ஆனால். இதுவரை நேர்ந்தது வேறு மாதிரி, எல்லாம் அவர்களுக்குள்ளேயே இருந்தன, அவள் வெளியே சொல்லாததால். வேறு யாரும் அறியாலே போய்விட்டது,

ஆனால். இப்போது அப்படி இராதே,! நலுங்குக்காகக் கூடியிருக்கும் உறவினர் கூட்டம். முழுதுக்கும் தெரிந்துவிடுமே,! இப்போதே. நிறையப் பேர். அவள் காது கேட்கும்படியாகவே முணுமுணுக்கிறார்கள், சித்தி வேறு. இந்தத் தாமதத்தை வைத்துத் தனி ஆவர்த்தனமாகவே. வெளுத்து வாங்கிக் கொண்டிருக்கிறாள்,

இன்னும். நித்தி வராமலே இருந்துவிட்டால்?

வழக்கம் போலவே. செல்லையும் எடுக்கக் காணோம்,!

சில்லிட்ட விரல்களால். நெற்றிப் பொட்டுகளை அழுத்தி விட்டுக் கொண்டாள் அனுபமா, ஆனால். வெடிக்கப் போவது போலத் துடித்த இதயத்தை எப்படி சமனப் படுத்துவது?

அருகிலேயே இருந்த தம்பியை நிமிர்ந்து பார்த்தாள்,

“என்னக்கா?”

“கண்ணா. சிசித்தியிடம் போய். அவர்ள் வரத் தாமதம் ஆகுமாம், அதனால். எல்லோரையும் சாப்பிடச் சொன்னார்களாம் என்று சொசொல்கிறாயா?” என்று கேட்குமுன். அவளது உதடுகள் துடித்தன,

கேள்வியாய் நோக்கியவனின் முகம் உடனே மாறியது, “சமைத்த உணவு வீணாகக் கூடாது என்று எண்ணிச் சொல்கிறாய், அதுதானே? கவலைப் படாதே. அப்படியே செய்து விடலாம்,” என்று எழுந்தான் தம்பி,

“அ...அங்கேயும் கொஞ்சம் அனுப்பச் சொல்லு,”

கோபமாக முறைத்தாலும். அதற்கும் “சரி,” என்றான் சின்னவன்,

வெளியே செல்லத் திரும்பியவனின் கையைப் பற்றி. “வேறு யாரும் இங்கே வராமல் பார்த்துக் கொள்கிறாயா. கண்ணா?” என்றாள் அவள் கெஞ்சலாக,

தலையாட்டும்போதே. தம்பி சட்டெனப் பதறிவிட்டான், “அக்கா. நீ ஒன்றும் ” என்று தொடங்கியவன் மேலே வார்த்தைகளைச் சொல்ல மாட்டாமல் திணறினான்,

ஒரு கணம் புரியாது பார்த்துவிட்டு. உடனே மறுப்பாகத்

தலையசைத்தாள் அவள், “இதன் காரணம் தெரிந்தாக வேண்டாமா?” என்றாள் அவள். மெல்லிய குரலில், “ஆனால்... ஆனால் ஏன்? ..... “ என்றபோது. அனுபமாவின் குரல் நடுங்கியது,

நித்திலன் ஏன் இப்படிச் செய்தான்?

சூடும் குளிரும் மாறி மாறித் தாக்குவது போல. ஆசை காட்டுவதும். பேச்சு மாறி உதாசீனம் செய்வதுமாக. அவன் நடந்து கொண்டதன் அர்த்தம். கடைசியில் இப்படி அவளைக் கைவிடுவதுதானா?

ஆனால் ஏன்? அந்தக் கேள்வி அப்படியே நின்றது,

ஒருவேளை...எப்போதேனும். அவனை எதற்காகவேனும் அவள் அவமானப்படுத்தி. அதற்குப் பழி வாங்குவதற்காக இப்படிச் செய்தானோ என்று. அனுபமா ரொம்பவும் யோசித்துப் பார்த்தாள்,

ஆனால். அவளது வீட்டுக்கு மணமகனாக அவன் வந்தபோது தவிர. அதற்கு முன். அவனை அவள் பார்த்ததே இல்லையே,! பார்த்தறியாத ஒருவனை அவமானப்படுத்துவது எப்படி?

அது மட்டுமல்ல, நித்திலன் அவளிடம் காட்டிய அன்பு நடிப்பாக இருக்கலாம் என்று எண்ணுவதே வெகு கடினம், மாறாக. அவள் மீது வெறுப்பே இருப்பதாக அவளால் ஒப்பவே முடியவில்லை, அவனை நேரில் பார்க்க வெட்கிய முதல் நாட்களில். அவன் பாராத சமயங்களில் ஓரக் கண்ணால் பார்த்திருக்கிறாள், கூடவே. கண்ணாடி மற்றும் பளபளப்பான பொருட்களில் தெரியும் அவனது பிம்பங்களையும் ஆவலாகப் பார்ப்பாள்,

பெரும்பாலும். அவனும் அவளையேதான் பார்த்துக் கொண்டிருப்பான், அதுவும் மிகுந்த அன்போடு,!

ஆனால். இப்படிச் சொல்லமல் சொல்லித் திருமணத்தையே நிறுத்தியிருக்கிறானே. அன்பிருந்தால். இது எப்படி முடியும்?

ஒருவேளை. ஏதேனும் விபத்தில் மாட்டியிருப்பானோ என்று யோசிக்கவே தேவையிருக்கவில்லை, அப்படி ஏதேனும் என்றால். நித்திலனின் கார் எண். ஏடிஎம் கார்டு. செல் ஃபோன் என்று பல வகைகளில். யார் வேண்டுமானாலும். அவனை அடையாளம் கண்டிருக்க முடியும், ஆனால். அப்படி எந்தத் தகவலும் அங்கேயும் வரவில்லை என்று கண்ணனுடைய நண்பன் போய் விசாரித்து வந்து

தெரிவித்திருந்தான்,

ஆக எப்படியெப்படி யோசித்தாலும். நித்திலனின் நோக்கம். அவளை நோகடித்துத் திருமணத்தை நிறுத்துவதே,! நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டான்,!

என்னென்ன கனவுகளோடு. அனுபமா அந்த மண்டபத்துக்குள் வந்தாள்,!

இப்போது. அங்கே இருந்த ஒவ்வொரு வினாடியும். அவள் நெருப்பில் நின்றாள்,!

தம்பியைத் தொட்டு. “நம் வீட்டுக்குப் போ விடலாமா? “ என்று தீனமாகக் கேட்டாள்,

“கிளம்பு,” என்ற ஒற்றை வார்த்தையோடு தாயிடம் சொல்லப் போனான் அவவன்,

“நாளைக்குக் கல்யாணம் நடக்குமா என்றே தெரியவில்லை, இல்லை என்றால். சாமானெல்லாம் ..... “ என்று அந்தம்மாள் கத்தத் தொடங்கவும். “அம்மா. போதும், இப்போது. அக்காவிடம் உங்கள் சத்தம் எட்டக் கூடாது, நினைவிருக்கட்டும், வீட்டுக்கு. நானும் அக்காவும்தான் போகிறோம், “ என்று சொல்லி . அவளை வீட்டுக்கு அழைத்துச் சென்றான்,

மனம் உடைந்து. வேரறுந்த மரம் போல. படுக்கையில் விழுந்தாள் அனுபமா,

ஆறுதலாகத் தட்டிக் கொடுத்த தம்பியிடம். அன்று வரை நடந்ததை எல்லாம் குமுறிக் குமுறி அழுதபடியே சொன்னாள் அவள்,

# அத்தியாயம் -10

உள்ளூர இருந்த கவலையும் பயமும் வெகுவாகக் குறைந்து போயிருக்க. தொழிற்சாலையில் இருந்து மிகவும் மகிழ்ச்சியோடுதான். நித்திலன் பார்லரை நோக்கிக காரைச் செலுத்தினான்,

"இன்று கூட வேலையா?" என்று தாயார் கேட்கத்தான் செய்தாள்,

ஆனால். சும்மா இருந்தால். ஏதேதோ கெட்ட கற்பனைகள் தோன்றி. மனதில் இருந்த மகிழ்ச்சியைக் கெடுப்பது போலத் தோன்றவும்தான். அவனே வேலைக்குக் கிளம்பியதே,

அதைச் சொல்லி. அவளையும் கவலைக்குள்ளாக்க மனமின்றி. "இன்றைக்கு இயன்றவரை வேலையைப் பார்த்துவிட்டால். தொடர்ந்து சில சாட்களுக்கு நிர்வாகியிடம் பேசியே வேலையை நடத்திக் கொள்ள முடியும். அம்மா, நான் அங்கிருந்து வரும்போதே பார்லரில் லேசாக "டச்சப்" செய்துவிட்டே. நம் இடத்துக்கு வந்துவிடுவேன், நீங்கள் என் உடைகளை மட்டும் எடுத்துப் போய் விடுங்கள், ஐந்தே நிமிஷங்களில் மாற்றிக்கொண்டு. உடனே கிளம்பி விடலாம்," என்று கூறிக் கிளம்பினான்,

வீட்டை விட்டுக் கிளம்பும்போது. வயிற்றுக்குள் பட்டாம்பூச்சிகள் பறந்துகொண்டுதான் இருந்தன, எந்த வினாடியிலும் ஏதாவது நடந்துவிடுமோ என்கிற அச்சம்,!

தவறாக எதுவும் நடக்காது என்கிற நம்பிக்கையும் இருந்தது, அவனுக்கு அனுபமாதான், அவளைக் கண்ணில் காட்டிய கடவுள். அவர்களைப் பிரிக்க மாட்டார் என்றும் உள்ளூர நிச்சயம்தான், ஆனாலும்

அந்த "ஆனாலும்" அவனை விட்டு அடியோடு போகவும் மறுத்தது, அடி வயிற்றில் இறுக்கத்துடனேயே இருக்கவும் வைத்தது,

ஆண்டியப்பனிடம் பல முறை எச்சரிக்கை செய்தான்,

ஆனால். அண்ணனிடம் மதுவைப் பற்றி எதிர்மறையாகப் பேசக் கூட். அவனுக்குப் பயம், அந்த வார்த்தையே. அவனைக்

கிளப்பி விட்டுவிட்டால்?

ஆண்டியப்பனிடம்தான் அடிக்கடிப் பேசி அண்ணன் பற்றிய விவரம் கேட்டான், ஆனால் "யார் கிட்டே அடிக்கடி பேசுகிறே? என்ன பேசுகிறேன்னு உங்க அண்ணாத்தை கேட்கிறாரு. சார், அத்தோட. சார்ஜ் வேறே ரொம்பக் குறைச்சலாக இருக்குது, போடணும், என்னவுமானாக்க. நானே கூப்பிட்டு. விவரம்; சொல்கிறேன், வச்சிடுங்க," என்று அவன் சொல்லிவிட. அதுவும் நின்றது,

ஆறு...ஆறரை தாண்டிய பிறகும். ஆண்டியப்பன் அழைக்கவில்லை என்றதும். குபீரென்று உள்ளத்தில் பொங்கிய உற்சாகத்துடனேதான். நித்திலன் பார்லரை நோக்கிக் காரை ஓட்டினான்,

இனிப் பயமில்லை, ஏனெனில். இன்னும் சிலபல நிமிஷங்களில். மகேந்திரனும் மணமகன் வீட்டாரோடு கூடச் சேர்ந்து. மண்டபத்துக்கு வர வேண்டியவன், குடும்பத்தோடு இருக்கும்போது. ஆபத்துக் கிடையாது!

சந்தோஷமாகக் காரைத் திருப்பும்போதுதான் செல்ஃபோன் ஒலியெழுப்பியது,!

அப்புறம். அவனுக்கு மூச்சுவிடவும் நேரமில்லை,! ஏனெனில். அவனை அழைத்தது போலீஸ்,! சென்னை மாநகரத்துக் காவல்துறை,!

அலட்சியம் செய்ய முடியாத அழைப்பு,!

அதுவும். "மகேந்திரன் என்பவர். உங்கள் சகோதரன் என்றால். உடனே எங்கள் காவல் நிலையத்துக்கு வாருங்கள், அல்லது. நாங்கள். எங்கள் முறைப்படி அவரை விசாரிக்க வேண்டியிருக்கும்," என்று அதிகாரக் குரலில் கூறவும். நித்திலன் மிகவும் கலங்கிப் போனான்,

அவர்கள் முறைப்படி விசாரிப்பது என்றால்? அடித்தும் உதைத்துமா?

"இதோ வருகிறேன்," என்று சொல்லிவிட்டு. ஒரு கணம் யோசித்தான்,

குடியாகத்தான் இருக்கும் என்பது. அவன் மிகுந்த சலிப்புடன்

உணர்ந்த விஷயம்,

மது தொடர்பான வார்த்தைகளையே கூறாமல். எத்தனை முறை தன் திருமணம் பற்றியும். அன்றைய விழா பற்றியும். நன்றாக உடுத்துக்கொண்டு அண்ணனும் தம்பியுமாக இருவரும் அருகருகே நிற்பது பற்றியும் மகேந்திரனிடம் சொல்லியிருப்பான்,!

காது தாண்டி. ஒன்றுமேயா அவன் மனதில் ஏறவில்லை?

இல்லை என்றுதானே. இப்போது தெரிகிறது?

முன்பெல்லாம். முட்டக் குடித்துவிட்டு. சுற்றுச் சூழல் தெரியாமல் விழுந்து கிடப்பான், கொஞ்ச காலமாக. அக்கம் பக்கம் யாரிடமாவது வம்பு இழுத்துவிட்டு மயங்கி விழுந்து விடுவது வழக்கமாகி இருக்கிறது,

இப்போது. காவல் துறையினரிடமே தகராறு செய்திருப்பான் போலும்,

“என்ன விஷயம்” என்று கேட்லாம் என்று பார்த்தால். ஆண்டியப்பனின் செல்ஃபோன். சுத்தமாக ஒன்றுமில்லாமல் போயிருந்தது,

எப்போதும் போலவே. ஊரைக் கூட்ட மனமின்றி. அவன் தனியாகவே காவல் நிலையத்துக்குச் சென்றான்,

அப்புறம்தான் தெரிந்தது. அண்ணன் மேல் விழுந்திருப்பது கொலைக் குற்றம் என்று,!

முட்டக் குடித்துவிட்டுக் காரை ஓட்டி. தேருவில் ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்த ஆள் மேல் காரை ஏற்றிவிட்டான்,! ஆளுக்குப் பலத்த காயங்கள்,! அடிபட்டவனது சாவுச் செய்திக்காகக் காத்திருக்கிறார்கள், ஏனெனில். அவன் பிழைக்க மாட்டான் எனபது. மருத்துவர்களின் அபிப்பிராயம், செய்தி வந்ததும். கொலைக் குற்றத்துக்காக. எஃப்ஐஆர் போடுவார்கள்,

காவல் அதிகாரி சொன்னது ஒரு பக்கம் கதியைக் கலக்கியது என்றால். ஒன்றும் அறியாத பள்ளிச் சிறுவன் போல. மகேந்திரன் பயந்து நடுங்குவதை. அவனால் கண்டு சகிக்கவும் முடியவில்லை,

மோதிய அதிர்ச்சியில் போதை தெளிந்துவிட்டதோ. என்னவோ. “ஐயையோ,! கொன்றுவிட்டேனா? கொன்றேவிட்டேனா? ஓர்

உயிரை அழித்துவிட்டேனே,! ஐயோ. தம்பீ.  என்னைத் தூக்கில் போடுவார்களா?" என்று அவன் கதறி அழ. நித்திலனுக்கு இதைக் கேட்டுத் தாங்க முடியவில்லை,

"அண்ணா. அந்த ஆள் இன்னும் இறக்கவில்லை, நீ கொலை செய்யவில்லை, இப்படிப் பயப்பட வேண்டாம். அண்ணா," என்று தமையனைத் தேற்ற முயன்றான்,

"ஆனால். செத்துப்போனால்...? நான் கொலைகாரன்தானே? அந்த நினைப்பையே என்னால் தாங்க முடியவில்லையே,! நான்...ஓர் உயிரை எடுத்தேனா?..............காரை ஓட்டின நினைவே இல்லாமல். இடித்ததே தெரியாமல்...இப்படிப் புத்தி அறியாத அளவுக்கா. குடித்திருந்தேன்? ஐயோ. இப்படி ஆகும் என்று தெரியாதே, தெரிந்திருந்தால் மதுவைத் தொட்டிருக்கவே மாட்டேனே,! ஐயோ. நித்திலா. அந்த ஆளை எப்படியாவது பிழைக்க வை, அவர் செத்தால். என்னால் தாங்கவே முடியாது... வாழ்நாள் முழுதும். என்னை... என்னைத் தூக்கிலே போடும் வரையும் கூட. என்னால் உண்ண உறங்க...சரியாக மூச்சு விடக் கூட. முடியாதுடா,! " என்று மீண்டும் கதறி அழுதான் அவன்,

நித்திலன் காவல் அதிகாரியைப் பார்த்தான், "அண்ணன் ரொம்பப் பயப்படுகிறார். சார், குடி தவிர. அவர் மிகவும் நல்லவரும் கூட, ஏதாவது செய்ய முடியுமானால் "

மறுப்பாகத் தலையசைத்தார் அதிகாரி,

"நீங்கள் இன்னும் இங்கேயே இருந்து ஒரு பயனுமில்லை. மிஸ்டர் நித்திலன், எந்த நேரமும் அடி பட்டவன் இறந்துவிடலாம் என்கிற நிலையில். உங்கள் அண்ணனை. நாங்கள் விட  முடியாது, போய்விட்டுக் காலையில். யாராவது வக்கீலோடு வாருங்கள், முடிந்தால். மருத்துவமனைக்குப் போய். அடிபட்டவனுக்கு ஏதாவது செய்ய முடிகிறதா என்று பாருங்கள், ஒருவேளை அந்த ஆள் பிழைத்து விட்டால். உங்கள் அண்ணனுக்கு ஏதாவது பண்ண முடிகிறதா என்று பார்க்கலாம், ஆனால். அவன் பிழைக்க மாட்டான் என்று சரி. போய்த்தான் பாருங்களேன், " என்று சொன்னார். அவர்,

"அண்ணா. தைரியமாக இரு, நான் போய் அந்த ஆளைப் பார்த்துவிட்டு அவரது சிகிச்சைக்கு ஏற்பாடு செய்துவிட்டு

வருகிறேன்,” என்றவன். “கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள் சார்,” என்று அதிகாரியிடம் பணிவாகக் கேட்டுக் கொண்டான்,

அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு. “இவ்வளவு பார்க்கிறீர்கள். இந்த நாசமாய்ப் போகிற பழக்கத்தை. இவ்வளவு முற்ற விட்டுவிட்டீர்களே,! முதலிலேயே. கையைக் காலைக்கட்டித் தூக்கிப் போய். ஏதாவது மறுவாழ்வு மையத்தில் போட்டிருக்கக் கூடாது?” என்று கேட்டார்,

தொடர்ந்து. “போங்கள். சார், நேரத்தை வீணாக்காமல் சீக்கிரமாகப் போய். மருத்துவமனையில் அடிபட்ட அந்த ஆளுக்கு என்னமாவது பண்ண முடிகிறதா என்று பாருங்கள்,” என்றவர். திரும்பி. “மாணிக்கம். இந்த மனிதருக்குச் சாப்பிட ஏதேனும் வாங்கிக் கொடு, தண்ணீர் பாட்டில் ஒன்றும் வாங்கி வா,” என்றார்,

பணம் தேவைப் படுமே என்று. அவன் பர்சை எடுக்க. சைகையினாலேயே மறுத்து. விரைவாகச் செல்லும்படி காட்டி. அவனை அனுப்பி வைத்தார் அதிகாரி,

ஒருவேளை. அடி பட்டவன் பிழைக்கவும் வழி இருக்கிறதோ?

நித்திலன் வேகமாக மருத்துவமனைக்குச் சென்றான்,

உடம்பெல்லாம் கட்டுகளுடன் அசைவற்றுக் கிடந்தவனைப் பார்க்கையில். அவனுக்கு நம்பிக்கை குறைந்து. மிகவும் கவலையாகத்தான் இருந்தது,

ஆனால். மகேந்திரனின் புலம்பலை எண்ணி. எல்லா விதத்திலும் முயற்சித்துப் பார்த்துவிட வேண்டும் என்று தீர்மானித்தான்,

சற்று யோசித்துவிட்டு. நேரே தலைமை மருத்துவரைப் போய்ப் பார்த்தான்,

அவர் மூலமாக. நோயாளிக்கு. விஐபி சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தான்,

ஒரு பெரும் தொகையை. மருத்துவமனைக் கணக்கில் கட்டினான்,

எந்த சிகிச்சைக்காகவும் பணம் கட்டுவதற்காகக் காத்திராமல். தொடர்ந்து சிகிச்சையைச் செய்துகொண்டே இருக்கும்படி கேட்டுக்

கொண்டான்,

“நீங்கள் சொன்ன பணம் கட்டிவிட்டேன் டாக்டர், எந்த ஒரு சிகிச்சைக்காகவும்.  ஒரு கணம் கூடத் தாமதிக்காமல் வேண்டியதெல்லாம் செய்யச் சொல்லுங்கள், ஒரு சிறுநூலிழை அளவு வாய்ப்பு இருந்தாலும். செலவைப் பாராமல் முயற்சி பண்ணச் சொல்லுங்கள், அடிபட்டவர் பிழைப்பதுதான் முக்கியம், இன்னும் பணம் வேண்டுமானாலும் சொல்லுங்கள், கட்டி விடுகிறேன், “ என்று கூறினான்,

இறந்து போகிற நிலையில் உள்ள இந்த நோயாளிக்குச் செலவாகும் பணத்துக்கு யார் பொறுப்பு என்பதிலேயே சில சிகிச்சைகள் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தன போலும்,

அவையெல்லாம் தொடங்க. விரைவிலேயே விபத்துக்கு ஆளானவனிடம் முன்னேற்றம் தென்பட்டது,

அவனிடம் வாக்குமூலம் வாங்குவதற்காகக் காவல் அதிகாரி வந்து சேர்ந்தார்,

அதற்குள் இரண்டு முறை. அண்ணனுக்குத் தைரியம் சொல்வதற்காக. நித்திலன் காவல் நிலையத்துக்குச் சென்று வந்தான்,

“விபத்து எப்படி நடந்தது?” என்ற கேள்விக்கு. “நான் பாட்டுக்குத் தேமேனு. ஓரமாப் போயிட்டிருந்தபோது. வேணும்னே கார் வந்து முட்டிவிட்டது,” என்றான் அவன். தீனக் குரலில். மூச்சு வாங்க,

ஐயோ,! இப்படிச் சொல்கிறானே என்று நித்திலன் தவிக்கும்போதே. “காரிலே வந்த இரண்டு பேரிலே “ என்று தொடங்கியவன். மேலே ஏதோ சொல்லுமுன். மயக்கம் வந்துவிட. மருத்துவரின் சைகையில் காவல் அதிகாரி வெளியே சென்றார்,

காரிலே வந்த இரண்டு போரில்

அதிகாரியின் பின்னோடு மெல்ல வெளியேறிய நித்திலனின் மனதில். இந்த வார்த்தைகளே மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்ணடிருந்தன,

கூட இருந்தவன் ஆண்டியப்பன்,

காரை அண்ணன் ஓட்டும்படி விட்டதும் அல்லாமல். விபத்தும்

நேர்ந்திருக்கிறது,! இந்த நேரத்தில் முதலாளி கூட இராமல் அவன் எங்கே போனான்?

செல்ஃபோனையும் எடுப்பதில்லை,!

ஆள் செத்துவிடுவானோ என்று தோன்றியதும். தன் மீதும் பழி வந்துவிடுமோ என்று பயந்து ஓடினானோ என்று எண்ணும்போதே. மனதில் வேறு தோன்றியது,

ஆள் அப்படியே மறைந்து போனதற்கு. அச்சம் காரணமா? அல்...லது வேறு நோக்கம் எதுவும் இருக்கிறதா?

அவனே. வேண்டும் என்று அண்ணனைக் கிளப்பிவிட்டுக் குடிக்க வைத்து. பிரச்சினைக்கு வழி வகுத்திருப்பானா?

தன் வாழ்வின் முக்கியமான நாட்கள் எல்லாம். தொர்ந்து அண்ணனால் தகராறு நேர்ந்திருக்கிறதே,! இரண்டாம் திருமண உறுதி நாளன்று கூட. மாலையில் பிரச்சினைதானே?

இது. தானாக நடப்பது எப்படி சாத்தியம்?

சரியாகச் சொல்வதானால். அன்றைக்கு நித்திலன் முந்திக் கொண்டதால்தான் தப்பித்தானோ?

ஆனால். என்னத்தைத் தப்பித்தான்? இன்றுதான் ஒரேயடியாக முடிந்து போயிற்றே,! இல்லை, அனு விஷயம் பற்றி யோசிக்க. இப்போது அவனுக்கு நேரமில்லை, அதைப் பிறகுதான் பார்க்க வேண்டும் என்று அந்த நினைவை ஒதுக்கி வைக்க முயன்றான்,

ஆனால். பிறகு பார்ப்பதற்கு என்ன மிச்சம் இருக்கிறது என்று நிராசை நெஞ்சை இறுக்கிப் பிடித்தது,

மிகுந்த பிரயாசைப்பட்டு. முயன்று அதை ஒதுக்கி. கண் முன்னே நின்று மிரட்டும் பிரச்சினை பற்றி யோசித்தான்,

இப்போது. ஆண்டியப்பன் பற்றிக் காவல் அதிகாரியிடம் சொல்லலாமா? கூடாதா? ஒருவேளை. அவன் பிடிபட்டு. அவனும் சேர்ந்து மகேந்திரன் மீது பழி சுமத்தினால். இன்னமும் அதிக ஆபத்தாகிப் போய்விடாதா?

வழக்கம்போல ஆண்டியப்பனே ஓட்டியிருந்தால். நிச்சயமாக

அப்படித்தான் செய்வான், அதிலும். தொடர்ந்து திட்டமிட்டு வேலை செய்திருந்தான் என்றால். இன்னமும் மோசமாகக் கூட. ஜோடனை செய்தே சொல்லக் கூடும்,!

ஆனால். அவன் எதற்காகத் தன் வாழ்வில் பிரச்சினை உண்டு பண்ண முயற்சிக்க வேண்டும் என்று. அந்தப் பிரச்சினைக்கே திரும்ப முயன்ற மனதைக் கட்டுப் படுத்தி. மகேந்திரனிடம் திருப்பினான்,

அங்கே போனால். காவல் அதிகாரியும். அடிபட்டவன் சொன்ன அந்த இரண்டாவது ஆளைப் பற்றித்தான் விசாரித்தார்,

ஒவ்வொரு சிறு இணுக்கையும் விடாமல் ஆராய்ந்து. உண்மையைக் கண்டுபிடிக்கிற வேலையில் இருப்பவர் ஆயிற்றே,!

மறைப்பதும் தவறு என்று தோன்ற. “ஆண்டியப்பனாக இருக்கும். சார், பொதுவாக அண்ணனோடு கூட இருப்பவன், இன்றைக்கு இருந்தானா. இல்லையா என்று தெரியாது,” என்றான் நித்திலன்,

“உங்கள் அண்ணனிடம் கேட்டால். யார் இன்னொருவன் என்று என்னையே கேட்கிறார், விபத்து அதிர்ச்சி. இன்னும் விலகவில்லை என்று தோன்றுகிறது, ஏதோ. அவன் பிழைத்துவிடுவான் என்று தோன்றுவதால். ஜாமீனில் எடுப்பது பிரச்சினை ஆகாது, நீங்கள் வக்கீலுக்கு ஏற்பாடு செய்யுங்கள், “

முதலில் செய்ய வேண்டியது. அவனை வெளிக் கொணர்வது, அதற்கான முதல் வேலையாக. காவல் அதிகாரி சொன்னது போல. வக்கீலுக்கு ஏற்பாடு செய்தான்,

தொழில் விஷயங்களைக் கவனிக்கும் சட்ட ஆலோசகர் மூலமாகத்தான்,

எப்படியும். இனி மகேந்திரனின் குடிப் பழக்கத்தை மறைப்பது இயலாது, அவனை வெளிக் கொணர. ஒரு திறமையான வக்கீல் தேவை, மற்ற யாரையும் விட. அதே தொழிலின் ஒரு பிரிவில் திறமை வாய்ந்த பெரியவருக்கு. மற்ற முக்கியமானவர்கள் பற்றித் தெரிந்திருக்கும் என்று நித்திலன் கருதினான்,

எனவே. நள்ளிரவில் எழுப்பி அவரது தூக்கத்தைக் கெடுத்ததற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு. நிலைமையைச் சுருக்கமாகத்

தெரிவித்து. உதவி கேட்டான்.

ஆனால். அவனே ஆச்சரியப்படும் விதமாக. விஷயத்தை எளிதாகப் புரிந்துகொண்டு. “மூத்தவன் கொஞ்சம் இலகு வழிப் போகிறவன்,. இப்படி உயில் எழுத வேண்டாம் என்று பெரியவரிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன், போகட்டும்,. இந்த அதிர்ச்சியிலாவது. அவன் திருந்தட்டும்,” என்றார் அவர்,

எல்லாம் தெரிந்தும். தெரிந்ததாக. இந்த மனிதர் காட்டிக் கொண்டதே இல்லையே என்று. நித்திலனுக்கு ஆச்சரியமாக இருந்தது,

ஆனால். அண்ணனின் குறைபாடு பற்றி. எடுத்துப் பேச விரும்பாமல் அவன் மௌனமாக இருக்க. அவரே தொடர்ந்தார்,

“இந்த மாதிரி விஷயங்களில். சாய்கிரண் கெட்டிக்காரர்ப்பா, நீ சொல்லுகிற காவல் நிலையத்துக்குக் காலையில். அதிகாலையிலேயே போய்ப் பார்த்து வேண்டியது செய்யும்படி. அவரிடம் நான் ஏற்பாடு செய்கிறேன், நீ முதலில் வீட்டுக்குப் போ, உன்னைக் காணாமல். குடும்பமே திரைந்துகொண்டு இருப்பதாக. மனைவி சொன்னாள், உன் அம்மாவைப் பார்த்தால். பாவமாக இருந்தது என்றாள், கல்யாண மண்டபத்திலும் ஏகப்பட்ட ரகளை என்று கேள்வி, ............... உடனே போய்ப் பார்த்து. ஏதாவது செய்,” என்றார் சட்ட ஆலோசகர்,

உடனேயா? தன்னையறியாமல். கைக்கடிகாரத்தைப் பார்த்தான் நித்திலன், இந்த வினாடியே என்றாலும். ஐந்து மணி நேரம் அதிகத் தாமதம், இனிப் போய்ப் பார்த்து என்ன செய்வது?

சக்தியெல்லாம் வடிந்து விட்டது போல. நித்திலனின் உடம்பில் ஒரு சோர்வு பரவியது, அவனுடைய மஹாசக்தி. அவனை விட்டுப் பிரிந்துவிடப் போகிறாள், அவளை இழந்த பிறகு. வெற்று உடம்புக்கு. சக்தி எங்கிருந்து வரும்?

# அத்தியாயம் - 11

முதலில் தாயார்,! பெற்றதில் ஒன்று சரியில்லாததையே தாங்க முடியாமல் தாங்கிக்கொண்டு இருப்பவள், இப்போது அடுத்தவனும் தலை குனியச் செய்துவிட்டான் என்று தவித்திருப்பாள்,!

அதற்காக என்று இல்லாவிட்டாலும். மகேந்திரனின் நிலை தாயிடம். அண்ணன் மனைவியிடம் சொல்லியாக வேண்டிய விஷயம்,

சும்மாவே. அருந்ததி அம்மாளின் பேச்சுக்குப் பதில் சொல்ல முடியாமல் தவிப்பவள், இப்போது இன்னும் கேவலமாகிப் போகும்,!

இனி இருந்து பயனில்லை என்று புரிந்து. எல்லோரும் வீட்டுக்குத் திரும்பி வந்திருந்தனர், ஆனால். சின்னப் பிள்ளைகள் தவிர. யாரும் படுக்கவில்லை,

குரு போன்ற  பையன்கள். அங்கே இங்கே போய்த் தேடுவதும். இல்லை என்று திரும்புவதுமாக இருந்தனர்,

சோர்ந்து கலங்கி இருந்தவர்கள். காரை நிறுத்திவிட்டு நித்திலன் வீட்டுக்குள்; செல்லவும். ஆத்திரத்துடன் அவன் மீது பாய்ந்தார்கள்,

நலுங்கு. மாப்பிள்ளை அழைப்பு விழாவில் இவனைக் காணாமல். எங்கே எங்கே என்று கேட்ட பெண் வீட்டாருக்கு எந்தப் பதிலும் சொல்ல மாட்டாமல். அவர்களது ஏச்சையும் பேச்சையும் வாய் மூடிக் கேட்டிருந்துவிட்டுக் குமுறலுடன் திரும்பி வந்தவர்கள் ஆயிற்றே,!

அந்த ஆத்திரத்தை எல்லாம் வேறு யாரிடம் காட்டுவார்கள்?

“எங்கேடா. போய்த் தொலைந்தாய்? அவன்தான் குடித்துவிட்டு எங்கோ விழுந்து கிடக்கிறான் என்று பார்த்தால். நீயும் அதே கதைதானா? மகாக் கேவலமாகிப் போய்விட்டது,! சேச்சே,! நல்ல பிள்ளைகளைப் பெற்று வைத்திருக்கிறாள்,! “ என்று. என்னவோ. தனக்கும் மகன்களுக்கும் சம்பந்தமே இல்லாதது போல. மனைவியைத் திட்டினார் ஈசுவரன்,

அம்மாவைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது என்றது இதைத்தான் போலும்,!

அப்பா விட்ட இடத்திலிருந்து. அத்தை தொடங்கினாள், ஆனால். நல்லவேளை. பெரிய அத்தை,! “அவர்கள் நீ எங்கே. எங்கே என்கிறார்கள், யாராலும் பதில் சொல்ல முடியவில்லை, மாப்பிள்ளை அழைப்பை அப்புறம் வைத்துக் கொள்வோம், என்று நலங்கு வைப்போம் என்று மகா சென்னாள் என்று அதையும் செய்யப் போனால். பெண் முடியாது என்றுவிட்டாள், வந்தவர்கள் சாப்பிட்டுவிட்டுப் போகட்டும், நீ வந்த பிறகுதான் எல்லாம் என்று காத்திருந்தால்… அவள் சித்தி நாக்குதான் உனக்குத் தெரியுமே

பதிலே சொல்ல முடியவில்லை… தலைக் குனிவாகிவிட்டது. நித்திலா,!” என்றாள் வருத்தமும் கோபமுமாக,

இன்னும் பேசத் துடித்த மற்ற உறவுகளைக் கை உயர்த்தித் தேக்கி நிறுத்தினான். நித்திலன், “அப்பா. அத்தை. ப்ளீஸ் நான் சொல்வதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்கள், கேட்டுவிட்டு. மேலே என்ன வேண்டுமோ சொல்லுங்கள்,!” என்று தொடங்கி. நடந்ததை முடிந்த அளவு சுருக்கமாக விவரம் சொன்னான் அவன்

ஐயோ. ஆ. ஓ என்ற ஒலிகளுக்கிடையே அவன் சொல்லி முடிக்கவும். எல்லோருக்கும் விழா மறந்து போயிற்று,

“ஐயோ. என் பிள்ளை போலீஸ் நிலையத்திலா?,!” என்று மகாலட்சுமி கலங்க. “மகேன் குடித்த தினுசுக்கு இப்படித்தான் ஆகும் என்று எனக்குத் தெரியும், என்ன சொன்னாலும் கேளாமல். இப்போது ஊரார். உறவினர்கள் முன்னிலையில் கேவலப்பட்டு நிற்க வைத்துவிட்டானே,” என்று ஆத்திரப்பட்டாள் சுந்தரி அத்தை,

“நித்தி. இப்போது என்னடா செய்வது?” என்று மகாலட்சுமி கவலையும் பயமுமாகச் சின்ன மகனிடம் கேட்டாள்,

“ஆமாம். நித்தி, மாமாவுக்கு யாரோ போலீஸ் அதிகாரியைத் தெரியும் என்பாரே. அவரைப் போய்ப் பார்த்து. ஏதாவது செய்ய முடியுமா என்று கேட்போமா?” என்று. பெரிய அத்தை யொசனை சொன்னாள்,

“அதெல்லாம் பயனில்லை. அத்தை, அந்த ஆள் பிழைத்து. மகேன் மேல் தப்பில்லை என்று சொன்னால் மட்டும்தான். இப்போதைக்கு எதுவும் நடக்கும், ஆனால். அதற்கு வழியில்லை, அண்ணனானால். ஆளை அடித்துவிட்டேனே,. கொன்றுவிட்டேனே

என்று சொல்லியே அழுகிறான், அந்தக் காவல் நிலையத்து அதிகாரியும். நல்ல விதமாகத் தெரிகிறார், சட்டப்படிதான் போக வேண்டும், காலையில் வக்கீல் போக ஏற்பாடு செய்திருக்கிறேன்,'' என்று நித்திலன் தெரிவித்தான்,

யாமினியின் விம்மல் பலத்து ஒலித்தது, "ஐயோ தம்பி. எனக்குப் பயமாக இருக்கிறதே,!'' என்று விசும்பி அழுதாள்,

"ஆமாம். இப்போது அழு,! மனைவி என்றால். புருஷனைப் பார்க்க வேண்டும்,. அவனுக்கு இதமாக நடக்க வேண்டும்,! சும்மாச் சும்மா அம்மா வீட்டிலேயே உட்கார்ந்திருந்தால். இப்படித்தான் ஆகும்,! " என்றார் ஈசுவரன் ஆத்திரத்தோடு,! "அண்ணா. எந்த நேரத்தில் என்ன பேசுகிறீர்கள்? சும்மாவே யாமினி கலங்கிப் போயிருக்கிறாள், " என்று. அவளுக்காகப் பரிந்தாள் சாரதா,

"ஏன்? என் பிள்ளை சொன்னதிலே என்ன தப்பு?'' என்று பாட்டி முழங்க. இன்னொரு முழக்கத்தை நித்திலன் எதிர்பார்த்தால். அது கேட்கவே இல்லை,!

யோசனையோடு அந்த ஹால் முழுவதும் பார்வையால் தேடிப் பார்த்தால். அருந்தது அம்மாளை. அங்கே காணவே இல்லை,

அவசரமாக யோசித்தான் அவன், ஆண்டியப்பனைப் பின்னின்று இயக்கியது. யாமினியுடைய தாயாராக இருக்குமோ? அவனது திருமணத்தை விரும்பாதவர்கள். வேறு யாருமே இல்லையே,! சின்ன அத்தை கூட. சந்தோஷமாகச் சேலையை வாங்கிக் கொண்டார்களே,!

உள்ளம் பரபரக்க. "அண்ணி. உங்கள் அம்மா பூபாலைத் தூங்க வைத்துக் கொண்டிருக்கிறார்களா? இங்கே காணவில்லையே?'' என்று விசாரித்தான்,

"இல்லை. தம்பி, அவனை. நானே தூங்க வைத்துவிட்டேன்,... ஏதோ ஃபோன் வந்தது, இங்கே இருந்து என்ன பண்ணப் போகிறேன் உன் வீட்டு ஆட்களுக்கும் என்னைப் பார்க்கக் கூச்சமாக இருக்கும், கிளம்புகிறேன், கேட்டால் சொல்லிவிடு என்று என்னிடம் சொல்லிவிட்டு. வீட்டுக்குப் போய்விட்டார்கள்,'' என்று விம்மல். விக்கல்களுக்கு இடையே. யாமினி ஒருவாறு கூறி முடித்தாள்,

நித்திலனின் மனம் மறுபடியும் பரபரப்புற்றது,

அருந்ததி அம்மாளுக்கு வந்த “கால்” ஆண்டியப்பனதாகவே இருக்கலாம், அவன். அந்த அம்மாளைக் கூப்பிட்டு கூப்பிட்டு திட்டத்தைச் செயல்படுத்திவிட்டதாகச் சொல்லியிருக்கலாமே,!...

ஊகூம், இந்த நேரத்தில் அவர்கள் இருவரும் கண்ணெதிரில் இல்லை என்பதற்காகவே. அவர்களைத் தப்பானவர்களாக நினைத்துவிட முடியாது,

விபத்தைப் பார்த்த ஆண்டியப்பன்.தானே பயந்தே ஓடியிருக்கலாம், அருந்ததி அம்மாளுக்கு வந்த “கால்” வேறு யாருடையதாகவும் இருக்கலாம்,

அப்படியில்லை என்று நிரூபிப்பதும் கடினம்,!

தன்னில் உழல முடியாமல். யாமினி அவனைக் கூப்பிட்டாள்,

“இனி என்ன செய்யப் போகிறீர்கள். தம்பி? அவர் போலீஸ் ஸ்டேஷனில் எப்படி இருப்பார்?” என்று; கண்ணீருகுத்தாள்,

“தேவையான ஏற்பாடு செய்திருக்கிறேன் அண்ணி, காலையில் வக்கீல் போய் அண்ணனை மீட்டு வர ஏற்பாடாகி இருக்கிறது... கட்டாயம் மீட்டு வருவார், ஆனால்...”

“ஆனால் என்ன. தம்பி?”

“ஒஒன்றுமில்லை, இரவு அங்கேதான் இருக்க நேரும், மற்றபடி கவலை வேண்டாம், அ...தைத்தான் சொன்னேன்,” என்று. தன் தவிப்பை மறைத்து. நித்திலன் தாயைப் பார்த்தான்,

ஆனால். தாய் அறியாத சூலா?

“ஆனால். உன் திருமணம் நின்றுவிட்டதே. கண்ணா,!” என்றாள் மகாலட்சுமி கண்ணீருடன், “அனுவுடைய தம்பி. மண்டபத்தில் இருந்தே. அக்காவைக் கூட்டிக்கொண்டு போய்விட்டான், சாமான்கள் மற்றதை எடுத்துக்கொண்டு. மற்றவர்கள் காலையில் போவார்களாம், ஐயோ. நான் சும்மா இருந்திருக்கக் கூடாதா? உன் வாழ்வில் விளக்கேற்றுவதாக நினைத்து. உள்ளதையும் கெடுத்துவிட்டேனே,!” என்று. மேலும் அழுதாள்,

“சரிதான், பிள்ளை நன்றாக இருக்க வேண்டும் என்று

நினைக்காத தாய் உண்டா? உன் மேல் தப்பு என்ன? தலைவிதி. வேறு மாதிரி இருந்திருக்கிறது, அதற்கு. நீ என்ன செய்வாய்? வீணாகக் கண்ணீர் விடாதே,” என்று மருமகளுக்கு ஆறுதலாக நாகவல்லி; கூறவும். எல்லோரும் வியப்புடன் பாட்டியைப் பார்த்தார்கள்,

முதல் முதலாக மருமகளுக்கு ஆதரவாக ஒரு பேச்சு,! இப்போதுதான் மருமகளும். தன்னைப் போல ஒரு தாயே என்று. அந்த மாமியார் உணர்ந்தாள் போலும்,!

“அம்மா. நம் கையை மீறிப் போனதைப் பற்றி வருத்தப்படுவது வீண், நடப்பது எதுவானாலும் நடக்கட்டும், தூக்கம் இல்லாமல் தவிப்பதால் மட்டுமாய். எதுவும் சரியாகி விடாது, சொல்லப்போனால். உள்ள தைரியமும் கெட்டுப் போகும், அத்தை. சித்தி. பாட்டி. நீங்கள் எல்லோரும் போய்ப் படுங்கள், அம்மா. உங்களுக்குத் தனியாகச் சொல்ல வேண்டாம்தானே? கொஞ்சமேனும் தூங்க முயற்சி செய்யுங்கள், உங்கள் எல்லோருக்குமே ஓய்வு தேவை,” என்றுவிட்டு மாடிக்குப் போனான் நித்திலன்,

அவனுக்குத்தான் ஓய்வு மிகவும் தேவை, மிக முக்கியமாக ஆறுதலும்,! ஆனால். அவனிடம். யார். என்ன சொல்லித் தேற்றுவது?

அவன் கண்ணுக்கு மறையும்வரை பார்த்திருந்துவிட்டு. “பேரன்தான் சொன்னானில்லையா? போங்கள் எல்லோரும் போய்ப் படுங்கள், பொழுது விடிந்தால். சம்பந்தி வீட்டாருக்கு. வேறு மாதிரி நல்ல எண்ணம் வந்தாலும் வரலாம், அந்தப் பொடியனுக்குப் புத்தி சொல்லி எதுவானாலும். காலையில். பேசிப் பார்ப்போம், பதினோரு மணி முகூர்த்தம்தானே? நல்லதே நினைப்போம், போங்கள்,. போய்ப் படுங்கள், “ என்று நாகவல்லி கூறவே. எல்லோரும் எழுந்து சென்று. ஹாலிலும். அடுத்திருந்த அறைகளிலும் முடங்கினர்,

அவளது அறையில் சற்று நேரம் குறுக்கும் நெடுக்கும் நடந்த யாமினி. மெல்ல நடந்து வந்து. மாமியாரைத் தொட்டுக் கூப்பிட்டாள், தூங்குவது போன்ற பாவனையில். ஓசையற்றுக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த மகாலட்சுமி அவசரமாக எழவும். உதட்டின் மேல் கைவைத்துக் காட்டிவிட்டு. அவளைத் தன் அறைக்கு யாமினி

அழைத்துச் சென்றாள்,

“அத்தை. என் சித்தப்பாவுக்குப் போலீசில் யாரோ பெரிய ஆளைத் தெரியும் என்று அம்மா சொல்வார்கள், அப்பா இல்லாததால். நம்மை யாரும் அலட்சியமாக நடத்த முடியாது என்று. அது போல. அவ்வப்போது பேசுவார்கள், அம்மாவைக் கூட்டிக்கொண்டு போய். அந்தச் சித்தப்பாவைப் பார்த்து ஏதேனும் செய்ய முடியுமா என்று கேட்டுப் பார்க்கிறேனே,! அவர். காவல் நிலையத்தில் இருப்பது. என்னால் தாங்க முடியவில்லையே,! “ என்று கெஞ்சலாகக் கண்ணீர்க் குரலில் கேட்டாள்,

“எப்படிம்மா போவாய்? வேண்டுமானால். நித்தியைக் கூட்டிப் போகச் சொல்லட்டுமா? “

“ அவரைக் காணவில்லை. அத்தை, தம்பி. இன்னொரு வழியில் ஏதாவது முயற்சி செய்யப் போயிருப்பாரோ. என்னவோ? அதைக் கெடுக்க வேண்டாம், ஏதோ ஒன்று பலித்து. மகி விடுதலை ஆனால் போதுமே, ... மேலும்... அவர் ஏதாவது சாப்பிட்டாரோ என்னவோ... “ என்றாள் குரல் தழதழக்க,

அடுத்த பிள்ளையும் உண்டிருக்க மாட்டானே என்று தவித்தது. தாய் மனம்,

அவள் பேசாது நிற்க. “எனக்குத்தான் கார் ஓட்டத் தெரியுமே. அத்தை, நானே போய்க் கொள்ளுகிறேன், நீங்கள் பூபாலை மட்டும் பார்த்துக் கொள்ளுங்கள்,” என்று மாமியாரிடம் பொறுப்பைக் கொடுத்துவிட்டு. மருமகள் கிளம்பினாள்,

இவளது முயற்சி பலிக்கட்டும் கடவுளே என்று மனதுக்குள் வேண்டிக் கொண்டாள் மகாலட்சுமி, ஆனால் அது. எந்த அளவுக்குப் பலிக்கப் போகிறது என்று. அப்போது அவளுக்குத் தெரியாது,!

வீட்டினரை ஓரளவு சமாதானம் செய்து. ஓய்வெடுக்குமாறு கூறிவிட்டு. தன் அறைக்குள் சென்ற நித்திலனால். உடல் தளர உட்காரக் கூட முடியவில்லை,

“அனுவுடைய தம்பி. மண்டபத்தில் இருந்தே. அக்காவைக் கூட்டிக்கொண்டு. போய்விட்டான்”,!

இதற்கு அர்த்தம் தேட. அகராதியைத் தேட வேண்டியது

இல்லை,!

ஆனால். இன்னொரு முயற்சி செய்யாமல். எப்படி விடுவது?

கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருப்பது. அவனுக்கு மட்டுமல்ல,. அவளுக்குமே அநியாயம் செய்வதாகும்,

அனுபமாவின் செல் எண். தொடர்புக்கு வழியே இல்லாமல். ஸ்விட்ச் ஆஃப் செய்யப் பட்டிருந்தது,!

நித்திலனுக்கு. அறைக்குள் மூச்சு முட்டுவது போலத் தோன்றியது,

படியிறங்கிச் சென்று. ஹாலில் படுத்துக் கிடந்தவர்களின் ஓய்வைக் கலைக்க அவனுக்கு விருப்பமில்லை, அத்தோடு. இந்த முயற்சியில். வெற்றியும் நிச்சயம் இல்லை,

அனாவசியமாக. அவர்களுக்கு. முக்கியமாக அன்னைக்கு ஏன் வீணாக ஆசை காட்டுவது?

சுற்றிலும் அடைத்த கிரில் வழியே வேலையாட்கள் மாடிக்கு வந்து செல்லப் பின்புறமாக ஒரு வழி உண்டு, அதன் வழியே இறங்கி. நித்திலன் வெளியே சென்றான்,

அனுபமாவின் வீடு. உட்புறமாகப் பூட்டியிருந்தது, அவளும் தம்பியும் வீட்டில்தான் இருக்கிறார்கள்,

இரவு இரண்டு மணிக்கு. "காலிங் பெல்"லை அழுத்திக்கொண்டு வெளியே நிற்பது சரியில்லை, எனவே. செல்லில். மைத்துனன் எண்ணை அழுத்திவிட்டுக் காத்திருந்தான்,

அவனுமே வந்து கதவைத் திறப்பானா. என்று நித்திலனுக்கு சந்தேகம்தான், தமக்கைக்கு இப்படிப்பட்ட துன்பத்தைக் கொடுத்தவனோடு பேச. யாருக்கு மனமிருக்கும்? கண்ட துண்டமாக வெட்டிப் போடத்தான் தோன்றும்

எந்தக் கேவலத்தையும் அனுபவிக்க. அவன் தயாராகவே இருந்தான்,

அழுதழுது ஓய்ந்து கிடந்த தமக்கையின் கையை மெல்ல வருடிக் கொடுத்தவண்ணம். அவள் அருகிலேயே இருந்த கண்ணனும். செல்லை "சைலன்ட் மோடி"ல்தான் வைத்திருந்தான்,

செல்லின் அதிர்வை உணர்ந்து எடுத்துப் பார்த்தவனுக்கு. அதில் தெரிந்த  எண்ணைக் கண்டதும். மனம் கொதித்தது,

தமக்கையின் மூடிய கண்களின் வழியே. அப்போதும் வடிந்த கண்ணீரைக் கண்டதும் கொலை வெறியோடு எழுந்து வந்து கதவைத் திறந்தான்,

“என்ன? செருப்படி தேவைப் படுகிறதா?” என்று சீறினான்,

அவனது கை நீட்டலைக் கூட எதிர்பார்த்தே வந்திருந்த நித்திலன் அவசரமாகப் பேசினான், “கண்ணன். உன் மேல் அவளுக்கு உயிர்,. நீயும் அவளிடம் அப்படித்தான்  என்று தெரியும்,அதனால்தான். இதுவரை சொல்ல முடியாமல் இருந்த சில உண்மைகளை. உன்னிடமேனும் சொல்லிவிடுவது என்று இந்த நேரத்திலும். இங்கே வந்தேன், தயவு பண்ணி. ஒரு தரம். நான் கூறுவதைக் காது கொடுத்துக் கேள், கேட்டுவிட்டு. என்னை நீ என்ன செய்தாலும் நான் மறுப்பதற்கு இல்லை,” என்றான் களைப்புடன்,

நித்திலனன் சோர்வு. கண்ணனின் கண்களில் மனதில் படத்தான் செய்தது, ஆனால். அவனுடைய தமக்கைக்கு மரண காயம் அல்லவா பட்டிருக்கிறது,! இவன் என்ன. கண்ணைக் கசக்கிவிட்டு. தலையைக் கலைத்துக்கொண்டு கூட வந்திருக்கலாம்,

எனவே இளக்கமின்றி. “சொல்வது எதுவானாலும். அப்போதே செல்லில் கூப்பிட்டுச் சொல்லியிருக்கலாமே,! “ என்றான் விறைப்பாக,

“அப்படிச் சொல்ல. இது இன்றைய ஒருநாள்க் கதை அல்ல. கண்ணா, அத்தோடு. இன்றைய தினத்தைப் பொறுத்தவரையில். என்னால் வேறு எதையும் நினைத்துப் பார்க்கக் கூட முடியாத நிலை,!” என்று. கதவு நிலையில் சாய்ந்தபடியே. அன்று நிகழ்ந்த அனைத்தையும். அவனிடம் சொல்லலானான்,

குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருந்தவன். மருத்துவமனைக்கும் காவல் நிலையத்துக்குமாகப் பல முறை அலைந்ததைக் கேட்கையில். ஒரு நாற்காலியை எடுத்துப் போட்டு. உட்கார்ந்து பேசுமாறு சைகை செய்தான்,

கேட்டு முடித்ததும். “இன்னும் சில விஷயங்கள் எனக்குத் தெளிவாகவில்லைதான், ஆனால். என்னோடு வாருங்கள்,” என்று.

அனுபமாவிடம். அவனை அழைத்துப் போனான்,

பிடுங்கி வெய்யிலில் எறிந்த தாமரைக் கொடி போல வாடிக் கிடந்தவளைப் பார்த்ததும். நித்திலன் தன்னை மறந்து. "அனும்மா,!" என்று அவள் அருகில் சென்றான்,

அவனது குரல் கேட்டுத் திடுக்கிட்டுக் கண்ணைத் திறந்து பார்த்தவள். எழுந்து அமர்ந்துகொண்டு. குற்றம் சாட்டும் பார்வையால் தம்பியை நோக்கினாளே தவிர. நித்திலனிடம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை,

சற்று முன். அவன் காலி செய்த நாற்காலியிலேயே நித்திலனை உட்காரச் சொல்லிவிட்டு. தமக்கையின் அருகிலேயே அமர்ந்து. அவளது கையை. அழுந்தப் பற்றிக்கொண்டு தம்பி சொன்னான், "அக்கா. இவர் ஒரு விளக்கம் சொன்னார், எல்லாமே. இந்த வினாடியே நாம் சரி பார்த்துக் கொள்ளக் கூடிய விவரங்கள், அவரது நிலையில் நான் இருந்தாலும். இப்படித்தான் நடந்திருப்பேன் என்று தோன்றியது, அதனால்தான். உன்னிடம் கூட்டி வந்தேன், இன்னும்... நீயும் கேட்டு விடு, " என்றான்,

மூன்றாவது தடவையாக. அன்று நடந்ததை நித்திலன் ஒப்பித்தான்,

குறுக்கீடுகள் இல்லாததோடு. கண்ணனின் இடைச் செறுகல்கள். விளக்க நேரத்தை இன்னமும் குறைத்தது,

அன்றையக் கதையை முடித்துவிட்டு. "இன்று ஆறரை மணியில் இருந்து நடந்தது இது, மருத்துவமனையில் வைத்து யோசித்தபோது. இன்று நடந்தது. இதற்கு முன் நமக்கு நேர்ந்த பிரச்சினைகள் குறித்து. எனக்குள் ஓர் ஊகம் உண்டாகி இருக்கிறது, ஆனால். வெறும் ஊகத்தைக் காரணமாகச் சொல்லி சமாளிப்பதற்கு. எனக்கு விருப்பம் இல்லை, ஆனாலும். இன்றைய களேபரத்துக்கான அடிப்படையாக ஓர் உண்மை இருக்கிறது, அதை உன்னிடம் சொல்ல அவமானப்பட்டு. தெரிந்தால் நீ கிட்டமாட்டாயோ என்று பயந்து. உன்னிடம் மறைத்தது,. மறைப்பதற்காகப் பல பொய்களைச் சொல்லி சமாளித்தது எல்லவற்றுக்கும் காரணம். இதுவே,! அதையும். இப்போதே கேட்டுவிடு," என்று ஒரு பெரிய மூச்சை எடுத்துக்கொண்டு. அவன் தெரிவித்தான்,

“என் அண்ணன் மகேந்திரன் மிதமிஞ்சிக் குடிப்பான், தன்னை மறந்த மயக்கம் வரும் வரை,! அதாவது. ஒரு பக்காக் குடிகாரனுடைய தம்பி. நான், அவனை. நான் பாதுகாத்துதான் ஆக வேண்டும், அவனுடைய குடும்பத்தையும் சேர்த்துப் பாரரமரித்துதான் ஆக வேண்டும், எங்கள் குடும்பமும் என் பொறுப்பே, இத்தனையையும். உன் துணை இருந்தால். தூசாகச் செய்துவிடுவேன், ஆனால். துணை வருவது. உன் விருப்பம், அதில் நான் தலையிட முடியாது ஒரு வேளை. வேறு முடிவெடுத்தாயானால். இனி உன் வாழ்வில் தலையிட மாட்டேன் என்று உறுதி தருகிறேன்,” என்று இறுகிய குரலில் கூறி முடித்தான்,

தம்பியை ஒரு தரம் பார்த்துவிட்டு. கை நீட்டி. நித்திலனின் கரத்தைப் பற்றினாள் அனுபமா, “தலையிட வேண்டும், எப்போதும் தலையிட வேண்டும், அந்த உரிமை உங்களுக்கே. உங்களுக்கு மட்டுமே உரியது, ஏனெனில் வேறு முடிவு எடுக்க என்னால் முடியாது,” என்றாள் உறுதியான குரலில்,

அதற்குமேல். அவளைத் தவிர உலகமே மறந்துவிட. “என் கண்மணி,!” என்று அவளை இழுத்து அணைத்துக் கொண்டான். நித்திலன்,

ஒரு சிறு இடைவெளியின் பின். “ஹோ. நான் இன்னும் இங்கேயேதான் இருக்கிறேன். தெரியுமா?” என்ற கண்ணனின் குரல். சிறு திகைப்பும் வெட்கமுமாக. அவர்களைப் பிரித்தது,

ஆனால். பெரும் பாரம் இறங்கிவிட்ட மகிழ்ச்சியில். “ஏன்ப்பா?” என்று நித்திலன் சன்னக் குரலில் கேட்க. மற்ற இருவருக்கும்சிரிப்பு வந்தது,

சிரித்தபடியே. “ஏன் கேட்க மாட்டீர்கள்? எங்கள் இருவருக்குமே பிகு பண்ணத் தெரியாதது. தப்பாகிப் போயிற்று, கூடக் கொஞ்சம் அலையவிட்டு. மண்டபம் வரை போய் எல்லோரையும் ஒத்துக்கொள்ளச் செய்விட்டு வாருங்கள் என்று விரட்டி இருக்க வேண்டும்,” என்றான் கண்ணன்,

சுற்றுப்புறம் நினைவு வர. “கண்ணா. அப்பா,! அப்பா? சித்தி? “ என்றாள் அனுபமா மிரட்சியுடன்,

“அப்பா. அம்மா எல்லோரும் என் பொறுப்பு, நீ கிளம்பு,

மண்டபத்துக்குப் போகலாம், ஏற்பாடு செய்தபடி திருமணம் நடக்கும்,! ஆனால். முகத்தை நன்றாகக் கழுவி. ஏதாவது பண்ணு, அழுது வீங்கின கண்களுக்கும் மணப்பெண் அலங்காரத்துக்கும் பொருத்தமாக இராது,!" என்றான் கண்ணன் இலகுக் குரலில்,

வெகு நேரத்துக்குப் பிறகு. மனதாரப் புன்னகை புரிந்து. "பரவாயில்லைப்பா, நல்ல மச்சினன்தான், பெயரும் கண்ணன் அல்லவா? தங்கை காதலுக்கு அந்தக் கண்ணன் இங்கே அக்காவுக்காகத் தம்பி," என்றான் நித்திலன்,

"என்ன செய்வது? இவள் அழுதழுது கரைந்தே போய்விடுவாள் என்ற பயம்தான்,!" என்றான் அவன் பதிலுக்கு,

பெருமையும் பிரியமுமாக நித்திலன் சிரிக்கும்போதே. அவனது செல் கூப்பிட்டது, எண்ணைப் பார்த்துவிட்டு. அவசரமாக "ஆன்" செய்து பேசினான், "சொல்லுங்கள். சார், ஏதேனும் புபுதுப் பிரச்சினையா?" என்று கவலைக் குரலில் கேட்டான்,

மற்ற இருவரும் கூடக் கவலையோடு நோக்க. எதிர்ப்புறப் பேச்சைத் தீவிரக் கவனத்துடன் கேட்ட நித்திலனின் முகம் மலர்ந்தது,

"சரி.சார், கூப்பிட்டுச் சொன்னதற்கு ரொம்ப நன்றி. சார், அது... இங்கேயும் எல்லாம் சரியாகிவிடும் என்று நம்புகிறோம். சார், ..... நன்றி சார்," என்று பேச்சை முடித்தபோது. அவன் முகம் மலர்ந்து விகசித்தது,

மற்ற இருவரும் ஆவலோடு நோக்க. அடக்க மாட்டாத புன்னகையில் பற்கள் பளீரிட. அவன் சொன்னான், "காவல் அதிகாரி, அடிபட்ட ஆள் பிழைத்து. சாலையில் ஓரமாக நடந்து சென்ற தன்னை நன்றாகப் பார்த்துவிட்டு. வேண்டும் என்றே வந்து மோதியவன். மீசைக்காரன்தான் என்று தெளிவாகச் சொல்லிவிட்டானாம், அண்ணனும். இனிக் குடிப்பதே இல்லை என்று. அவரிடமே சத்தியம் செய்தானாம், இன்னும் கொஞ்ச நேரம் இது போலவே பேசிக் கொண்டிருந்துவிட்டுக் காலையில் "ஃபார்மாலிட்டீஸ்" முடித்து. அவரே. அண்ணனை வீட்டுக்கு அனுப்பி வைக்கிறாராம், ரைட்ப்பா, இப்போது. நானும் கிளம்புகிறேன், அங்கே வீட்டுக்குப் போய். எல்லோரையும் கிளப்பிக்கொண்டு மண்டபத்துக்கு வர வேண்டும், அண்ணியிடம்

எடுத்துச் சொல்வதுதான் சற்று சிரமமாக இருக்கும், நம்ப வைப்பது கடினம், “ என்று நித்திலன் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே. கண்ணனின் செல் ஒலியெழுப்பியது,

எண்ணைப் பார்த்தவன் சி;று திகைப்புடன். “உங்கள் அண்ணி, “ என்று மற்ற இருவருக்கும் தெரிவித்தான்,

ஸ்பீக்கரில் போட்டுப் பேசுமாறு. நித்திலன் கூறவும். அதன்படி செய்துவிட்டு “ஹலோ?” என்றான் கேள்வியாக,

“தம்பி. வைத்துவிடாதேப்பா, நான் அனுபமாவிடம் உடனே பேச வேண்டும் விவிஷயம் மிகவும் முக்கியமானது, கட்டாயம் பேச வேண்டும். தம்பி,! ப்ளீஸ். அவளிடம் கொடுப்பா,” என்றாள் யாமினி கவலை மிகுந்த குரலில்,

# அத்தியாயம் - 12

கணவனை மீட்பதற்காகத் தாயார் மூலமாக ஏதேனும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றுதான். அந்த நள்ளிரவிலும். யாமினி தாய் வீட்டை நாடிச் சென்றதே,

அங்கே சென்றால். அந்த நேரத்திலும் அருந்ததியின் ஃப்ளாட்டில் விளக்கு எரிந்துகொண்டு இருந்தது,

தூங்கும்போது வெளிச்சமே கூடாது. அருந்ததிக்கு, "இந்த ஃப்ளாட்டிலே. இது ஒரு கஷ்டம், மாப்பிள்ளை பங்கு பிரித்துக் கொண்டு வந்ததும். தனி வீடு வாங்கிக்கொண்டு போய்விடணும், நீ தனியாக இருந்தால்தானே. நானும் கூட வந்து இருந்து. உன் பிள்ளைகளைப் பார்த்துக்கொள்ள முடியும்?" என்பாள்,

தாயைக் கூட வைத்துக் கொள்வதில். யாமினிக்கு ஒரு தடையும் இருந்ததில்லை, ஆனால். அதற்காகப் பங்கு பிரிக்கச் சொன்னதாலேயே. என்னவெல்லாம் நேர்ந்துவிட்டது,!

யோசித்தபடியே கதவை நெருங்கினால். "...அதெல்லாம் பத்து லட்சத்துக்கு ஒரு பைசாக் குறைந்தாலும் நான் ஒத்துக்கிட மாட்டேன்,!" என்று அழுத்தம் திருத்தமாக ஆண்டியப்பன் சொல்லிக் கொண்டிருந்தான்,!

ஆண்டியப்பன்,! அவன் எப்படி. இங்கே? அதுவும். என்னமோ கொடுத்து வைத்த மாதிரிப் பத்து லட்ச ரூபாய் கேட்டுக்கொண்டு,! அம்மா எதற்காக. இவனுக்குப் பத்து லட்சம் கொடுக்க வேண்டும்?

குழப்பத்துடன். "என்ன" என்று கேட்பதற்காக ஓர் எட்டு முன்னே வைத்தவள் சட்டென நின்றாள், ஏனெனில். ஆண்டியப்பனுக்கு மேல் அதிகமாக அருந்ததி கத்தினாள்,

"ஏய். அவ்வளவு பணம் உனக்கு எதற்கடா. நான் தருவது? சின்னப்பயலின் நிச்சயத்தைத் தடுக்க. மாப்பிள்ளையைக் குடிக்க வைத்துக் கொஞ்சம் பெரிதாக ஏதாவது செய் என்றால். அவரையே போலீசில் மாட்டி வைத்துவிட்டு வந்து. பணம் வேறு கேட்கிறாயே,! அடி பட்டவன் செத்தால் கொலைக் கேஸ் ஆகுமேடா,! இந்த மாதிரி முட்டாள் வேலை செய்துவிட்டு. என் மூஞ்சியிலே முழிக்க உனக்கு

வெட்கமாயில்லை?” என்றது     அவள் தாயாரின் குரலேதான்,!

அப்படியானால்

யாமினி மயக்கம் போட்டுக் கீழே விழாத குறைதான்,

செய்வது அறியாமல் வெளிச் சுவரில் சாய்ந்து அவள் அப்படியே நிற்க. இப்போது ஆண்டியப்பன் பேசினான், “ஏ கிழவி. ராத்திரி முழுக்கத் தம்பிக்காரன் திரும்பி வராமல் ஏதாவது பண்ணச் சொன்னாயே மறந்திட்டியா? போலீஸ் கேசு ஆவாம. ராத்திரி முழுக்க எவனாவது கிடப்பானா? அந்தக் கிண்டனைக் கையைக் காலைக் கட்டியா. அடைச்சு வைக்க முடியும்?

“நான் என்னமோ. லேசாத்தான் மொதினேன், ஆள் பூட்டான்னாக்க. அவன் விதி முடிஞ்சு போச்சு,! அதுக்கு      ”

“ஏய். அப்போ நீதான் மோதினாயா?” என்று. ஆத்திரமாகக் கேட்டாள் அருந்ததி,

“உன் மாப்பிள்ளைதான் ஓட்டினதா அவனே சொல்லுகிறான், நீ பிளேட்டை மாத்ததாதே,! இப்ப அந்த நிச்சயம் . அத்தோட கல்யாணம் அல்லாம் நின்று போச்சா. இல்லியா? அதுக்காகத்தானே. என் கிட்டே டீல் வைத்தே, கொஞ்சம் கொஞ்சமாக அவங்களைப் பிரிச்சு. கடைசியிலே திரும்பத் தலை தூக்க முடியாத அளவுக்கு. வெட்டி விட்டிறணும்னு சொன்னே, அதே போலக் கலியாணம் முறிஞ்சு போயிட்டுது, உன் பிளான் வெற்றி,! பேசின தொகை யோட. கூட ரெண்டு லட்சம் போட்டுப் பன்னிரண்டாத் தா, பணமா இல்லைன்னா. நகையைக் கொடு உருக்கிக் கிடறேன்,! ... “

கடவுளே,! யாமினிக்கு இப்போது எல்லாமே புரிந்தது,

மைத்துனனின் திருமண ஏற்பாடுகளை முதலில் இருந்தே கெடுத்துக் கொண்டிருந்தவள். அவளுடைய சொந்தத் தாயே,

இந்த அனுபமாவோடான திருமணத்தை முன்போல இலகுவாக. அதே சமயம் சத்தமின்றிக் கலைக்க முடியாது என்று. அவள் அன்னைக்குப் புரிந்து போய்விடட்டது,

இந்தத் திருமணம் நடந்தால். மகள் வீட்டுப் பணத்தை. அவளது பங்கு மட்டுமின்றி முழுவதாகத் தன் பிடிக்குள் கொண்டு வரும் கனவுகள் தவிடுபொடி என்று உணர்ந்து. மாற்று வழி

கண்டுபிடித்திருக்கிறாள்,

மகேந்திரனுக்குப் பாதுகாவலனாக நித்திலன் ஏற்பாடு செய்திருந்த ஆண்டியப்பனையே. பெரும் தொகை தருவதாகச் சொல்லி  விலைக்கு வாங்கிவிட்டாள்,

புதுப் பெண் வீட்டோடு. திருமணம் பற்றிய சிறு சிறு சந்திப்புகள். சம்பிரதாயங்களின்போது. தன் கைக்கூலி ஆகிவிட்ட உதவியாள் மூலமாக. மருமகனை அளவு மீறிக் குடிக்க ஏற்பாடு செய்து. அங்கே என்ன நடந்தாலும். இடையிலே விட்டுவிட்டு. நித்திலனும் வந்துவிடுமாறு. அழைக்க வைத்திருக்கிறாள்,

நித்திலனும் அதே போல வந்து வந்து. இப்போது. திருமணமே உடைகிற நிலைக்குக் கொண்டு வந்துவிட்டாள்,!

கடவுளே,! அப்படிய ஆகிவிட்டதே,!

பாவம். மைத்துனன் எவ்வளவு நல்ல மனிதன்,!

அனுபமாவைப் பற்றிப் பேசும்போது. அவன் முகத்தின் பிரகாசம். யாமினிக்கு நினைவு வந்தது,

அத்தகைய அன்பு அழிய அவள் காரணம் ஆவதா?

தாய் சொல்லைக் கேட்டதற்கு. சும்மாவே. அலை மேல் துரும்பாக. அவளது வாழ்வு அல்லாடுவது போதாதா? இந்தப் பாவம் வேறு ஏற்பதா?

இதைச் சீர் செய்வதற்கு. அவள் ஏதாவது செய்ய வேண்டுமே,!

சத்தமின்றி யாமினி திரும்பிச் சென்று காரில் ஏறிக் கொண்டாள்,

என்ன செய்வது என்று தீவிரமாக யோசித்தாள்,

இப்போது. உண்மை அறிய வேண்டியது அனுபமாவே என்று உணர்ந்து செல்லை எடுத்தாள், அனுபமா கிடைக்கவில்லை, உடனே. அவளுடைய தம்பி செல்லில் முயன்றாள், அவன்தானே. அனுபமாவை அழைத்துச் சென்னறவன்?

சற்றும் எதிர்பாராத விதமாகத் தாய் வீடு சென்றபோது அவள் அறிந்ததை. அனுபமாவிடம் மறைக்காமல். மான ரோஷம் பாராமல் தெரிவித்தாள்,

அறிந்த எல்லாம் சொல்லிவிட்டு. “என் கொழுந்தனார் மேல் தப்பில்லை. அனுபமா, என் அம்மா. என் கணவரின் பலவீனத்தைப் பயன்படுத்தி. இந்தத் திருமணத்தைத் தடுக்கத் தீவிரமாக முயற்சித்திருக்கிறார்கள், அவர்களை மன்னித்து...ஊகூம்,. என்னாலேயே அவர்களை மன்னிக்க முடியாது, ஆனால். தயவு பண்ணி... வந்து...முமுடிந்தால். என்னை மன்னிப்பாயா? என் தாயாரின் திட்டம் தெரியாமல். சின்னவர் உன்னைச் சந்திப்பதாக இருந்த சமயங்களை நானே என் அம்மாவிடம் சொல்லி அவர்களது திட்டங்கள் ஜயிக்க வழி வகுத்துவிட்டேன், ப்ளீஸ் அனுபமா. அவள்களின் சூழ்ச்சி பலிக்கக் கூடாது, நித்திலன் தம்பி மேல் கோபத்தை விட்டுவிடு, , அரும்பாடு பட்டு என் கணவரை மீட்க. இயன்றவரை ஏற்பாடு செய்துவிட்டு வந்திருக்கிறார், அவர் வாழ்வு அழிய நான் காரணம் ஆகக் கூடாது,” என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்,

முகத்தில் புன்னகை மலர. “யார் வாழ்வும் அழியாது. அக்கா, திருமணம் நடக்கும்,! அங்கே எல்லோரிடமும் சொல்லி. மண்டபத்துக்கு அழைத்து வாருங்கள், மணி நாலாகப் போகிறது, இன்றையத் தூக்கத்தை அடியோடு தியாகம் செய்துவிட்டு உடனே கிளம்பி வந்தால். மாப்பிள்ளை அழைப்பு. நலுங்கு எல்லாமே. நமக்குள் செய்து விடலாம்,!” என்றாள் அனுபமா. குதூகலக் குரலில்,

“நிநிஜமாகவா சொல்கிறாய்? ஆனால் நான் எப்படி “ என்று தடுமாறினாள் மற்றவள்,

“சத்தியம். அக்கா, சொல்கிறேன், எல்லோரும் கட்டாயம் வாருங்கள், நீங்களும் வரவேண்டும், இப்போதுதான். உங்கள் கணவரை மீட்க ஆதாரம் கிடைத்துவிட்டதே, நித்திகூட இங்கேதான் இருக்கிறார், பேசுங்கள்,” என்று. செல்ஃபோனை அவனிடம் கொடுத்தாள் அனுபமா,

“தம்பீ ,!” என்று அழுதாள் யாமினி,

அன்றைய நிகழ்ச்சிகளுக்கு. அவள் இதுவரை அழாதிருந்ததுதான் அதிசயம் என்று எண்ணியபடி. “முதலில் ஒன்று அண்ணி, இனி நீங்கள் எதற்கெடுத்தாலும் இப்படி அழக் கூடாது, உண்மையில். நீங்கள் சந்தோஷப்பட ஒரு முக்கிய விஷயம் கூட இருக்கிறது, எல்லாமே குடியினால் வந்த துன்பம் என்று உணர்ந்து.

இனிக் குடிப்பதில்லை என்று. அண்ணன் சத்தியம் செய்திருக்கிறான், இது குடிகாரன் சத்தியமில்லை, அவனுக்கே இந்த அளவு தன்னிலை தெரியாமல் இருந்தது. பெரிய அதிர்ச்சி,! அவன் மேல். அம்மா மேல். பூபால் மேல் ப்ராமிஸ் பண்ணியிருக்கிறானாம், இப்போதுதான் காவல் அதிகாரி சொன்னார், முக்கியமாக. மருத்துவமனையில் அடிபட்டவன் நன்றாக நினைவு வந்து. மீசைக்காரன்தான் காரை ஏற்றியதாகச் சொல்லிவிட்டானாம், இப்போது. வீட்டில் எல்லோரையும் கிளப்பிக்கொண்டு மண்டபத்துக்கு வருவது. உங்கள் பொறுப்பு,! நானும். கிளம்பும்படிப் பாட்டியிடம் ஒரு வார்த்தை சொல்லி விடுகிறேன்,” என்று பேச்சை முடித்தான்,

மற்ற இருவரையும் நோக்கி. “இப்போதுதான் விஷயம் தெளிவாகப் புரிகிறது, மருத்துவ மனையில் வைத்து சந்தேகம் வந்தது என்றேனே. அது இதுதான், ஆனால். அது பற்றி விரிவாக யோசிக்க அப்போதும் நேரமிருக்கவில்லை, எதையும் விலாவாரியாகப் பேசிக் கொண்டிருக்க இப்போதும் நேரமில்லை,

“ஆனால். ஒன்றே ஒன்று,! அவர்களது சதிக்கு ஏற்றபடி. நானும் அதே போல நடந்து நடந்து. உன் மனம் உடைகிற நிலை வருமளவு விட்டுவிட்டேனே, சாரிடாம்மா,! “ என்று முடித்தான் நித்திலன்,

“போதும். அத்தான், நீங்களே சொன்ன மாதிரி. வெறும் பேச்சுக்கு இப்போது நேரமில்லை, ஓடிஓடி மண்டபத்துக்குப் போய். அம்மா வாயை மூடி. திருமண ஏற்பாடுகளைத் தொடரப் பண்ண வேணும், நல்லவேளை அதிகாலைத் திருமணமில்லை, நீங்கள் இருவரும் ஓர்... “ என்றவாறு மணியைப் பார்த்து. “அலாரம் வைத்துக்கொண்டு ஓர் இரண்டு மணி நேரமாவது தூங்கி எழுந்தால்தான் தாலி கட்டும் மந்திரம் சொல்லும்போது தூங்கிவிழாமல் இருப்பீர்கள் என்று. எனக்குத் தோன்றுகிறது, கிளம்புங்கள், அவரவர் மண்டபத்துக்குப் போ “ என்று தொடர்ந்தவன். மற்ற

இருவரின் பார்வைப் பரிமாற்றம் கண்டு. தோளைக் குலுக்கினான்,

“சரிசரி. எல்லாம் புரிகிறது, ராத்திரித் தூங்கிவிடாமல் இருக்க. மதியம் தொல்லையின்றி உறங்கவும் ஏற்பாடு செய்கிறேன், கிளம்பலாமா?” என்று நகையொலியாகக் கேட்டான் கண்ணன்,

“விரட்டுவதிலேயே இருக்கிறாயே. மைத்துனா,! இதோ கிளம்புகிறோம், ஆனால். அதற்குமுன். ஒரே ஒரு நிமிஷம் கண்ணை மூடிக் கொள்கிறாயா? இது கனவில்லை என்று உறுதிப்படுத்திக் கொள்ள ஒரே ஒரு “ என்று நித்திலன் சொல்லி முடிக்குமுன். தம்பி காணாமல் போயிருந்தான்,

நித்திலனின் இறுகிய அணைப்பில் அனுபமா சங்கமம் ஆகியிருந்தாள்,!